உதயன்
24 பக்கங்கள்
யாழ். - 20/=
வன்னி - 20/=
சுடர்: 29 கதிர்: 294 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆவணி 31, செவ்வாய் 16.09.2014
stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily



வென்றது மும்பை இந்தியன்ஸ்

பக்கம் 18

தெளிவான வானிலை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று km/h
ஈரப்பதம்: 48%
காற்றமுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04

# சுன்னாகம் கழிவு எண்ணெயால் நிலத்தடி நீர் பெருமளவில் நாசம்

## காங்கேசன்துறை வரையில் பாதிப்பைத் தடுக்க முடியாது; மலட்டுத்தன்மை, புற்றுநோய் அதிகரிக்கும் ஆபத்தும் வலுக்கிறது



யாழ்ப்பாணம், செப். 16

சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்தில் இருந்து நிலத்துக்கடியில் கசிந்து குடிதண்ணீருடன் கலந்த கழிவு எண்ணெயால் காங்கேசன்துறை வரையிலான குடிதண்ணீர் கிணறுகள் பாதிக்கப்படப்போகின்றன. இந்தப் பிரச்சினை தொடர்பில் ஆராய்ந்த குழு இதனைக் கண்டறிந்துள்ளது. சுன்னாகம் முதல் வடக்கே காங்கேசன்துறை வரையிலான குடிதண்ணீர் படுக்கையை இந்தக் கழிவு எண்ணெய் நாசப்படுத்துவதைத் தடுக்க முடியாது என்று வல்லுநர்கள் தெரிவிக்கிறார்கள். நிலக்கீழ் தண்ணீரில் மேற்படையாகப் படிந்திருக்கும் கழிவு எண்ணெய் அப்படியே நகர்ந்து கடல் நீருடன் போய்க் கலந்தால் தவிர அந்தக் குடிதண்ணீர் படுக்கையைச் சுத்திகரிக்க முடியாது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அத்தோடு எண்ணெய் படிவு கலந்த தண்ணீரைப் பயன்படுத்துவதால் மக்களுக்கு நீண்டகால நோக்கில் புற்றுநோய் பாதிப்பையும் தோல் வியாதிகளையும் ஏற்படுத்தக்கூடும் என்றும் அஞ்சப்படுகிறது. இந்தத் தண்ணீரால் மலட்டுத் தன்மை அதிகரிக்கும் அபாயமும் உண்டு என்ற அச்சமும் ஏற்பட்டுள்ளது. எனினும் இவற்றை ஆதாரபூர்வமாக நிரூபிக்க மேலதிக ஆய்வுகளும் சோதனைகளும் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தப் பகுதி மக்கள் குடிதண்ணீரை அதற்குரிய முறையில் வடிகட்டிப் பயன்படுத்துவது அவசியம் என்றும் வலியுறுத்தப்படுகின்றது. இதுவரையில் 5 கிராம சேவையாளர் பிரிவில் பாதிப்பு உணரப்பட்டுள்ளது. அத்துடன் சுன்

22 ஆம் பக்கம் பார்க்க

## தேர்தல் சட்டமீறல்: நேற்று மட்டும் 15 முறைப்பாடு

CaFFE

கொழும்பு, செப்.16

சட்டவிரோத தேர்தல் பரப்புரை நடவடிக்கைகள் ஒரு நாளில் மாத்திரம் 12 ஆகப் பதிவாகியுள்ளது. மொனராகலை மாவட்டத்தில் மாத்திரம் அரசு சாராத கட்சிகளின் 46 அலுவலகங்கள் இதுவரை தாக்கப்பட்டுள்ளன என்று முறைப்பாடாகியுள்ளது என்று கபே தெரிவித்துள்ளது.

இதுவரையான காலப்பகுதியில் சட்டவிரோத தேர்தல் பரப்புரைகள் அதிகளவில் பதிவாகியுள்ளன. அவ்வாறு 232 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. சட்டவிரோத தேர்தல் பரப்புரைகளுடன் இணைந்து சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தமை தொடர்பில் 56 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

அடித்துத் துன்புறுத்தல், அச்சுறுத்தல் என 18 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்று நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கமான கபே தெரிவித்துள்ளது. (ஐ-4)

## தேவையற்றவற்றைச் செய்து குழப்பம் ஏற்படுத்த வேண்டாம்

### வடக்கு மாகாண சபைக்கு மாவை அறிவுரை



யாழ்ப்பாணம், செப்.16

வடக்கு மாகாணசபை தேவையில்லாத விடயங்களைச் செய்து குழப்பங்களை ஏற்படுத்த வேண்டாம் இவ்வாறு அறிவுறுத்தியுள்ளார் இலங்கை தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் மாவை.சேனாதிராசா. அத்துடன் சர்வதேச - இராஜதந்திர விடயங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுகையாளும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மக்களை இனப்படு

22 ஆம் பக்கம் பார்க்க

## 15 நாளில் 36 பேருக்கு தீவிரமாகிறது டெங்கு

யாழ்ப்பாணம், செப்.16

வடக்கு மாகாணத்தில் இந்த மாதம் முதல் 15 நாள்களில் 36 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். யாழ்ப்பாணத்திலேயே அதிகளவானோர் தொற்றுக்கு உள்ளாகி வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று வடமாகாண சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

22 ஆம் பக்கம் பார்க்க

## 3 பீடங்களைச் சேர்ந்தோர் டெங்கு தொற்றால் பாதிப்பு

### யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில்

யாழ்ப்பாணம், செப் 16

யாழ்.பல்கலைக்கழகத்தில் கலை, வர்த்தகம் மற்றும் முகாமைத்துவ பீடங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு டெங்கு தொற்றியுள்ளமை கண்டறியப்பட்டதால் அந்தப் பீடங்கள் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளன. 22 ஆம் பக்கம் பார்க்க

## நேசநாடு என்றபோதும் நம்பமுடியாது சீனாவை

### சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு



கொழும்பு, செப்.16

நேச நாடான சீனாவையும் நம்ப முடியாது என்று தெரிவித்துள்ள அமைச்சர் சம்பிக்க ரணவக்க, நாட்டின் மின் நிலையங்களை வெளிநாடுகளிடம் தாரைவார்ப்பது ஆபத்தானது என்றும் தெரிவித்துள்ளார்.

சீன ஜனாதிபதி இலங்கைக்கு வரவுள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

விரிவான செய்தி 9 ஆம் பக்கத்தில்

## அரசுடன் பலசேனாவுக்கு எந்தத் தொடர்புமில்லை

### கிழக்கு கட்டளைத் தளபதி இப்படிக் கூறுகின்றார்

திருகோணமலை, செப்.16

அரசுக்கும் பொது பல சேனாவுக்கும் இடையில் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்று தெரிவித்துள்ளார் கிழக்கு மாகாண இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் லால் பெரேரா.

அரசின் மீது முஸ்லிம் மக்கள் எந்த விதமான சந்தேகங்களும் அச்சமும் கொள்ளத்தேவையில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை திருக்கோவில் பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டபோது, ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது -

"முஸ்லிம் மக்கள் தெளிவு பெறும் வகையில் அண்மையில் பாதுகாப்பு செயலாளர் ஊடகங்கள் மூலமாக, விரி

22 ஆம் பக்கம் பார்க்க

## உருக்குலைந்த நிலையில் கரையொதுங்கிய சடலம்

மன்னார், செப்.16

மன்னார் சௌத்பார் கடற்கரையில் நேற்றுக் காலை உடைகள் இன்றி ஆண் ஒருவரின் சடலம் கரையோதுங்கியுள்ளது என்று மன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர். சௌத்பார் கடற்கரையில் இருந்து சுமார் 3 கிலோ மீற்றர் தொலைவில் குறித்த சடலம் கரை ஒதுங்கியுள்ளது.

குறித்த சடலத்தை கண்ட கடற்படையினர் மன்னார் பொலிஸாருக்கு தகவல் வழங்கினர். அதையடுத்து அங்கு சென்ற மன்னார் பொலிஸார் குறித்த சடலத்தை மீட்டுள்ளனர்.

குறித்த சடலம் சுமார் 50 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவருடையது என தெரிய வந்துள்ளது. சடலத்தில் இரண்டு கை மற்றும் இரண்டு கால்களும் சிதைவடைந்த

22 ஆம் பக்கம் பார்க்க

## தம்புள்ளைப் பள்ளி மீது நள்ளிரவில் தாக்குதல்

சர்ச்சைக்குரிய தம்புள்ளை ஹைறியா ஜும்ஆ பள்ளி வாசல் மீது நேற்று நள்ளிரவு இனந்தெரியாத இருவர் குண்டுத் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

விரிவான செய்தி 9 ஆம் பக்கத்தில்

## 2015ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் எதிர்வரும் நவம்பர் மாதம் சமர்ப்பிக்கப்படும்?

கொழும்பு, செப்.16

2015ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் எதிர்வரும் நவம்பர் மாதம் 7ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட உள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. நிதி அமைச்சரும் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ இந்த வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்க உள்ளார். நிதி அமைச்சர் என்ற ரீதியில் தொடர்ச்சியாக பத்தாவது தடவையாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்க உள்ளார்.

22 ஆம் பக்கம் பார்க்க

## ஊவா மாகாண தேர்தலை முன்னிட்டு கலந்துரையாடல்

கொழும்பு, செப்.16
ஊவா மாகாணத் தேர்தலை முன்னிட்டு இலங்கை மனித வுரிமைகள் ஆணைக்குழு மற்றும் தேர்தல் கண்காணிப்பு இயக்கங்களுக்கு இடையிலான விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று இடம் பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
இந்த விசேட கலந்துரையாடலில் தேர்தல் மோசடிகள் மற்றும் சட்டமீறல்கள் தொடர்பில் பேசப்பட்டது என்றும், மனித வுரிமைகள் ஆணைக்குழுவால் வழங்கப்பட்டுள்ள பொதுவான தேர்தல் பரிந்துரைகள் குறித்து ஆராயப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.(ற)



கொழும்பு, புறக்கோட்டையில் அமைந்துள்ள மெனிங் பொதுச்சந்தைக்கு நேற்றுச் சென்றிருந்த பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, அங்கு நிலவும் குறைநிறைகளை கேட்டறிந்தார்.(ற)

## நேபாள அமைச்சர் இலங்கை வருகிறார்

கொழும்பு, செப்.16
நேபாள வெளியுறவு அமைச்சர் மஹேந்திர பகதூர் பாண்டே இன்று இலங்கைக்கு வரவுள்ளார்.
எதிர்வரும் நவம்பர் மாதம் 22ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை அந்த நாட்டின் தலைநகர் காத்மண்டுவில் நடைபெறவுள்ள 18ஆவது தெற்காசிய ஒத்துழைப்பு நாடுகளின் தலைவர்களின் அமர்வுக்கான உத்தியோகபூர்வ அழைப்பை விடுப்பதற்காகவே அவர் இலங்கை வருகிறார்.
நேபாள பிரதமர் சுசில் கொய்ராலாவின் விசேட பிரதிநிதியாகவே பகதூர் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## மரண வீட்டில் குண்டுவெடிப்பு: நால்வர் காயம்

கொழும்பு, செப்.16
நொச்சியாகம பிரதேச மரண வீடொன்றில், நேற்று இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் நால்வர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.
குறித்த மரண வீட்டுக்கு வெளியே, உணவு சமைத்துக்கொண்டிருந்த போதே இந்த குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. உணவு சமைப்பதற்காக அடுப்பு மூட்டப்பட்ட போதே இந்த வெடிப்பு இடம்பெற்றது என்றும், அடுப்பு மூட்டப்பட்ட இடத்தில் புதைக்கப்பட்டிருந்த குண்டொன்றே இவ்வாறு வெடித்து இருக்கலாம் என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ற)

## ரணிலின் பாதுகாப்பு பிரிவினர் காயம்

கொழும்பு, செப்.16
எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் பாதுகாப்பு பொலிஸார் பயணித்த ஜீப் வாகனம் ஒன்று விபத்துக்குள்ளானதில் நான்கு பொலிஸார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
பதுளை - ஸ்பிரிங்வெலி தோட்டப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இவ்விபத்து இடம் பெற்றது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். ஜீப் வீதியை விட்டு விலகி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. (ற)

# தேர்தல் விதி முறையை மீறுகின்றார் ஜனாதிபதி

### குற்றஞ்சாட்டுகின்றார் ரில்வின் சில்வா

கொழும்பு, செப்.16
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தேர்தல் விதி மீறல்களில் ஈடுபட்டு வருகின்றார் என்று குற்றஞ்சாட்டியுள்ளார் ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா.



ஊவாவில் நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தல்களில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பல்வேறு தேர்தல் விதி மீறல்களில் ஈடுபட்டு வருகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.
"இவ்வாறு ஆளும் கட்சி தேர்தல் விதி மீறல்களில் ஈடுபடுவதற்கு ஜனாதிபதியே காரணம். ஜனாதிபதியே தேர்தல் வன்முறைகள் மற்றும் தேர்தல் விதி மீறல்களில் அதிகம் ஈடுபட்டு வருகின்றார். ஜனாதிபதி தேர்தல் நடைபெறுவதைப் போன்று, மாகாணசபைத் தேர்தலில் பரப்புரையில் ஈடுபட்டு வருகின்றார்.
ஊவா மாகாணத்தில் அதிக எண்ணிக்கையிலான தேவையற்ற திறப்பு விழாக்கள் மற்றும் ஜனாதிபதி தலைமையிலான நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. பொலிஸாரால் ஜனாதிபதிக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாது. அதனால் பொலிஸார் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.
அரச வளங்களும், அரச அதிகாரிகளும் மிகவும் மோசமாக துஷ்பிரயோகம் செய்யப்பட்டு வருகின்றது. அரசு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்திருந்தால் இவ்வளவு பீதியடைய வேண்டியதில்லை. ஆயினும் இந்த ஊவா மாகாண சபைத் தேர்தலில் அரசு பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றுக்கொள்ளாது"- என்று தெரிவித்துள்ளார். (ற)

## ஆள்கடத்தலை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்

### ஆந்திர முதலமைச்சர் தெரிவிப்பு

சென்னை, செப்.16
இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்கள், இந்தியா ஊடாக ஆஸ்திரேலியாவுக்கு செல்வதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்தியாவின் ஆந்திரப் பிரதேச துணை முதலமைச்சரும் உள்துறை அமைச்சருமான என். சினராஜப்பா தெரிவித்துள்ளார்.
இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்களை இந்தியாவுக்கு அனுப்புவதற்காக பாகிஸ்தான் கடற்பரப்பை மனித கடத்தல்காரர்கள் பயன்படுத்தி வருகின்றனர் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
மனித கடத்தல்களை தடுப்பதற்காக இந்திய கரையோரப் பாதுகாப்பு அதிகரிக்கப்படவுள்ளது என்றும் அதற்காக கரையோரங்களில் கடற்படை முகாம்களை நிறுவவுள்ளன என்றும் சினராஜப்பா மேலும் கூறியுள்ளார். (ற)

## ஜனாதிபதி ஆணைக்குழுவை சந்திப்பார் சீன ஜனாதிபதி

யாழ்ப்பாணம், செப். 14
நாளை செவ்வாய்க் கிழமை இலங்கைக்கு வருகை தரும் சீன ஜனாதிபதி, காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர்களைச் சந்திக்கக் கூடும் என்று தெரிவிக்கப்படுகின்றது.
28 வருடங்களின் பின்னர் சீன ஜனாதிபதி ஒருவர் நாளை இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். இவரது இந்தப் பயணத்தின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட பல்வேறு அரசியல் தலைவர்களையும் அவர் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.
அதன்போதே காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர்களையும் அவர் சந்திப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு கடந்த ஜூலை மாதம் 15 ஆம் திகதி, ஜனாதிபதியால் விசேட வர்த்த மானி அறிவித்தலின் ஊடாக போர்க் குற்றங்கள் தொடர்பிலும் விசாரணை மேற்கொள்ளும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.
அத்துடன் இந்த ஆணைக்குழுவுக்கு 5 சர்வதேச நிபுணர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். சீனாவைச் சேர்ந்த ஒருவரையும் நிபுணர் குழுவில் இணைப்பதற்கு முதலில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் சீனாவைச் சேர்ந்த எவரும் இணைத்துக் கொள்ளப்படவில்லை.
இந்தநிலையிலேயே இலங்கை வரும் சீன ஜனாதிபதி, காணாமற் போனோர் விசாரணைக் குழுவைச் சந்திக்கவுள்ளார்.(ற-5)

## இலங்கை மீனவர்களுக்குச் சிறை

தமிழக ஆந்திர கடல் எல்லையில் கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் 10 பேரும் புழல் மத்திய சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். எழும்பூர் நீதிமன்றத்தில் குறித்த 10 மீனவர்களும் முற்படுத்தப்பட்ட போது இதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்று இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.
குறித்த மீனவர்களின் இரு படகுகளையும் தமிழக அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.
இதேவேளை, தமிழக சிறைகளில் 15 இலங்கை மீனவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று கடற்றொழில் அமைச்சு குறிப்பிட்டுள்ளது. அத்துடன் தற்போது இலங்கை மீனவர்களின் 15 படகுகளும் தமிழக அதிகாரிகளின் பொறுப்பில் உள்ளன என்றும் கடற்றொழில் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ற)

# பொதுச் சின்னத்தில் போட்டியிடுமாறு ரணிலுக்கு அழுத்தம்

கொழும்பு, செப்.16
நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவுக்கு, அரசில் உள்ள அமைச்சர்கள் சிலர் அழுத்தம் கொடுத்து வருகின்றனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
தேர்தலின் போது பொதுக் கூட்டணி மற்றும் பொதுச் சின்னத்தில் போட்டியிடுமாறே அவர்கள் ரணிலுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றனர் என்று கூறப்படுகின்றது.
அரசில் உள்ள அமைச்சர்களில், ராஜபக்ஷவினருக்கு எதிரான அமைச்சர்களுடன் எதிரணி அரசியல்கட்சிகள், வெகுஜன அமைப்புகள் சிலவும் இணைந்து இந்தக் கோரிக்கையை ரணிலிடம் விடுத்துள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
சஜித் பிரேமதாசவை பிரதித் தலைவராக நியமிக்கும் யோசனை முன்வைக்கப்படும் எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறும் செயற் குழுக் கூட்டத்திலேயே மேற் படி யோசனையையும் நிறைவேற்றி கொள்ளுமாறும் அவர்கள் கோரியுள்ளனர். விரிவான எதிர்க்கட்சிகளின் கூட்டணியை சஜித் பிரேமதாச விரும்பவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளதை அடுத்து ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க இணங்கிய அரசு மற்றும் எதிர்கட்சிகளில் உள்ளவர்கள் குழப்பமடைந்துள்ளனர்.
அத்துடன் பொதுக் கூட்டணி தொடர்பான பேச்சுக்களும் இடைநிறுத்தப்பட்டுள்ளன. ஊவா தேர்தல் முடிந்தவுடன் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைவதாக அரசில் உள்ள அமைச்சர் ஒருவர் இணக்கம் வெளியிட்டிருந்தார். ஐக்கிய தேசியக் கட்சியில் தற்போது ஏற்பட்டுள்ள தலைமைத்துவ நெருக்கடி காரணமாக அவரும் தனது எண்ணத்தை மாற்றிக்கொண்டு விட்டார் என்றும் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)



பக்கங்கள்: இருபத்துநான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 20/-

கிளாசிக்

சுடர் : 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆவணி 31 செவ்வாய் (16.09.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 294

# இந்திய மீனவர் அத்துமீறல் குறித்து

# கொழும்பு அரசுடன் விரைவில் பேச்சு

## வடக்கு மாகாண முதலமைச்சர் உறுதியளிப்பு

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 16

**இந்திய மீனவர்களது அத்துமீறல் தொடர்பில் விரைவில் மத்திய அரசுடன் பேச்சு நடத்தவுள்ளதாக வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் உறுதியளித்துள்ளார்.**


**வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையம் மற்றும் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் ஆகியவற்றைச் சேர்ந்த குழுவினர் நேற்று முதலமைச்சரை அவரது இல்லத்தில் சந்தித்து மீனவர்களின் பிரச்சினை தொடர்பில் எடுத்துக் கூறியபோதே முதலமைச்சர் இதனைத் தெரிவித்தார்.**

அவர் இது குறித்து மேலும் தெரிவிக்கையில்,

இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பில் என்னிடமும் முறைப்பாடுகள் தரப்பட்டுள்ளன. இந்தப் பிரச்சினைக்கு இலங்கை மத்திய அரசுடன் பேச்சு நடத்தவுள்ளோம். அத்துடன் தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறலும் தவிர்க்கப்படவேண்டும்.

மீனவர்களின் பிரச்சினைகளுக்காகத் தெரிவு செய்யப்பட

(22ஆம் பக்கம் பார்க்க)



## யாழ்ப்பாணத்தில் இதுவரையில் 14 இடர்ச் சம்பவங்கள்

யாழ்ப்பாணம், செப். 16

யாழ்.மாவட்டத்தில் இதுவரையில் 14 இடர் சம்பவங்கள் பதிவாகியுள்ளதுடன், இதன் காரணமாக ஒருவர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் பாதிக்கப்பட்டவர்களுக்குரிய உதவிகள் மற்றும் தணிப்பு நடவடிக்கைகள் என்பன உடனடியாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அனர்த்தப் பாதிப்புக்களால் யாழ்.மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களே அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடும் காற்றுக் காரணமாகப் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் பொலிகண்டி பிர

(22ஆம் பக்கம் பார்க்க)

## பஸ்ஸில் இருந்து தவறி விழுந்து நடத்துநர் சாவு

### முறிகண்டியில் நேற்றுச் சம்பவம்

முல்லைத்தீவு, செப். 16

முல்லைத்தீவு திருமுறிகண்டியில் இடம்பெற்ற பஸ் விபத்தில் நடத்துநர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் திருமுறிகண்டிப் பிள்ளையார் ஆலய வளைவில் இடம் பெற்றுள்ளது.

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி இந்தத் தனியார் பஸ் பயணித்துக் கொண்டிருந்தபோது ஏ-9 சாலையில் திருமுறிகண்டிப் பிள்ளையார் ஆலய வளைவில் நடத்துநர் தவறி வீழ்ந்து பஸ்ஸின் சில்லுக்குள் நெரியுண்டு உயிரிழந்துள்ளார்.

வவுனியா கீச்சிராங்குளத்தைச் சேர்ந்த சந்திரன் தர்சன் (வயது-19) என்ற இளம் நடத்துநரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவ இடத்துக்கு விரைந்த மாங்குளம் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன், நடத்துநரின் சடலம் தற்போது கிளிநொச்சி பொது மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

(த-18-426)

## காற்றால் தத்தளிக்கும் மீனவர்களையும் கைது செய்கிறது இலங்கைக் கடற்படை

### இராமேஸ்வரம் மீனவர்கள் குற்றச்சாட்டு

இராமேஸ்வரம்.செப்.16

காற்றுடன் போராடி உயிர் ஆபத்தான நிலையில் கடலில் தத்தளிக்கும் மீனவர்களையும் காப்பாற்றுவதாகக் கூறி அவர்களையும் அவர்களது படகுகளையும் கைது செய்து வருகின்றது இலங்கைக் கடற்படை.

இதற்காக அவர்கள் கச்சதீவுப் பகுதியில் பெரிய கப்பல்களை நிறுத்திக் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர் என்று இராமேஸ்வரம் மீனவர் சங்கத் தலைவர் பி.யேசுராஜா குற்றஞ்சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இராமேஸ்வரம் மீனவர்கள் தமது பாரம்பரிய பிரதேசமான கச்சதீவுப் பகுதியில் மீன்பிடிக்கப்போகும்போது இலங்கைக் கடற்படை புதிதாகக் கப்பல்களை நிறுத்தி எல்லைகளைத் தாண்ட விடாமல் மீனவர்களைத் தாக்கி அவர்களது வலைகளையும் சேதப்படுத்தி வருகிறது.

தமிழக மீனவர்களின் வாழ்வாதாரம் இதனால் பாதிப்புற்றுள்ளது. எல்லை தாண்டும் படகையும் காற்றுத் திசையில் படகு மூழ்கிப் போனால் உயிருக்காகத் தத்தளிக்கும் மீனவர்களின் படகையும் கைது செய்கிறார்கள் இலங்கைக் கடற்படையினர்.

இந்த நிலைமை நீடித்தால் தமிழக மீனவர்களின் வாழ்வாதாரம் ஒட்டு மொத்தமாக அழிக்கப்படும். இலங்கை அரசு தமது மீனவர்களுடன் பேசிப் பிரச்சினை இல்லாமல் இந்திய மீனவர்களை மீன்பிடிக்கச் சிறிது காலத்துக்கு வழிவகை செய்தால் மீனவர்கள் நன்மையடைவர்.

இலங்கைக் கடற்படையினர் படகுகளை முட்டி மோதுவார்களா என்ற பயத்தில் நாளாந்தம் மீன்பிடிக்கச் செல்கிறார்கள் எமது மீனவர்கள். கடற்படையினரின் இந்த அச்சுறுத்தலால் படகுகளுக்குப் பெரும் நட்டம் ஏற்பட்டுள்ளது.

இலங்கை அரசு மனிதாபிமானமாக நடக்க வேண்டும். ஏனெனில் தமிழக மீனவர்கள் புதிதாக இழுவைப் படகு பயன்

(22ஆம் பக்கம் பார்க்க)

## வெட்கித் தலைகுனிய வேண்டும் மஹிந்தவுக்கு முண்டு கொடுக்கும் முஸ்லிம் அமைச்சர்கள்

### பள்ளி மீதான குண்டுவீச்சு தொடர்பில் கூட்டமைப்பு சீற்றம்

கொழும்பு, செப்.16

"தம்புள்ளையில் இருந்த காளி கோயிலை ஒருமாதிரி அங்கிருந்து தூக்கியது சிங்களப் பேரினவாதம். அங்கிருக்கும் பள்ளிவாசலையும் அகற்ற பேரினவாதம் பல தடவைகள் நடவடிக்கை எடுத்தது. அது கைகூடாமல் போகத் தற்போது அந்தப் பள்ளிவாசல் மீது குண்டுத்தாக்குதல் நடத்தி அதனை நிர்மூலமாக்கச் சிங்களப் பேரினவாதம் முயற்சித்துள்ளது. இதற்கு மஹிந்த அரச தரப்பினரும், இராணுவத்தினரும், பொலிஸாரும் ஒத்துழைப்பை வழங்கியுள்ளனர்."

- இவ்வாறு குற்றஞ்சாட்டினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி.

"பதவிகள், சுகபோகங்களுக்காக ஆசைப்பட்டு மஹிந்த அரசில் இணைந்து அதற்கு முண்டு கொடுக்கும் முஸ்லிம் அமைச்சர்கள், தமது இனத்திற்கு எதிராகத் தொடரும் சிங்களப் பேரினவாதிகளின் அராஜக நடவடிக்கைகளைப் பார்த்து வெட்கித் தலைகுனிய வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.



பள்ளிவாசலில் பட்டாசு தான் வெடித்தது என்று ஒரு முஸ்லிம் அமைச்சர் ஒருவர்

(22ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் போருக்குப் பின்னர் ரூ. 27,000 மில்லியன் முதலீடு

யாழ்ப்பாணம், செப். 16

போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் வடக்கு மாகாணத்தின் பல்வேறு துறைகளினூடான அபிவிருத்திக்கு 27 ஆயிரம் மில்லியன் ரூபா முதலீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி, சுகாதாரம், விவசாயம், உள்ளூராட்சி, உள்கட்டுமானம் ஆகிய துறைகளினூடாகவே அபிருத்தித் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் வடக்கில் அபிவிருத்தித் திட்டங்களுக்குக் கொழும்பு அரசினால் நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்த அபிவிருத்தி நிதி ஒதுக்கீடுகளில் பெரும்பாலானவை வெளிநாடுகளினால் வழங்கப்பட்ட உதவித் திட்டங்களிலேயே மேற்கொள்ளப்பட்டிருந்தன.

கல்வித் துறைக்கு 2009 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை 2 ஆயிரத்து

(22ஆம் பக்கம் பார்க்க)

**மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்**

# கல்வியுடன் கூடிய இறை சிந்தனையையும் மாணவர் ஒருங்கே கொண்டிருக்க வேண்டும்

யாழ்ப்பாணம், செப். 16

மாணவர்கள் தமது கல்வியை ஒழுக்கநெறி பிறழாது பெற்றுக் கொள்ள கல்வியுடன், இறை சிந்தனையையும் ஒருங்கே கொண்டிருக்கவேண்டும்.

இந்த இறை சிந்தனையை மாணவர்கள் மத்தியில் வளர்த்தெடுக்க கல்விக் கூடங்களும் மாணவர்களின் பெற்றோர்களும் ஒருங்கே முன்னின்று உழைக்க வேண்டும்.

இவ்வாறு நவாலி வடக்கு பெத்தனாச்சி நாச்சிமார் ஆலய பிரதம குரு சிவத் திரு. இளையதம்பி சபாரத்தினசிவம் தெரிவித்துள்ளார்.

சிறுவர்களுக்கான ஆன்மிக கல்வியும், இசையும் என்ற தொனிப்பொருளில் நவாலி ஹேமலதா ஞாபகார்த்த சனசமூக நிலையத்தில் நடந்த நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

இன்று எங்கு பார்த்தாலும் வன்புணர்வு, கொலை, பாலியல் முயற்சி, கற்பழிப்பு, தற்கொலை, சிறுவர் துஷ்பிரயோகம், கடத்தல் போன்ற சம்பவங்கள் குறித்த செய்திகள் ஊடகங்களில் தினமும் வெளியாகி வருகின்றன.

இந்த இழி நிலையான செயலை செய்வது யார்? எமது சமூகத்தில் பிறந்து முறையான கல்வியையும் முறையான இறை சக்தியையும் கொண்டிராத ஒரு தரப்பினரே இவ்வாறாகப் பாதகச் செயலை செய்கின்றனர்.

இவ்வாறான பாதகச் செயல் மூலம் இறுதியில் நீதிமன்றங்களின் ஊடாக சொல்லொண்ணா தண்டனைகளை அனுபவித்து வருகின்றனர்.

எனவே எமது நாட்டில் உள்ள பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர் முதல் அதிபர் வரை எமது மாணவர்களை கல்வி, விளையாட்டு, ஒழுக்கம், இறைதியானம், இசை போன்ற மனித நலச் செயற்பாடுகளில் முழுமையாக ஈடுபடுத்த அர்ப்பணிப் புடன் செயலாற்ற வேண்டும்.

இதேபோல பெற்றோர்களும் தமது பிள்ளைகளின் கல்வி ஒழுக்கம் என்பவை குறித்து அக்கறை செலுத்தி அவர்களுக்கு நல்வழி காட்ட வேண்டும். தினமும் தமது பிள்ளைகளின் செயற்பாடுகளைக் கண்காணித்து அவர்களது முன்னேற்றங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

ஒவ்வொரு மாணவனும் படிக்கும் காலங்களில் கல்வியுடன் இசை, நாடகம் மற்றும் கருவிகள் வாசிப்பதிலும், பத்திரிகை வாசித்தலிலும் அக்கறை செலுத்த வேண்டும்- என்றார். (த-50)

# கழிவுகளை வீதியோரங்களில் வீசுவதால் டெங்குத் தொற்று

## சுகாதார வைத்திய அதிகாரி எச்சரிக்கை

யாழ்ப்பாணம், செப் 16

வீட்டில் சேரும் கழிவுகள் மற்றும் வாகன உதிரிப்பாகங்களின் கழிவுகள் என்பவற்றை உரிய இடங்களில் போடாது வீதியோரங்களில் வீசுவதால் டெங்கு போன்ற தொற்று நோய்கள் ஏற்படக்கூடிய அபாயகரமான சூழல் ஏற்பட்டு வருவதாக கரெவட்டிப் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி எஸ். சுதோகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கரெவட்டிப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள வர்த்தக நிறுவனங்கள் தொழிற்சாலைகள் தனியார் நிறுவனங்கள், சந்தைகள் மற்றும் வீட்டுக் கழிவுகள் என்பவற்றை கொட்டுவதற்கு கரணவாய் மண்டான் பகுதியில் பொதுவான இடம் கரவெட்டிப் பிரதேச சபையால் அமைக்கப்பட்டு அதற்குப் பாதுகாப்பாகச் சுற்று மதிலும் அமைக்கப்பட்டுள்ளது. அங்கு சேரும் கழிவுகள் தினமும் தீயிட்டு எரிக்கப்படுகின்றன.

இவ்வாறான சூழ்நிலையில் சிலர் தமது வீடுகளில் சேரும் கழிவுகளையும், வாகன உதிரிப்பாகங்களையும் குறிப்பாக மோட்டார் சைக்கிளின் உதிரிப் பாகங்களின் கழிவுகள் என்பவற்றையும் வீதியோரங்களில் வீசி வருகின்றனர்.



மண்டான் வீதியின் இருமருங்கிலும் இந்த நிலை காணப்படுகின்றது.

இதனால் இத்தகைய கழிவுப் பொருள்களில் மழை நீர் தேங்கி நின்று டெங்கு நுளம்பு பெருகும் நிலை காணப்படுகின்றது.

எனவே பொதுமக்களும், தொழிற்சாலைகளும் தமது இருப்பிடங்களை மட்டுமல்ல ஏனைய சுற்றுப்புறச் சூழலையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்-என்றார். (த-108)

# யாழ். மாவட்ட செயலகத்தின் தொழிற் சந்தை ஒக்ரோபரில்

யாழ்ப்பாணம், செப் 16

மனித வலு வேலைவாய்ப்பு திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட செயலகம் நடத்தவிருக்கும் மாபெரும் தொழிற் சந்தை நிகழ்வு எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் இடம்பெறவுள்ளது.

எனவே வேலையற்றோராகப் பதிவு செய்யாது வேலை வாய்ப்பைத் தேடும் இளைஞர், யுவதிகள் தாங்கள் வசிக்கும் பிரதேச செயலகங்களில் கடமை புரியும் மனித வள அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் இம்மாத இறுதிக்குள் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. முன்னர் பதிவு செய்து இது வரை வேலை வாய்ப்பை பெற்றுக் கொள்ளாதவர்களும் தங்கள் பதிவைப் புதுப்பித்துக் கொள்ளுமாறு யாழ். மாவட்ட அரச அதிபர் அறிவித்துள்ளார். (து)

**வீடு வாடகைக்குண்டு**

கே.கே.எஸ்.வீதி, சுன்னாகத்தில் இணைந்த குளியலறை வசதிகள் உட்பட சகல அடிப்படை வசதிகளையும் 5 அறைகளையும் வாகனத்தரிப்பிட வசதியும் கொண்ட பெரியவீடு வாடகைக்குண்டு. அலுவலகப் பாவனைக்குப் பயன்படுத்துவதற்கு மிகவும் உகந்தது. (52298) (4.6.3)

தொ.பே: 077 712 6857/077 712 6859

# புற்று நோயாளர்களுக்கான கிளினிக் தெல்லிப்பழையில்

யாழ்ப்பாணம், செப் 16

யாழ்.போதனா வைத்திய சாலையில் இதுவரை காலமும் இயங்கிவந்த புற்று நோய்க்கான கிளினிக்குகள் இனிமேல் யாழ்ப்பாணத்தில் நடைபெறமாட்டாது. மேற்படி கிளினிக்குகள் யாவும் தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையில் நடைபெறும்.

வெள்ளிக்கிழமை நடைபெற்று வந்த மருத்துவர் கிருஷாந்தி ராஜசூரியரின் கிளினிக் ஒவ்வொரு வியாழக்கிழமையும், சனிக்கிழமைகளில் நடைபெற்று வந்த மருத்துவர் கவிதா இந்திரநாத்தின் கிளினிக் ஒவ்வொரு புதன்கிழமையும் நடைபெறும்.

எதிர்வரும் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை கிளினிக் வரவேண்டியவர்கள் நாளை மறுதினம் வியாழக்கிழமையும், 20 ஆம் திகதி சனிக்கிழமை கிளினிக் வரவேண்டியவர்கள் நாளை புதன்கிழமையும் தெல்லிப்பழை பாதை புற்றுநோய் வைத்தியசாலைக்கு வருகை தரவும்.

மேலதிக விளக்கம் தேவைப்படின் 021 2059 290 எனும் இலக்கத்தின் ஊடாக தொடர்பு கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (து)

**முதலாம் ஆண்டு நினைவுப்பொழிவு**

திருமதி **இரஞ்சிதமலர் யோகநாதன்**

(மந்துவில்–உபதபாலதிபர்)



மண்மகிழ 04.03.1968 — கண்நெகிழ 28.08.2013

திதி:அபரபக்க அட்டமி 16.09.2014

உயிரே! உமையிழந்து ஓராண்டு ஓடியதோ! உணர்வில் நிறைந்து–எங்கள்
உறவில் விளைந்த அன்பே! தவியாய்த் தவிக்க விட்டுத் தனிவழியே போனீரோ?
கண்ணீர் சொரிந்து உமது கடமைகளை எண்ணி நைந்து
போனவழி தெரியாமல் புலம்பினமே பாருமம்மா! நினைவுத்தடம் அழியாது!
நின் வதனம் கரையாது! நெஞ்சிற் சுமந்து உமது நீள் பணிகள் வென்றிடுவோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

மந்துவில் மேற்கு,
கொடிகாமம். (47276)(4.6.3) குடும்பத்தினர்.

## ஓய்வு பெற்ற அதிபருக்கு கௌரவம்

கல்விப் பணி, சமூகப்பணி, ஆன்மிகப் பணி ஆகிய முப்பணிகளை கடந்த 37 ஆண்டுகளாக முன்னெடுத்து சேவையிலிருந்து ஓய்வுபெற்ற சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபர் பிரம்மஸ்ரீ வரதராஜக் குருக்கள் ஸ்ரீகாந்தனின் பன்முக சேவையைப் பாராட்டி அவருக்கு 'சமூகசுடர்' என்ற கௌரவ உயர்பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

விக்ரோரியாக் கல்லூரியின் ஓய்வு நிலை அதிபர் பிரம்மஸ்ரீ வரதராஜக் குருக்கள் ஸ்ரீகாந்தனின் மணி விழாவும் ஸ்ரீகாந்தம் மலர் வெளியீடும் நேற்று முன் தினம் கல்லூரி முதல்வர்திருமதிச.சிவகுமார் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் நவாலி ஹேமலதா செல்வராஜா சிறுவர் ஞாபகார்த்த நிதியம் சார்பில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியை திருமதி சுதா ரமேஷ் ஓய்வு பெற்ற அதிபருக்கு 'சமூக சுடர்' என்ற உயர்பட்டம் வழங்கிக் கௌரவித்தார்.

மேற்படி நிகழ்வில் ஸ்ரீகாந்தம்என்றசிறப்பு வரலாற்று நூலும் வெளியிடப்பட்டது. வலி.மேற்கு பிரதேச சபை மணி விழாக் குழுப்பொருளாளர்சிரேஷ்ட நூலகர் கு.பா.விஜயகுமார் வெளியீட்டுரை நிகழ்த்தினார்.(த-50)

# மீன்பிடித்துறையில் ஆற்றல்களை வெளிக் கொண்டுவரும் போட்டிகள்

யாழ்ப்பாணம், செப்.16

சர்வதேச மீனவர் தினத்தை முன்னிட்டு மீன்பிடித்துறையில் பல்வேறு ஆற்றல்களை வெளிக்கொணருமுகமாக கட்டுரை மற்றும் சித்திரப் போட்டிகளை நடத்துவதற்கு தேசிய மீனவர் மகா சம்மேளனம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பாக சம்மேளனத்தின் செயலாளரும் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சில் மக்கள் தொடர்பு அதிகாரியுமான எம்.பி.பிரேமசிறி விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சர்வதேச மீனவர் தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் இந்தப் போட்டியில் மீனவர்களின் பிள்ளைகள் பங்குபற்ற [illegible]யும்.

கட்டுரை. சித்திரம் மற்றும் மீனவர் பாடல் கண்காட்சிக்கான நிர்மானம் போன்ற போட்டிகள் நடத்தப்படும்.

போட்டியில் வெற்றி பெறுவோருக்குச் சிறந்த பரிசில்கள் வழங்கப்படும்.

இதேசமயம் இந்தப் போட்டிக்கு விண்ணப்பிப்போர் பண்ணையில் உள்ள கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தில் தொடர்பு கொண்டு விண்ணப்படிவங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று யாழ். மாவட்டக் கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் என்.கணேசமூர்த்தி தெரிவித்தார். (த-

**அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்**

அமரர் **சின்னையா இரத்தினம்**

(பத்மநாதன்)

பிறப்பு 18★08★1931 — இறப்பு 18★08★2014



18.08.2014 இறைபதம் அடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (17.09.2014) புதன்கிழமை அதிகாலை 3.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று காலை 6.00 மணியளவில் அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக் கரையில் கரைக்கப்படும்.

அந்நிகழ்விலும் தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

(தயவுசெய்து இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

மேலும் எங்கள் அன்புத்தெய்வத்தின் மரணச்செய்தி கேட்டு உடனே ஓடோடி வந்து உதவிய உள்ளங்களுக்கும், தொலைபேசி, கண்ணீர் அஞ்சலி, பதாகை, மலர்வளையம், தந்தி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும், தேவையான உதவிகள் புரிநதவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

'நேச பவனம்'
பாரதி வீதி, கம்பர்மலை,
வல்வெட்டித்துறை.
077 852 4958

குடும்பத்தினர். (C/12905)(7.6.3)

**மரண அறிவித்தல்**

**TONI PACKIYAJOTHI GANESAN**

(Retired Teacher, St. John's College, Jaffna & St. Thomas' College, Bandarawela)



கொழும்பைப் பிறப்பிடமாகவும், வட்டுக் கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட TONI PACKIYAJOTHI GANESAN, கடந்த 13.09.2014 சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான Thambiyah Chelliah Ganesan-Leelawathy தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற Frederick Henry Devesagayam Paul மற்றும் Mabel தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற Daphne Indrani (Retired Teacher, Jaffna College - Vaddukkoddai) இன் அன்புக் கணவரும், Sharvini (United Nations World Food Programme) இன் அன்புத் தந்தையும், Theeban (United Nations Development Programme) இன் அன்பு மாமனாரும், Anton C. Ganesan (U.K), A. Jeyajothy Ganesan (Teacher, Jaffna College) ஆகியோரின் அன்புச் சகோதரனும், Shirani (Nuwara Eliya), Ruby (Teacher, St. Thomas' College, Mt. Lavania), Malar (Stassen Export Ltd.), Grace (Haputale), Rosie (Kagolle State Plantation) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனைகள் நாளை (17.09.2014) புதன்கிழமை பி.ப. 02.00 மணிக்கு வட்டுக்கோட்டை தென் இந்தியச் திருச்சபை பேராலயத்தில் இடம்பெற்று, நல்லடக்கத்திற்காக யாழ்ப்பாணம் St. John the Baptist's தேவாலய சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மணியகாரன் வீதி,
வட்டு தென் மேற்கு,
வட்டுக்கோட்டை. (சி/16238)(7.6.3)

தகவல்: Xavier C. Theeban (மருமகன்)

# குறிப்பிட்ட வயதெல்லையை கடந்த பின் ஊழியர் சேமலாப நிதியைப் பெறமுடியும்

## பிரதித் தொழில் ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.செப்.16

ஊழியர் சேமலாப நிதியத்தில் தம்மை இணைத்துக் கொள்வோர் குறிப்பிட்ட வயதெல்லைகளை கடந்த பின்னர் தமக்கான சேமிப்பு நிதியைப் பெற்றுக் கொள்ள முடியும். இல்லாவிடில் தவிர்க்க முடியாத காரணங்களில் பணியில் இருந்து விலகுபவர்கள் சட்டத்தில் உள்ள நிபந்தனைகளின் அடிப்படையில் தமக்கான ஊழியர் சேமலாப நிதியைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று வடமாகாண பிரதித் தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரச திணைக்களங்களில் வழங்கப்படும் ஓய்வூதியக் கொடுப்பனவுக்குப் பதிலாக தனியார் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு ஊழியர் சேமலாப நிதி செலுத்தப்படவேண்டியது கட்டாயமாகும். பணிக்காலத்தில் பணியாளர்களுக்காக வழங்கப்படும் ஊழியர் சேமலாப நிதியத்தை தொழிலில் இருந்து விலகிய பின்னர் பெற்றுக் கொள்ள பலர் முயற்சிப்பதில்லை. இந்த நிதி அவர்களின் சேமிப்பாக வைக்கப்பட்டிருக்கும். ஆனால் குறிப்பிட்ட வயதெல்லையைக் கடந்த பின்னரே அந்த நிதியைப் பணியாளர்கள் பெற்றுக் கொள்ள முடியும்.

ஆண்கள் 55 வயது கடந்த பின்னரும், பெண்கள் 50 வயதைக் கடந்த பின்னரும் தமக்கான ஊழியர் சேமலாப நிதியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இதேவேளை- நிரந்தர ஓய்வூதிய அடிப்படையில் அரச திணைக்களத்தில் வேலை வாய்ப்பு கிடைக்கப்பெற்ற பணியாளர்கள், உரிய மருத்துவக் காரணங்களால் வேலை செய்ய முடியாத நிலையில் தொழிலில் இருந்து இடைநடுவில் விலகியவர்கள், தனி யார் நிறுவனங்கள் அரச உடைமையாக்கப்பட்ட பின்னர் அதில் பணியாற்றிய பணியாளர்கள் ஆகிய தரங்களில் ஒன்றைச் சேர்ந்த ஊழியரொருவர் தமக் கான ஊழியர் சேமலாப நிதியைப் பெற்றுக்கொள்ளும் முன்னர் இறப்பைச் சந்திக்க நேரிட்டால் அவரது பின்னுரித்தாளர்களும் இறப்பைச் சந்தித்தவருக்குரிய ஊழியர் சேமலாப நிதியைப் பெற்றுக் கொள்ள உருத்துடையவர்கள் ஆவர்.

இத்தகைய தகுதிகளை உடையவர்கள் ஊழியர் சேமலாப நிதியை ஏற்கனவே செலுத்தி இருந்தால் அவரது பின் உரித்தாளர்கள் தொழில் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு தமக்கான நிதியைப் பெற்றுக் கொள்ள முடியும்- என்றார். (த-14,ரி)

# சர்வதேச மொழியான ஆங்கிலத்தை அனைவரும் தெரிந்திருக்கவேண்டும்

## இந்தியத் துணைத் தூதர் தெரிவிப்பு




யாழ்ப்பாணம். செப்.16

வடக்கு மாகாணத்தில் அதிகளவானோர் சிங்கள மொழி கற்பதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இது இந்த நாட்டில் உள்ள ஒரு மொழி என்ற ரீதியில் கற்பதில் ஆர்வம் காட்டினாலும் சர்வதேச மொழியான ஆங்கிலத்தையும் அனைவரும் தெரிந்திருக்கவேண்டும் என்று யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் பிரதித் துணைத் தூதுவர் எஸ்.தட்சணாமூர்த்தி தெரிவித்தார்.

ஹிந்தி மொழியைப் பிரபல்யப்படுத்தும் நோக்கில் இந்திய அரசின் வெளிவிவகார அமைச்சின் அனுசரணையுடன் வெளிநாடுகளில் உள்ள இந்தியத் துணைத் தூதரகங்களில் நடத்தப்பட்டு வரும் ஹிந்தி தினம் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் நடைபெற்றது.

இதில் உரை நிகழ்த்திய அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் உள்ள தாய்மொழியை அறிந்திருக்கவேண்டும் என்ற ஆர்வம் தான் எல்லோருக்கும் இருக்கும். இந்தியாவில் 50 வீதமான மக்கள் 3 மொழிகளைப் பேசுபவர்களாக உள்ளனர்.

இங்கு வடக்கு மாகாணத்தில் உள்ள மக்கள் சிங்கள மொழியைக் கற்பதில் ஆர்வம் காட்டி வருவதை அவதானிக்க முடிந்துள்ளது. இதனைப் போன்று ஹிந்தி மொழியைக் கற்பதில் ஆர்வம் காட்டுவதன் ஊடாக ஏதாவது தொழில் வாய்ப்புக்காகவோ அல்லது மேலதிக பட்டப்படிப்புக்களுக்காகவோ இங்குள்ளவர்கள் இந்தியா செல்ல நேரிட்டால் அது அவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும்-என்றார்.

இந்த நிகழ்வில் ஹிந்தி மொழி பயின்ற மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன், அவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. (த-14,ரி)

# அமரர் வன்னியசிங்கம் நினைவு நிகழ்வு நாளை

வலி.தென்மேற்கு, செப். 16

கோப்பாய் தொகுதி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் வன்னியசிங்கத்தின் 55 ஆவது நினைவு தினம் நாளை புதன்கிழமை கோப்பாயில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதற்கான சகல ஒழுங்குகளையும் கோப்பாய் தொகுதி தமிழரசுக் கிளை மேற்கொண்டுள்ளதாக அதன் செயலாளரும் வடமாகாண சபை உறுப்பினருமான அ.பரஞ்சோதி தெரிவித்துள்ளார்.

நீர்வேலி வாழைக்குலைச் சங்கத்துக்கு முன்பாக அமைந்துள்ள அன்னாரின் உருவச் சிலைக்குக் காலை 9 மணியளவில் மலர் மாலை சூட்டி மலர் அஞ்சலி செலுத்தப்படவுள்ளது. இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொள்வார்கள்.

இதேவேளை- எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நீர்வேலி மகளிர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் பி.ப. 3 மணிக்கு அவரின் நினைவஞ்சலிக் கூட்டம் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்விலும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டு உரை நிகழ்த்தவுள்ளனர்.

அதேநேரம் வவுனியாவில் கடந்தவாரம் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் 15 ஆவது தேசிய மாநாட்டின் போது தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா உட்பட மற்றும் நிர்வாகத்தினர் அனைவரையும் வரவேற்கும் நிகழ்வும் இதன்போது இடம்பெறவுள்ளது.

(த-115)

## யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ-து)
## திருநெல்வேலி கிழக்கு,கோப்பாய்.
## பதவி வெற்றிடம்-பொது முகாமையாளர்(101/05)

எமது சங்கத்தில் பின்வரும் நிரந்தர பதவிக்கு விண்ணப்ப முடிவு திகதியன்று உரிய தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப் பிக்க விரும்புபவர்கள் எமது சங்கத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப்படிவத்தை அலுவலக வேலைநாள்களில் 8.30-4.30 மற்றும் சனிக்கிழமை 8.30-1.00 மணி வரை ரூபா 10 செலுத்திப் பெற்று பூர்த்தி செய்து 30.09.2014ஆம் திகதி பிற்பகல் 4.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக 'தலைவர்,யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்' என்ற முகவரிக்குப் பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

**பதவி: பொதுமுகாமையாளர்(நிரந்தரம்)**
**பதவி இல.: 165/88 இன் படி சம்பள குறி இல:101/05**
**சம்பளத்திட்டம்: 66/06 இன் படி 12450-190x10-210x10-16450.00**

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:

(அ) கூட்டுறவுச் சங்க ஊழியர் 06ஆம் சம்பளத்திட்டப் பதவியொன்றில் மூன்று(3) வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க 07 ஆம் சம்பளத்திட்டப் பதவியொன்றில் ஆறு (6) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டதாரிச் சான்றிதழ் அல்லது அதற்குச் சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமைமட்ட பதவி ஒன்றில் 10 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் இப் பத்துவருட கால அனுபவத்தில் 03 வருடங்களுக்குக் குறையாமல் சிரேஷ்ட முகாமைமட்ட பதவி ஒன்றில் அனுபவம்.

அல்லது

(இ) கூட்டுறவுச் சங்க ஊழியர் (உயர்தரம்) சான்றிதழ்/க.பொ.த.(உயர்தரம்) 03 பாடங்களில் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவன மொன்றில் முகாமைமட்ட பதவி ஒன்றில் 12 வருடங்களுக்குக் குறையாத அனுபவம், இப் பன்னிரண்டு வருடகால அனுபவத்தில் குறைந்தளவில் 03 வருட காலம் சிரேஷ்ட முகாமை மட்ட பதவியில் அனுபவம்.

பொது நிபந்தனைகள்:

1. வயது 30.09.2014 ஆம் திகதி 18 வயதுக்குக் குறையாதவர்களாகவும் 45 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.
2. யாழ்.மாவட்டத்தில் இரண்டு வருடங்களுக்கு மேலாக வசித்தமையை உறுதிப்படுத்துவதற்கு சான்றிதழ்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு பிரமாணங்களுக்கு அமைவாக நிர்வாகத்தினால் விதிக்கப்படும் ரொக்கப் பிணையும் ஆதனப் பிணையும் செலுத்துதல் வேண்டும்.
4. ஆள் சேர்ப்புச் செய்யப்படுபவர் இரண்டு வருட கால தகுதிகாண் அடிப்படையில் பதவியில்அமர்த்தப்படுவர்.
5. கல்வித் தகைமைகள், அனுபவம், வயது, வதிவிடத்தை உறுதிப்படுத்தும் நற்சான்றிதழ், தேசியஅடையாள அட்டை என்பவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். இதற்கமையாத விண்ணப்பங்களும் சரிவரப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.
6. தற்போது கூட்டுறவுச் சேவையில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது என்பதுடன் அவர்கள் பதவிகளுக்காக விண்ணப்பிக்கும் போது தமது விண்ணப்பங்களைச்சம்பந்தப்பட்ட சங்கத்தினூடாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். இத்தகைய ஊழியர்களால் நேரடியாக விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட்டால் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தெரிவு செய்யப்பட்ட பின்னர் அது வெளிப்படுமிடத்து நியமனம் இல்லாதொழிக்கப்படும்.
7. விண்ணப்பத்தில் காட்டப்படும் தகவல்களும்,இணைப்புகளும் உண்மையானதும், செம்மையானதுமென உறுதிப்படுத்துவதோடு ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் இதில் ஏதேனுமொன்றுபிழையானதெனவோ அல்லது பொய்யானதெனவோ காணப்படுமிடத்து நஷ்டஈடு பெறாது உடனடியாகப் பதவி நீக்கம் செய்யப்படுவீர்கள் என்பதை [illegible] வறிந்திருத்தல் வேண்டும்.

தாங்கள் [illegible] துறைசார்ந்த கற்கைநெறிகள் பயின்று அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என [illegible]

குறிப்பு: பால் உற்பத்தி [illegible] யம் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நேர்முகப்பரீட்சையின் போது சகல சான்றிதழ்களினதும் மூலப்பிரதிகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

16.09.2014 தலைவர்

## 1000 பிறை கண்ட ஆசிரியப்பெருந்தகைக்கு
## 100 ஆவது ஆண்டு பிறந்தநாள் வாழ்த்துக்கள்



40 இற்கும் மேற்பட்ட தமிழிலக்கிய பிரபந்தங்களை இயற்றி, முதுபெரும்புலவர், புலவர்மணி, கலாபூஷணம், சமூகமாமணி ஆகிய பட்டங்களையும், சிவத்தமிழ் விருதினையும் பெற்று இணுவிலூருக்கும், அளவையூருக்கும் பெருமை சேர்த்த

## வை.க.சிற்றம்பலம் ஐயா

அவர்கள் தமது நூறாவது பிறந்த நாளை இன்று (16.09.2014) செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு இணுவில்-வட்டுவினி இல்லத்தில் கொண்டாடுகின்றார்.
அவர் பல்லாண்டு காலம் நலமோடு வாழ வாழ்த்துகின்றோம்.
அவ்வமயம், அன்புள்ளங்களையும் அன்போடு அழைக்கின்றோம்.

34, வட்டுவினி ஒழுங்கை,
இணுவில் மேற்கு,
இணுவில்.

புலவர் குடும்பத்தினர்.

(52106)(4.3.8)

# சங்கீத பாட ஆசிரியர்கள் மூலம் மாதாந்தம் இசைக் கச்சேரிகள்

தென்மராட்சி, செப்.16

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றும் சங்கீத பாட ஆசிரியர்கள் மூலம் மாதாந்தம் இசைக் கச்சேரிகள் நடத்த வலயக் கல்வி அலுவலகத்தினால் திட்டமிடப் பட்டுள்ளது.

சங்கீத ஆசிரியர்களின் இசைக் கச்சேரிகள் மூலம் மாணவர் களை உருவாக்கும் செயல் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள் ளன. இசைக் கச்சேரிகள் பிரதி மாதத்தின் இறுதி வெள்ளிக் கிழமைகளில் பிற்பகல் 2 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை அந்தந்தப் பாடசாலை களில் நடத்தப்படவுள்ளன.

இதற்காக 2015 ஆம் ஆண்டு வரை இசைக் கச்சேரி நடத்த வுள்ள ஆசிரியைகளின் பட்டி யல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் பாடசாலை யின் சங்கீத ஆசிரியரின் பண் ணிசையும் அயல் பாடசாலை களைச் சேர்ந்த சங்கீத ஆசிரி யர்களின் மெல்லிசையும், மாணவர்களின் கலை நிகழ்வு களும் நடத்தப்படும்.

வலயத்தினால் வெளியிடப்பட்ட பட்டியல் பிரகாரம் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை வெளியில் உள்ள இசைக் கலைஞர்களின் இசைக் கச் சேரிகளை நடத்தவும் ஏற்பாடு கள் செய்யப்பட்டுள்ளன.


பல்கலைக்கழகம், இசைக் கல்லூரி, தேசிய கல்வியியல் கல்லூரிபோன்றவற்றில் இசையை முறையுடன் பயின்று ஆசிரி யர்களாகப் பணிபுரிவோரின் இசை வளம் பாடசாலைகளில் கற்பித்தலுடன் நிறைவடைந்து வருகிறது.

> “வலயத்தினால் வெளியிடப்பட்ட பட்டியல் பிரகாரம் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை வெளியில் உள்ள இசைக் கலைஞர்களின் இசைக் கச் சேரிகளை நடத்தவும் ஏற்பாடு கள் செய்யப்பட்டள்ளன.

இந்த நிலையில் மாதாந்தம் இவ்வாறான ஆசிரியர்களி டையே இசைக் கச்சேரிகளை நடத்தி அவர்களின் இசைக்கு, குரல் வளத்துக்கு மெருகூட்டும் வகையில் வலயத்தால் இந்தச் செயற்றிட்டம் உருவாக்கப் பட்டுள்ளது.

முதலாவது இசைக் கச்சேரி எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடத்தப்பட வுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(த-9)




கிளிநொச்சி நகரில் மிக ஆபத்தான நிலையில் பட்டமரம் ஒன்று நீண்டகாலமாக காணப்படுகின்றது. கிளிநொச்சி நகரிலிருந்து திருநகர் செல்லும் வீதியில் கரைச்சி பிரதேச சபைக்கு அருகில் இந்த மரம் உள்ளது. மின்சார மற்றும் தொலைபேசி இணைப்புகள் மத்தியில் காணப்படும் இந்தப் பட்டமரம் எந்தநேரத்திலும் வீழ்ந்துவிடக்கூடிய அபாயநிலையில் காணப் படுகின்றது. எனவே எந்த நேரத்திலும் ஆபத்தை விளைவிக்கக்கூடிய இந்தப் பட்ட மரத்தை அகற்றுமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (த-18)

# போதியளவு வாகனத் தரிப்பிடங்கள் இல்லாமையே நெரிசலுக்குக் காரணம்

யாழ்ப்பாணம், செப்.16

யாழ்.மாவட்டத்தில் போதிய வாகனத் தரிப்பிடங் கள் இல்லாதமையே போக்குவரத்து நெரிசல் மற்றும் பெரும்பாலான வாகன விபத்துக்கள் ஏற்படக் காரணம் என யாழ். பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் விமலசேன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தில் அமைந்திருக்கும் பெரிய கடை களுக்குப் பொருள்கள் விநியோகிக்கும் வாகனங்கள் வீதியின் இரு புறங்களிலும் நிறுத் தப்படுகின்றன. இவ்வாறு இரு புறங்களிலும் நிறுத்தப்படுவதனால் வீதிகளில் பெருமளவான நெரிசல் ஏற்படுகின்றது. இதனாலேயே வீதியில் அதிகப்படியான விபத்துக்கள் ஏற்படுகின்றன. இந்த விபத்துக்களைத் தவிர்ப்பதற்காக பொருள் கள் கொள்வனவு செய்யும் கடை உரிமையாளர் களுக்காக கொள்வனவுக்கு எனக் குறிப்பிட்ட நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது - என்றார். (த-ரி)

# கட்டுரைப் போட்டி

யாழ்ப்பாணம், செப்.16

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு முதி யோர்களுக்கிடையேயான முதியோர் எவரை யும் புறமொதுக்காமல் யாவருக்குமான சமூ கத்தைக் 'கட்டியெழுப்புவோம்" என்ற தலைப் பிலான கட்டுரைப் போட்டி இன்று காலை 9.30 மணிக்கு நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. நல்லூர் பிர தேச செயலக பிரிவுக்கு உட்பட்ட 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் பங்குபற்றலாம். (த)


**தசதசாப்த புருஷற்கோர் ஞானவிழா**

**வை.க.சிற்றம்பலம் ஐயா**



Happy Birthday!

'தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலிற் தோன்றாமை நன்று'

எனும் வள்ளுவப் புலவரின் வாக்கினை வாய்மையாக்கி
தொல் தமிழ், சைவநெறிகட்பாற் சேவையாற்றி
கல்விக் கண் திறந்து தம்பாற் கற்றோரைத் தூய்மையாக்கி
நல்திகழ் நம் சந்ததிபுகழ் நாள்தோறும் மேன்மையாக்கி ஆல்போல்
அறிவு, புலமை, அனுபவம், திறமை என்கின்ற கிளைகளைப் பரப்பி
அதன்பால் நற்சந்ததி, நற்சீடர்
மற்றும் நற்சமூகம் என்கின்ற விழுதுகளை மண்ணில் ஊன்றி
அறுகுபோல் வாய்மை, நெறிபுறழாத நேர்கொண்ட ஒழுக்கங்களால்
வேர் ஊன்றி வையத்துள் வாழ்வாங்கு வாழும்
தெய்வமாகிய நல்லாசான், முதுபெரும் புலவர், புலவர்மணி,
பண்டிதர், கலாபூஷணம், புராணபடனவித்தகர், சிவத்தமிழ்வித்தகர்,
சோதிடக் கலைஞர் மற்றும் இலக்கண, இலக்கியஉரைஞர்,
**இணுவையூர் அளவைவாசர் வை.க.சிற்றம்பலம் ஐயாவின்**
திருத்தாள் பணிந்து நல்லாசிகளை வேண்டிநிற்கும் இத்தருணம்
எம் சந்ததியில் நூறாவது அகவைகாணும் தசதசாப்த புருஷர்
மற்றும் நல்லாசான் அவர்கள் இன்னமும் பலதசாப்தங்கள் புகழோடும்
செழிப்போடும் வையத்துள் வாழ்வாங்கு வாழ எல்லாம் வல்ல அளவை
கும்பழாவளை விநாயகனை வணங்கிநிற்கின்றோம்.

**வாழ்த்துபவர்கள்:**

சி.செல்வநாயகம் மற்றும் பிள்ளைகள் குடும்பத்தினர்- அளவெட்டி
வி.சுந்தரமூர்த்தி மற்றும் பிள்ளைகள் குடும்பத்தினர்- ஏழாலை
(52297)(3.6.4)

**பெயர் மாற்றம்**

கறுக்காய்ப்பள்ளம் பூநகரி எனும் முகவரியுடைய மயூராதேவி ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை மங்களாதேவி என மாற்றி சகல ஆவணங்களிலும் கையொப்பம் இடுவேன் என சகலருக்கும் அறியத் தருகின்றேன். மங்களாதேவி (52294)(7.8.3)

**வீடுகளுக்கான பால் விநியோக சேவை** எமது சங்கம் வீடுகளுக் கான நேரடிப் பால் விநியோகம் மேற்கொண்டு வருகிறது. தேவை யானவர்கள் தொடர்பு கொண்டால் தங்களது வீடுகளுக்குப் பால் விநியோகம் மாதாந்த கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: பொதுமுகாமையாளர்,
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) (யாழ்கோ)
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய். 021 321 2926 (T/16235)(4.6.3)

**புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள தொழில் பயிற்சி நிலையம் ஒன்றுக்கு ஆசிரியர்கள் உடனடியாகத் தேவை**

**தையல் பயிற்சி | அழகுக்கலை | வெதுப்பகம் கணினிகற்கை நெறி**

ஆகியவற்றை பயிற்சி மூலமாக கற்பிப்பதற்கு NVQ சான்றிதழ் பெற்ற ஆசிரியர்கள் தேவை.
நல்ல ஊதியம் வழங்கப்படும்.
தொடர்பு: கரந்தன் வீதி, ஊரெழு, யாழ்ப்பாணம்.
021 320 9563 / 072 186 9302 (52295)(4.3.6)

**ULTRA TECH வடபகுதியில்**

ULTRA TECH சிமெந்து வடபகுதியில் பொறியியலாளரின் மற்றும் கட்டட ஒப்பந்ததாரர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஆதித்தியா பிர்லா கம்பனியின் ULTRA TECH சிமெந்து தனது விற்பனைத் துறையை வடபகுதி நோக்கி நகர்த்தி உள்ளது. கல் அரிபவர்கள் மற்றும் சகல தேவை களுக்கும் சிறந்த சிமெந்து என்று பொறியியலாளரின் சிபார்சு பெற்ற வெற்றிச் சின்னம் "ULTRA TECH சிமெந்து" சீக்கிரத்தில் காயும் தன்மையும் அதிகூடிய பசைத் தன்மையைக் கொண்ட சிமெந்து. வாடிக்கையாளர்களே ULTRA TECH சிமெந்தைப் பாவித்து நீங்கள் நேரத்தை மிச்சம் பிடித்து பணத்தையும் சேமித்து இலட்சாதிபதி ஆவதற்கு அரிய சந்தர்ப்பத்தை ULTRA TECH ஏற்படுத்தி உள்ளது. கூடிய கற்களைப் பெறலாம்.

உடனடியாக ஓடர்களைப் பதிவுசெய்யும் முகவரி : (52271) (7.6.3)
**City Suppliers**
129, Stanley Road, Jaffna. T.P.No : 021 221 9300

**A/L பரீட்சைகளின் பின் தகவல் தொழினுட்ப கல்விக்கு அதிகம் ஏன் செலவிட வேண்டும் ?**

**Mega கொம்பியூட்டர் தொழிற்கல்விக்கான புலமைப்பரிசில்**

- பரீட்சை அனுமதி முற்றிலும் இலவசம்.
- பரீட்சையை தமிழ் அல்லது ஆங்கிலத்தில் எழுதலாம்.
- 15 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் பங்குபற்றலாம்.
- இலகுவான 25 (MCQ) பொது அறிவு வினாக்கள்
- பரீட்சை 30 நிமிடங்கள் மட்டுமே.
- 75% வரையான ஸ்கொலர்ஷிப் (கட்டணக்கழிவு).
- இலவச பாடநூல்கள் (இந்தியா & இலங்கை).
- தவணைமுறை கட்டண வசதி.
- சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள்.

you can Win 75% Scholarship

ஸ்கொலர்ஷிப் பரீட்சை
O/L , A/L பரீட்சை முடித்த மாணவர்கள், கொம்பியூட்டர் கல்வியில் ஆர்வமுடையவர்கள் மற்றும் 15 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் மெகா இலவச பரீட்சையில் பங்குபற்றலாம்.
செப்டெம்பர் 21st ஞாயிறு
விரையுங்கள், வெற்றிபெறுங்கள்

தற்பொழுது நேரடி பதிவுகள் ஆரம்பம்
CSC-ASIAN COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2008 CERTIFIED ... TRAINING INSTITUTION
யாழ்.நகர்
2G ஸ்ரான்லி வீதி,
021 2225677

## பெருவில் பஸ் விபத்து 26 பேர் உயிரிழப்பு

தென்கிழக்கு பெருவில் உள்ள மலைப்பகுதியில்பஸ்ஸொன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் ஏழு குழந்தைகள் உட்பட 26 பேர் உயிரிழந்துள்ளனர்.
அந்தநாட்டில் ஆயிரக்கணக்கானோர் கலந்துகொள்ளும் கோவில் திருவிழாவில் பங்கேற்க பயணிகளை ஏற்றிக்கொண்டு பஸ் ஒன்று புக்கியோ நகரிலிருந்து சால்ஹு'வான்கா நோக்கி சென்று கொண்டிருந்தது.
அபுரிமாக் மாகாணத்தில் உள்ளஏழுவளைவுகள்என்ற ஆபத்தான வளைவில் பஸ் பயணித்த போது திடீரென கட்டுப்பாட்டை இழந்து வீதியில் இருந்து விலகி 650 அடி பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 19 பேர் உயிரிழந்துள்ளனர் என்று கூறப்பட்ட நிலையில் நேற்று உடல்கள் மீட்கப்பட்ட போது உயிரிழந்தோர் எண்ணிக்கை 26 ஆக அதிகரித்துள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (ற)

# முஸ்லிம்கள் அல்லர்; அரக்கர்கள்

## இஸ்லாமிய அரசு உறுப்பினர்கள் குறித்து பிரிட்டிஷ் பிரதமர் சீற்றத்துடன் கருத்து

ஈராக்கின் ஒரு பகுதியைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் இஸ்லாமிய அரசு எனப்படும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பை வேட்டையாடி அழிக்கப்போவதாகப் பிரிட்டிஷ் பிரதமரும் சூளுரைத்துள்ளார்.
"அவர்கள் முஸ்லிம்கள் அல்லர்; அரக்கர்கள்" என்றும் சீறினார். ஏற்கனவே இந்த அமைப்பை அடியோடு அழித்துவிடப்போவதாக அமெரிக்க அரச தலைவர் பராக் ஒபாமா அறிவித்துள்ளார்.
பிரிட்டிஷ் தொண்டு நிறுவன ஊழியர் டேவிட் ஹெய்ன்ஸின் கொலையை அடுத்து பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கெமரூனின் அறிவிப்பு வந்திருக்கிறாது.
"ஹெய்ன்ஸின் கொலைக்குப் பொறுப்பானவர்களைப் பிரிட்டன் வேட்டையாடி நீதிக்குப் பதில் சொல்ல வைக்கும்" என்றார் கெமரூன்.
பிரிட்டனில் பாதுகாப்பு விவகாரங்களுக்கான உயர்மட்ட குழுவான கோப்ராவின் அங்கத்தவர்களுடன் அவசரக் கூட்டம் ஒன்றை நடத்திய பின்னர் கருத்து வெளியிட்ட பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கெமரூன்,டேவிட்ஹெய்ன்ஸை ஒரு பிரிட்டிஷ் நாயகன்" என்று குறிப்பிட்டார்.
இன்னொரு பிரிட்டிஷ் குடிமகனால் இப்படியான ஒரு ஈனச் செயலைச் செய்ய முடிந்திருப்பது கண்டு நாடே அருவருப்பு அடைந்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.
"இஸ்லாமிய அரசு ஆயுததாரிகள் முஸ் லிம்கள் அல்லர்; அரக்கர்கள்" எனக் கெமரூன் சீறினார்.



ஹெய்ன்ஸ் தலைதுண்டிக்கப்பட்டு கொல்லப்படுவதைக் காட்டும் வீடியோ ஒன்று சனிக்கிழமை பின்னிரவில் வெளியாகியிருந்தது.
கொல்லப்பட்டுள்ள டேவிட் ஹெய்ன்ஸின் குடும்பத்தினர், 'அவருடைய மனிதாபிமானப் பணிகளைப் பாராட்டி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.
இனம், மதம் எல்லாம் பார்க்காமல் உற்சாகத்துடன் மனிதர்களுக்கு உதவுவதையே வாழ்க்கையின் தத்துவமாகக் கொண்டவர் டேவிட் ஹெய்ன்ஸ் என அவரது சகோதரர் குறிப்பிட்டுள்ளார்.
இஸ்லாமிய அரசு அமைப்பினர் செய்யும் இப்படியான கொலைகள் இஸ்லாத்தின் போதனைகளுக்கு முற்றிலும் முரணான காட்டுமிராண்டித்தனம் எனப் பிரிட்டனின் இஸ்லாமிய சமூகம் என்ற அமைப்பின் தலைவர் சுக்ரா அகமது கண்டித்துள்ளார். (உ)

## 13,000 டொலருக்கு விற்பனையான நாய்



ரொறன்ரோ, செப்.16
கனடாவில் இனக்கலப்பாளர் ஒருவரிடமிருந்து அழகான ஒரு நாய் 13,000 டொலருக்கு விற்பனையாகி உள்ளது. அமெரிக்காவைச் சேர்ந்த நடிகையும் மற்றும் சமூகத்தில் உயர்நிலையில் உள்ளவரும், பொழுது போக்காளருமான பரிஸ் ஹில்ரன் என்பவர் இதனை வாங்கியுள்ளார். மிஸ்டர் அமெஸிங் என்ற பெயருடைய 5 மாத பொமரேனியனே இந்த விலைக்கு விற்கப்பட்டுள்ளது.
6சென்ரி மீற்றர்கள் உயரமுடைய இந்த நாய் முழுமையாக வளரும் போது 2 இறாத்தல்கள் எடை மட்டுமே கொண்டிருக்கும். இத்தகைய இனங்கள் தென் கொரியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு ஒவ்வொன்றும் 6,000 டொலருக்கும், 20,000டொலருக்கும் இடைப்பட்ட விலைகளில் விற்பனை செய்யப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# ஐ.எஸ். மீதான தாக்குதலுக்கு ஆதரவு திரட்டுகிறது அமெ.

பரிஸ், செப்.16
ஐ.எஸ். ஆயுதக் குழுவினருக்கு எதிரான தாக்குதலுக்கு ஆதரவு திரட்டுவதற்காக அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஜோன் கெரி பிரான்ஸ் சென்றுள்ளார்.
ஐ.எஸ். ஆயுதக்குழு அழிக்கப்படும் என கடந்த 9ஆம் திகதி அமெரிக்க அதிபர் ஒபாமா அறிவித்தார். இதனையடுத்து, ஐ.எஸ்ஸுக்கு எதிராக ஆதரவு திரட்டுவதற்காக பல்வேறு நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டு வரும் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் கெரி, ஜோர்தான், லெபனான், எகிப்து உள்ளிட்ட 10 அரபு நாடுகளின் ஆதரவை இதுவரை பெற்றுள்ளார்.
ஐ.எஸ். ஆயுதக் குழுவை எதிர்கொள்வது தொடர்பான சர்வதேச கூட்டம் இன்று பிரான்ஸில் நடைபெற உள்ளது. முன்னதாக எகிப்து சென்றிருந்த ஜோன் கெர்ரி, அந்நாட்டு அரசுடன் பேச்சு நடத்தினார். அதன்போது ஐ.எஸ். ஆயுதக் குழுவை எதிர்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஒத்துழைப்பு அளிக்கப்படும் என்று எகிப்து அரசு உறுதி அளித்தது. (ற)

# பிரிட்டன் பிரசை படுகொலை: சர்வதேச நாடுகள் கண்டனம்

**ஐ.எஸ். ஆயுதக் குழு, பிரிட்டனைச் சேர்ந்த சேவைப் பணியாளரான டேவிட் ஜவ் தோரனி ஹெனிஸ் என்பவரை தலை துண்டித்துக் கொல்லும் காட்சிகளை வெளியிட்டுள்ளது.**

நியூயோர்க், செப்.16
பிரிட்டனைச் சேர்ந்த சேவைப் பணியாளரை ஐ.எஸ். ஆயுதக் குழுவினர் கொலை செய்தமைக்கு சர்வதேச நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன.
ஐ.எஸ். ஆயுதக் குழு, பிரிட்டனைச் சேர்ந்த சேவைப் பணியாளரான டேவிட் ஜவ் தோரனி ஹெனிஸ் என்பவரை தலை துண்டித்து கொல்லும் காட்சிகளை வெளியிட்டுள்ளது. முன்னதாக இரு அமெரிக்க செய்தியாளர்கள் கொல்லப்பட்ட அதே இடத்தில் இவரும் கொல்லப்பட்டிருக்கிறார்.
முன்னாள் பிரதமர் போல தற்போதைய பிரதமரான டேவிட் கமரூன் அமெரிக்காவுடன் கூட்டுச்சேர்ந்து ஐ.எஸ். ஆயுதக் குழுவினரை ஒடுக்கும் முயற்சியில் இறங்கியதற்காக தான் கொல்லப்படுவதாக ஹெனிஸ், அந்தக் காட்சிகளில் கூறுகிறார். பின்னர் அவர் கொடூரமாகக் கொலை செய்யப்படுகிறார்.
ஹெனிஸ் கொல்லப்பட்டமை கொடூரமான சம்பவம் என தெரிவித்துள்ள கமரூன், இதற்குக் காரணமானவர்களைத் தேடித் தண்டிக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.
இந்தச் சம்பவம் தொடர்பாக டேவிட் கமரூன் அமைச்சர்களுடன்அவசர ஆலோசனைக் கூட்டம் ஒன்றை நடத்தவுள்ளார்.
இந்தச் சம்பவத்துக்கு கண்டனம் தெரிவித்துள்ள அமெரிக்க அதிபர் ஒபாமா, குற்றத்தில் ஈடுபட்டவர்களைத் தண்டிப்பதற்கான அனைத்து உதவிகளையும் அமெரிக்கா வழங்கும் எனத் தெரிவித்துள்ளார். (ற)

## நைஜீரியா கட்டட விபத்து 40 பேர் உயிரிழப்பு

நைரோபி, செப்.16
நைஜீரியாவின் லாகோஸ் நகரில் தேவால்யமொன்றுக்குச் சொந்தமான கட்டடம் சரிந்து விழுந்ததில் உயிரிழந்தோர் எண்ணிக்கை நாற்பதாக அதிகரித்துள்ளது.
லாகோஸில் டி.பி. ஜோஷுவா என்ற பிரபல மத போதகர் நிறுவிய தேவாலய வளாகத்தில் இந்த விபத்து ஏற்பட்டது. விருந்தினர்கள் தங்குவதற்காக வளாகத்தில் அமைக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டடத்தில் கூடுதலாக மாடிகள் கட்டும்பணி நடைபெற்று வந்தது. அதன்போதே இந்த விபத்து நடந்துள்ளது.
இடிபாடுகளில் சிக்கி 40 பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 124 பேர் மீட்கப்பட்டுள்ளனர். (ற)

## பிரமிப்பில் ஆழ்த்திய இளவரசர் ஹரி

லண்டன், செப்.16
பிரிட்டனில் நடைபெற்ற சக்கரக்கதிரை றக்பீ போட்டியில் கலந்து கொண்டு இங்கிலாந்து இளவரசர் ஹரி கலக்கியுள்ளார். பிரிட்டனில் நடைபெற்று வரும் சக்கரக்கதிரை றக்பீ போட்டிகளில் இங்கிலாந்து இளவரசர் ஹரி மற்றும் அவரது சகோதரரான சாரா பிலிப்ஸ் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். இதனால் பார்வையாளர்கள் மத்தியில் பெரும்



ஆர்வம் ஏற்பட்டது. கடந்த 10 ஆம் திகதி ஆரம்பமான இந்தப் போட்டியில் 13 நாடுகளைச் சேர்ந்த 400 வீரர்கள் கலந்து கொண்டுள்ளனர். (ற)

# இந்திய பெருங்கடலில் மாயமான மலேசிய விமானத்தின் பாகங்களா?

கோலாலம்பூர், செப்.16
மாயமான மலேசிய விமானத்தை இந்தியப் பெருங்கடலில் தேடும் பணியில் ஈடுபட்ட போது கடினமான 58 பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.
கடந்த மார்ச் மாதம் 8 ஆம் திகதி கோலாலம்பூரிலிருந்து பீஜிங் புறப்பட்ட எம்.எச்.370 என்ற மலேசிய விமானம் மாயமான விவகாரத்தில், ஆஸ்திரேலியாவின் தேடுதல் குழுவினர் இந்தியப் பெருங்கடலில் கடினமான 58 பொருள்களைக் கண்டுபிடித்துள்ளனர்.
இது மாயமான விமானத்தின் உதிரிபாகங்கள்தானா என்பதை அறிய அந்த பொருள்களை ஆய்வுக்கு அனுப்பவுள்ளதாக அந்த நாட்டுப் போக்குவரத்து அமைச்சர் லியோ டியாங் லாய் தெரிவித்துள்ளார்.
கடலில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த 58 பொருள்களும் இந்தியப் பெருங்கடல் கடற்படுகையுடன் தொடர்புடையனவாகத் தெரியவில்லை. எனவேதான் இது மலேசிய விமானத்தின் பாகங்களாக இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.
ஆஸ்திரேலியாவின் ஃபர்கோ டிஸ்கவரி என்னும் பெயருடைய கப்பல் தற்போது இந்தியப் பெருங்கடல் பகுதியில் தேடுதல் வேட்டையைத் தொடர்ந்து நடத்தி வருகிறது.
இதற்கு உதவியாக தற்போது மலேசியாவின்கோ ஃபீனிக்ஸ் என்ற கப்பலும் தேடுதல் வேட்டைக்கு அனுப்பப்படவுள்ளது.
இந்த விமானத்தைக் கண்டுபிடிக்க இந்தியப் பெருங்கடலில் இதுவரை ஆய்வு செய்யாத ஆழ்கடல் பகுதிகளையெல்லாம் ஆஸ்திரேலிய தேடுதல் அணி ஆய்வு செய்து வருகிறது.
காணாமற் போய் உலக வரலாற்றில் புதிராகிப்போன மலேசிய விமானத்தைக் கண்டுபிடிக்கும் இந்தத் தேடலில் கடல் அடித் தரை பற்றிய அரிய தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.
இந்தியப் பெருங்கடலில் 2000 மீற்றர்கள் உயரமுள்ள எரிமலைகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. (ற)



கடந்த வெள்ளிக்கிழமை சென்னையிலுள்ள கலைக்கழகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட களரிப் பாயத்து சாகச நிகழ்வொன்றில் மெற்றாஸ் படைப்பிரிவைச் சேர்ந்த குழுவினர் கூட்டாக ஈடுபட்டுள்ளனர்.

## நிலக்கரி முறைகேடு பதிலளிக்க மன்மோகன் மறுப்பு

புதுடில்லி, செப்.16

நிலக்கரிச் சுரங்க முறைகேடு குறித்த கேள்விக்கு இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் பதிலளிக்க மறுத்துள்ளார். இந்திய மத்திய கணக்குத் தணிக்கைத் துறையின் முன்னாள் தலைவர் வினோத்ராய், நிலக்கரி சுரங்க ஒதுக்கீடு முறைகேட்டில் மன்மோகன் சிங்கிற்கும் தொடர்பிருக்கின்றது என்று அண்மையில் கூறியிருந்தார்.

இதுகுறித்து செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்க மறுத்த மன்மோகன், மற்றவர்கள் சொல்வதற்கெல்லாம் பதில் சொல்லிக்கொண்டிருக்க விருப்பமில்லை என்று தெரிவித்துள்ளார். (ற)

# நிதியாண்டு முடிவதற்குள் 10 உள்கட்டமைப்பு பணிகள்

## நரேந்திர மோடி அதிரடி உத்தரவு


புதுடில்லி, செப்.16

இந்திய பிரதமர் நரேந்திர மோடி வரும் நிதியாண்டின் இறுதிக்குள் 10 சதவீத உள்கட்டமைப்பு பணிகளை முடிக்க வேண்டும் என்று மத்திய அமைச்சர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்தியாவை வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டு செல்வதற்காக முதல் கட்டமாக 6 மாதங்களுக்குள் மொத்த உள்கட்டமைப்பு இலக்கில் 10 சதவீதத்தை பூர்த்தி செய்து விட வேண்டும் என உத்தரவிட்டுள்ளார். இந்தப் பணிகளை மேற்கொள்ளும் ஒவ்வொரு அமைச்சகத்தின் செயற்பாடுகளை கண்காணிக்கும் பொறுப்பை அவர் திட்டக் கமிஷனிடம் ஒப்படைத்துள்ளார்.

இதன் மூலம் டிஜிட்டல் இந்தியா, ஸ்கில் இந்தியா எனும் தன் கனவுகளை செயல்படுத்த முடியும் என அவர் நம்புகிறார்.

மேலும் இந்த பணிகள் விரைந்து நிறைவேற்றப்படுவதை, தனக்கு உடனுக்குடன் எழுத்து பூர்வமாக தர வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். (ற)



## சோனியா, அமித் ஷாவுக்கு அழைப்பாணை

புதுடில்லி, செப்.16

தகவல் அறியும் உரிமைச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டபின், காங்கிரஸ், பா.ஜ.க. உள்ளிட்ட முக்கிய அரசியல் கட்சிகள், இந்தச் சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன.

அதன்படி, அரசியல் கட்சிகள், பொதுமக்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் வகையில், தகவல் தரும் அதிகாரியை நியமிக்க வேண்டும்.

தகவல் கோரி வரும் மனுக்கள், கடிதங்களுக்கு அவர் பதிலளிக்க வேண்டும்.

டில்லியைச் சேர்ந்த அகர்வால், மத்திய தகவல் ஆணையரிடம் அளித்த முறைப்பாட்டில், காங்கிரஸ் உள்ளிட்ட அரசியல் கட்சிகள், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் விதிமுறைகளை கடைபிடிக்கத் தவறியதாகவும், இந்த விதிகளுக்கு உடன்பட மறுப்பதாகவும் தெரிவித்தார்.

அந்த மனுவை விசாரித்த, மத்திய தகவல் ஆணையர், இதுகுறித்து விளக்கம் அளிக்குமாறு, காங்கிரஸ் தலைவர் சோனியா, பா.ஜ., தலைவர் அமித் ஷா மற்றும் தேசியவாத காங்., பகுஜன் சமாஜ் மற்றும் இரு கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைவர்களுக்கு, அழைப்பாணை அனுப்பியுள்ளார். (ற)

## ஆம் ஆத்மி இளைஞர் அணி ஆரம்பிப்பது குறித்து அறிவிப்பு

சென்னை, செப்.16

ஆம் ஆத்மி கட்சி விரைவில் இளைஞர் அணியை உருவாக்கப் போவதாக அறிவித்துள்ளது. இதுகுறித்து முறையான அறிவிப்பு தியாகி பகத் சிங்கின் 107ஆவது பிறந்த நாளான எதிர்வரும் செப்ரெம்பர் 27ஆம் திகதி வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இளைஞர் அணியில் 35 வயதுக்குக் குறைந்த உள்ள இளைஞர்களை சேர்க்க திட்டமிடப்பட்டுள்ளது என்றும், சுத்தமான அரசியல் கொள்கையை நாடுமுழுவதும் பரப்பத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# பிருத்விராஜ் சவான் மீது சிவசேனா தாக்கு

மும்பை, செப்.16

உத்தவ் தாக்கரேயை விமர்சித்த மகாராஷ்டிர முதல்வர் பிருத்விராஜ் சவானுக்கு சிவசேனா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

சிவசேனா கட்சித்தலைவராக உள்ள உத்தவ் தாக்கரே, ஓர் அரசை நடத்தக்கூடிய அனுபவம் பெற்றிருக்கவில்லை. 1995ஆம் ஆண்டு நடந்த பா.ஜ.க - சிவசேனா கூட்டணி ஆட்சியில் அவர் அங்கம்வகிக்கவில்லை என சவான் பேட்டி ஒன்றில் தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில், இதற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள சிவசேனா, முதல்வர் ஆவதற்கு முன், பிருத்விராஜ் சவானுக்கு என்ன அனுபவம் இருந்தது என கேள்வி எழுப்பியுள்ளது. மேலும், சவான் தான் போட்டியிட பாதுகாப்பான தொகுதி கிடைக்காமல் அல்லாடி வருவதாகவும், தற்போது சவானின் நிலைமை அவசர சிகிச்சைப் பிரிவில் உள்ள நோயாளியைப் போல் உள்ளது என்றும் தெரிவித்துள்ளது. (ற)

# குஜராத் செல்கிறார் நரேந்திர மோடி

புதுடில்லி, செப்.16

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இன்று குஜராத் மாநிலத்துக்குச் செல்லவுள்ளார்.

அங்கு காந்திநகரில் நாளை காலையில் நடக்கும் மாநில அரசு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மாநில அரசின் பல்வேறு திட்டங்களை அவர் தொடங்கி வைக்கிறார்.

பிரதமர் மோடியை முதல்வர் ஆனந்திபென் படேல், மாநில அமைச்சர்கள் மற்றும் பா.ஜ.க. மூத்த தலைவர்கள் விமானநிலையத்துக்குச் சென்று வரவேற்பார்கள் என்று குஜாராத் மாநில அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மோடியுடன் பா.ஜ.க. தலைவர் அமித் ஷாவும் குஜராத் செல்ல உள்ளார் என்று கூறப்படுகிறது. குஜராத் முதல்வராக இருந்த நரேந்திர மோடி பிரதமராக பதவியேற்ற பின் மீண்டும் குஜராத் செல்வது இதுவே முதல் முறை. இந்த நிலையில் அவரது 64ஆவது பிறந்த நாள் நாளை கொண்டாடப்படவுள்ளது.

எனவே பிரதமர் மோடிக்கு சிறப்பான வரவேற்பு அளிக்க குஜாராத் மாநில பா.ஜனதா அரசு தயாராகி வருகின்றது என்று தெரிகிறது. (ற)

# சீன ஊடுருவலை தடுக்கும் தைரியம் அரசுக்கு இல்லை

## காங்கிரஸ் குற்றச்சாட்டு

புதுடில்லி, செப்.16

சீன ஊடுருவலைத் தடுக்கும் தைரியம் இந்திய மத்திய அரசுக்கு இல்லை என்று காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் மணீஷ் திவாரி குற்றம் சாட்டியுள்ளார்.

> “சீன ராணுவ ஊடுருவலைத் தடுக்கும் தைரியம் அரசுக்கு இல்லை. அதனால் ஊடுருவல்கள் அதிகரித்து வருகின்றன.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பஞ்சசீல கொள்கையின் 60ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு அண்மையில் இந்தியக் குழுவினர் சீனாவுக்குச் சென்றிருந்தனர். அப்போது சீனத் தரப்பில் அந்த நாட்டு வரைபடம் வழங்கப்பட்டுள்ளது. அதில் அருணாச்சலப் பிரதேசத்தின் பல பகுதிகள் சீனாவின் பகுதிகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளன.

அதேபோல் லடாக் [illegible]லையில் சீன ராணுவம் [illegible]போது ஊடுருவி உள்ளது. [illegible]ால் சீனாவின் அத்துமீறல்களை இந்திய மத்திய அரசு கண்டு கொள்ளாமல் தொடர்ந்து மௌனம் காக்கிறது. சீன ராணுவ ஊடுருவலை தடுக்கும் தைரியம் அரசுக்கு இல்லை. அதனால் ஊடுருவல்கள் அதிகரித்து வருகின்றன.- என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, காஷ்மீரின் லடாக் பகுதியில் சுமார் 500 மீற்றர் தொலைவுக்கு சீன ராணுவம் ஊடுருவி உள்ளது என்றும் அந்த நாட்டு வீரர்கள் கூடாரங்கள் அமைத்து தங்கியிருக்கின்றனர் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் இந்தியாவுக்கு வருகை தரவுள்ள நிலையில் இந்த ஊடுருவல் இருநாடுகளிடையே பதற்றத்தை அதிகரித்துள்ளது. (ற)



பதுளை மாவட்டத்துக்கு நேற்றுமுன்தினம் பயணம் செய்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்கு பல நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார். அப்போது அங்கு குழுமியிருந்த மக்களோடு அவர் சிநேகபூர்வமாக உரையாடினார். (ற)

## 24 ஆம் திகதி ஜனாதிபதி நியூயோர்க் பயணம்

கொழும்பு, செப்.16

நியூயோர்க் நகரில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறவுள்ள 69ஆவது பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 22ஆம் திகதி அமெரிக்கா செல்லவுள்ளார்.

24ம் திகதி நடைபெறவுள்ள இந்தப்பொதுக்கூட்டத்தில் உலகத் தலைவர்கள் மத்தியில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உரையாற்றவுள்ளார். ஜனாதிபதி யின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் வெளிவிவகார அமைச்சின் கண்காணிப்பு அமைச்சர் சஜின் டி வாஸ் குணவர்த்தன ஆகியோரும் ஜனாதிபதியுடன் செல்லவுள்ளனர்.

இதேவேளை- வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் ஜனாதிபதிக்கு முன்னரே செப்ரெம்பர் 19 ஆம் திகதி நியூயோர்க் செல்லவுள்ளார். (ற)

# நேச நாடான சீனாவையும் நூறு வீதம் நம்ப முடியாது

### கைத்தொழில் அமைச்சர் சம்பிக்க ரணவக்க கூறுகின்றார்

கொழும்பு, செப்.16

இலங்கையின் நேச நாடான சீனாவையும் நூறு வீதம் நம்ப முடியாது என்று தெரிவித்துள்ளார் கைத்தொழில் அமைச்சர் சம்பிக்க ரணவக்க.

வெளிநாடுகளிடம் நாட்டின் மின் நிலையங்களை ஒப்படைப்பது ஆபத்தானது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"நேச நாடான சீனாவிடம் கூட மின் நிலையங்களை ஒப்படைப்பது பொருத்தமற்றது. இவ்வாறு மின் நிலையங்களை ஒப்படைப்பதனால் ஆபத்துக்கள் ஏற்படக் கூடும். நுரைச்சோலை அனல் மின் நிலையத்தை சீனாவிடம் ஒப்படைப்பது பாதிப்புக்களை ஏற்படுத்தலாம்.

மின்வலு எரிசக்தி மாபியாக் கள் அரசை கவிழ்ப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளன. சக்தி வளப்பிரச்சினைகள் தொடர்பில் தீர்வு காண்பதற்கு அமைச்சரவை மாற்றுவதில் பயனில்லை"- என்று தெரிவித்துள்ளார். (ற)



## தம்புள்ளை பள்ளிவாசல் மீது பெற்றோல் குண்டு தாக்குதல்

கொழும்பு, செப்.16

தம்புள்ளை ஹைறியா ஜும்ஆ பள்ளிவாசல் மீது இனந்தெரியாதோரால் நேற்று பெற்றோல் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று அந்தப் பள்ளிவாசலின் நிர்வாக சபை உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

நேற்று அதிகாலை 12:40 மணியளவில் குறித்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

பள்ளிவாசலில் மிம்பர் அமைந்துள்ள இடத்தின் பின் பக்கத்தில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. குறித்த இடத்தில் பெற்றோல் நிரப்பிய போத்தல் உள்ளிட்ட சில பொருள்கள் காணப்பட்டன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் தம்புள்ளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து, பொலிஸார் பள்ளிவாசலுக்கு வருகை தந்து வாக்கு மூலங்களை பதிவு செய்துள்ளனர். (ற)

## புகலிடக் கோரிக்கையாளர் நாடு கடத்தப்படுவார்கள்

### இலங்கை அரசு திட்டவட்டம்



கொழும்பு, செப்.16

புகலிடக் கோரிக்கையாளர்களை நாடு கடத்தும் நடவடிக்கைகள் கைவிடப்படமாட்டாது என்று அரசு அறிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான முகவர் நிறுவனம் புகலிடக் கோரிக்கையாளர்கள் நாடு கடத்தப்படுவதைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டிருந்தது.

எனினும், வெளிநாட்டுப் புகலிடக் கோரிக்கையாளர்களை நாடு கடத்தும் நடவடிக்கைகள் எந்த காரணத்துக்காகவும் கைவிடப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் சட்ட திட்டங்களுக்கு அமைவாகவே புகலிடக் கோரிக்கையாளர்கள் நாடு கடத்தப்படுகின்றனர் என்று குடிவரவு குடியகல்வுத் திணைக்கள கட்டுப்பாட்டாளர் சூளாந்த பெரேரா தெரிவித்துள்ளார்.


பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளைச் சேர்ந்த புகலிடக் கோரிக்கையாளர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், நாடு கடத்தப்பட்டு வருகின்றனர் என்றும் - ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான முகவர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசு புகலிடக் கோரிக்கையாளர் குறித்த சர்வதேச சட்டங்களை மதித்துச் செயற்பட வேண்டுமென்று குறிப்பிட்டுள்ளது. புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு இலங்கை அரசாங்கம் எந்தவித உறுதிமொழியையும் வழங்கவில்லை என சூளானந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

நாட்டுக்குள் சட்டவிரோதமான முறையில் பிரவேசிக்கும் வெளிநாட்டுப் பிரசைகள் நாடு கடத்தப்படுவார்கள் என அவர் தெரிவித்துள்ளார். அதில் எந்த வித மாற்றமும் கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிறுவர் புகலிடக் கோரிக்கையாளர்களை தடுத்து வைப்பது தனிப்பட்ட ரீதியில் தமக்கு உடன்பாடு இல்லாத விடயமாகும் என குடிவரவு குடியகல்வு திணைக்களக் கட்டுப்பாட்டாளர் சூளாந்த பெரேரா சுட்டிக் காட்டியுள்ளார். (ற)

## பஸ் விபத்தில் 14 பேர் காயம்



கொழும்பு, செப்.16

காலி, தடல்லை எனும் இடத்தில் இரண்டு பஸ்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த 14 பேர் கராப்பிட்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கைப் போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றும் தனியார் பஸ் ஒன்றும் மோதியதனாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்துக்குக் குறித்த மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றது என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ற)

## இரண்டு வருடங்கள் முடிவதற்குள் ஊவாவில் வறுமை ஒழிக்கப்படும்

### ஐ.தே.கட்சியின் முதலமைச்சர் வேட்பாளர் ஹரின் பெர்னாண்டோ கூறுகின்றார்

கொழும்பு, செப்.16

ஊவா மாகாண சபையைக் கைப்பற்றி இரண்டு வருடங்களுக்குள் கந்தகெட்டிய, மீகஹக்கிலுவ மற்றும் ரிதிமாலியத்த ஆகிய பிரதேசங்களை நாட்டில் உள்ள 5 பிரதேச செயலக பிரிவுகளில் வறுமையான பிரதேசங்கள் என்ற பட்டியலில் இருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஐ.தே. கட்சியின் முதலமைச்சர் வேட்பாளர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

மீகஹக்கிலுவ பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"சொந்தப் பணத்தைச் செலவிட்டாவது பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு பால் வழங் கப்படும்.



நான் முதலமைச்சராக தெரிவானால், அரசின் பணம் தேவையில்லை.

வெளிநாட்டில் இருந்து நிதியுதவியை பெற்று ஊவா மாகாணத்தை முன்னேற்றி, முன்னேறிய மாகாணமாக இரண்டு மூன்று வருடங்களுக்குள் மாற்றி காண்பிப்பதாக தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார். அதனால், அரசின் நிதியுதவியை எதிர்பார்க்காது மாகாணத்தை முன்னேற்ற நாங்கள் நடவடிக்கை எடுப்போம்.

எனக்கு 34 வயதே ஆகிறது. நான் அரசியலில் பெரிய தீர்மானம் ஒன்றை எடுத்தவன். அலை மாறி அடிக்க ஆரம்பித்துள்ளது என்பதை நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இந்தமுறை சுனாமி அலை போல் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்று அரசு அமைக்கும் பணிகளை ஆரம்பிப்போம்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

## ரிலாக்ஸா வாசியுங்க



ஒரு தம்பதியினர் கோயிலுக்குச் சென்றனர். அங்கு ஒரு கிணறு இருந்தது. அது விருப்பத்தை நிறைவேற்றும் கிணறு. அதனிடம் சென்று கணவன் தன் விருப்பத்தைக் கூறிவிட்டுவந்தான்.

பிறகு மனைவி அந்தக் கிணற்றுக்கு அருகே சென்றாள். அவளுக்கு உயரம் காணாததால் கொஞ்சம் எட்டிப் பார்த்தாள். அவ்வளவுதான், அவள் கால் தவறி கிணற்றுக்குள் விழுந்துவிட்டாள்.

கணவன் பதறியபடி,உண்மையாகவே பலிக்கின்றதே என்றான்.

# ரெஜினாவின் முத்தம்



கொஞ்ச நேரமே வந்தாலும் அவருடைய கதாபாத்திரத்தை நச் என்று உருவாக்கியிருக்கிறாராம் இயக்கு நர். அந்த நச்சில் இச் என்ற முத்தக் காட்சியும் அடக்கம் என்பதுதான் ஆச்சரியமான ஒரு விடயம். ரவி தேஜா நடிக்கும் படங்களில் கவர்ச்சிகரமான கதாநாயகிகள் வருவார்களே தவிர.முத்தக் காட்சிகளோ, ஆபாசமான காட்சிகளோ இருக்கவே இருக்காது. அவருக்கு பெண் ரசிகைகளும்.குடும்பத்துடன் படம் பார்க்கும் ரசிகர்களும் அதிகம். ஆனால், பவர் படத்தின் இயக்குநரான கே.எஸ்.ரவீந்திராகேட்டுக் கொண்டதற்கிணங்க ரவிதேஜா அந்தமுத்தக் காட்சியில் நடிக்கச் சம்மதித்தாராம். படத்தில் உள்ள அந்தக் காட்சியைப் பற்றி இதுவரை வெளியில் சொல்லாமல் இருந்திருக்கிறார்கள். படம் பார்க்கும் ரசிகர்களுக்கு ஒரு இன்ப அதிர்ச்சியைக் கொடுக்கத்தான் அதை சொல்லாமல் விட்டார்களாம்.

ஒருபாடல் காட்சியில்தான் அந்த முத்தக் காட்சி வைக்கப்பட்டிருக்கிறதாம். எந்தஉறுத்தலும் இல்லாமல் மென்மையான விதத்தில்தான் அந்தக் காட்சி எடுக்கப்பட்டதாம். தமிழ்ப் பக்கம் வந்தாலும் இப்படி நடிப்பாங்களா ரெஜினா...?

கேடிபில்லாகில்லாடிரங்கா படத்தின் நாயகி ரெஜினா. அவர் தற்போது தெலுங்கிலும் முன்னணி நடிகைகளில் ஒருவராக வலம் வந்துகொண்டிருக்கிறார். சிலதினங்களுக்குமுன் வெளியான பவர் படத்தில் முன்னணி நடிகரான ரவிதேஜாவுடன் ஜோடியாக நடித்திருக்கிறார். இந்தப் படத்தில் ஹன்சிகாதான் முக்கியமான கதாநாயகி என்றாலும் பிளாஷ் பக் காட்சிகளில் வரும் நாயகியாக ரெஜினா நடித்திருக்கிறார்.




பொதுநலம் கருதி

## நீ சராசரிகளிடமிருந்து வித்தியாசப்பட்டு தனித்துவத்துடன் செயற்பட்டால்...

மக்கள் முதலில் உன்னைப் பார்த்து சிரிப்பார்கள்...
கேலி செய்வார்கள்...
உன்னிடம் சவால்விடுவார்கள்...
உறுதியுடன் நின்றால்...
உன் வெற்றியைக் கூர்ந்து கவனிப்பார்கள்....
பிறகு உன்னைப் போல் ஆகவேண்டுமே என்று ஏங்குவார்கள்...!

## விடைபெற்றது உயரமான நாய்

உலகின் உயரமான நாய் என்றுபுகழ் பெற்ற கிரேட் டேன் வகைநாய் அமெரிக்காவின் மிச்சிகன் மாகாணத்தில் இறந்துள்ளது. அதன் வயது 5 ஆகும். கெவின் டூரலாங் என்பவருக்குச் சொந்தமானஅந்தநாயின் பெயர சீயஸ் என்பதாகும். இதன் முன்னங்கால்கள் 44 அங்குலஉயரம். பின்னங்கால்கள் மூலம் நின்றால் 7 அடி 4 அங்குல உயரம் இருக்கும். இந்தஅசாதாரணமான உயரத்தால் இது 2012 ஆம் ஆண்டு உலகின் உயரமான நாய் என்று கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பெற்றது.

இதனுடைய எடை 75 கிலோகிராம் ஆகும். எனவே இது இரண்டுவாரங்களுக்கு 13.6 கிலோகிராம் எடை உணவை உட்கொண்டுவந்தது. தன்னுடைய உயரத்தால் புகழ்பெற்ற இந்த நாய் உள்ளூரில் பள்ளிக் குழந்தைகளைச் சந்தோஷப்படுத்தியும், மருத்துவமனைகளில் நோயாளிகளை மகிழ்விக்கவும் பயன்படுத்தப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

இந்தநிலையில் கடந்தவாரம் உலகின் உயரமானநாய் என்ற பெயரும் அதற்கு ஏற்பட்டது. சில நாள்களின் பின் அது உயிரிழந்துள்ளது.

# துளசியின் கண்ணீர் எப்போதுமுடியும் ?

எனக்கு மட்டும் ஏன் இப்படி கஷ்டத்துக்குமேல் கஷ்டமாகவருகின்றது.... இது தென்றல் தொடரின் கதாநாயகி துளசியின் கேள்வி. சன் தொலைக் காட்சியில் 2009 ஆம் ஆண்டு டிசெம்பர் 7 ஆம் திகதிதொடங்கியது தென்றல் தொடர்.

எப்படித்தான் வருடக் கணக்கில் விடாமல் இந்த தொடர்களைப் பார்க்கின்றார்களோ? என்றுகேள்வி கேட்பவர்களுக்கு இல்லத்தரசிகள் சொல்லும் பதில், தொடரில் வரும் கதாநாயகிகள் துளசி,சத்யா, ரேகா, கல்யாணி, இந்து எனஅனைவருமே எங்களின் குடும்பத்தில் ஒருவராகத்தான் பார்க்கிறோம். அதனால்தான் விடாமல் தொடரைப் பார்ப்பதோடு கதாநாயகிகள் அழும்போது நாங்களும் அழுகிறோம் என்கின்றனர். அதுவும் இந்த துளசி தினமும் அழுகின்றதே? ஏன் இப்படி அழுதுகொண்டே இருக்கிறாய்? என்று நேரடியாகவே கேட்கும்ரசி கர்களும் இருக்கத்தான் செய்கின்றனர்.

நடுத்தர குடும்பத்தின் கதைதான் தென்றல். அம்மா வீட்டை விட்டு ஓடிப்போகவே அப்பா மறுமணம் செய்துகொள்கிறார். சித்தியின் கொடுமை - அப்பாவின் பாராமுகம் என்று துளசியின் அழுகையும் சோகமும் ஆரம்பமாகிறது.

துளசியை பெண் கேட்டுவரும் வயதான நபருக்கு திருமணம் செய்து வைக்க முடிவுசெய்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்கின்றனர். ஆனால் அதிலிருந்து காப்பாற்றி திருமணம் செய்துகொள்கிறான் கதாநாயகன் தமிழ்.அதுநாள் வரை சித்தியின் கொடுமைக்கு உள்ளான துளசிக்குப் பின்னர் மாமியார் கொடுமை தொடங்குகின்றது. துளசியை விவாகரத்து செய்துவிட்டு மகனுக்கு பணக்காரப் பெண் சாருவை மணமுடிக்க திட்டமிடுகின்றார் மாமியார்.

அப்படி இப்படி என்று ஒரு வழியாக ஆயிரத்து 200 பகுதிகளை (எபிசோடுகளை) நடத்தி முடித்துவிட்டனர். துளசியின் தோழிகள் கல்யாணி,தீபாவின் வாழ்க்கையும் கேள்விக்குறியாகத்தான் இருக்கிறது. ஒரே கண்ணீர்தான்.



படிப்புக்காக துளசி பாண்டிச்சேரிக்குச்செல்கின்றாள். அவளது கணவன் தமிழ் மாயமாகிவிடுகி றான். அவனைத் தேடி அலைகிறாள் துளசி. கொலைப் பழியும் விழவே சிறைக்குச்சென்றுபின்னர் மீண்டு வருகின்றார். வந்த பின்னரும் அழுகை தான்.

ஒரு வழியாக கடத்தல் கும்பலிடம் இருந்துதப்பி வந்தும் கணவனின் நிலையைக் கண்டு ஒரே கண்ணீர் தான் துளசிக்கு. தென்றல் தொடர் ஆயிரத்து 235 எபிசோடுகளைகடந்துவிட்டது. சன் தொலைக் காட்சியில் அதிக நாள்கள் ஒளிபரப்பான கோலங்கள், திருமதி செல்வம் தொடர்களின் சாதனையை தென்றல் முறியடித்துவிட்டது. ஆனால் துளசியின் கண்ணீர் இப் போதைக்கு முடிவதாகத் தெரியவில்லை.





# டெட்டோலின் ‘தூய்மை வீரர்கள்’

இலங்கை சாரணர்கள் சம்மேளனத்துடன், இலங்கையின் நம்பிக்கையை வென்ற குடும்ப பாதுகாப்பு வர்த்தக நாமமான டெட்டோல் இணைந்து பாடசாலை மாணவர்களிடையே கைகளை தூய்மையாக வைத்திருக்கும் சுகாதார செயற்திட்டத்தை முன்னெடுக்க முன்வந்துள்ளது.

சாரணத்துவத்தின் மூலம் இளைஞர்களுக்கு சமமான செயற்பாடுகளை முன்னெடுத்து சுய ஆளுமையையும் கட்டியெழுப்பிக் கொள்ள முடிவதுடன், சமூகத்தையும் கட்டியெழுப்பிக் கொள்ள முடியும். இந்த ஆக்கத்திறன் வாய்ந்த சாரணர்களுக்கு ஆரோக்கியமான வாழ்க்கைத்தரத்தை ஏற்படுத்திக் கொடுக்க டெட்டோல் முன்வந்திருந்தது. அத்துடன், அவர்கள் வசிக்கும் சூழலில் நேர்த்தியான மாற்றத்தை ஏற்படுத்தவும் முனைந்திருந்தனர்.

டெட்டோலின் புத்தாக்கம் நிறைந்த 'டெட்டோல் தூய்மை வீரர்கள்' திட்டத்தினூடாக 150,000 மாணவர்களை சென்றடைய திட்டமிடப்பட்டிருந்தது.

மாதம்பே நகரில் இடம்பெற்ற சர்வதேச ஜம்போறியில் பங்குபற்றிய சாரணர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு டெட்டோலுக்கு சிறந்த சந்தர்ப்பம் கிடைத்திருந்தது.

3500க்கும் அதிகமான சாரணர்கள் 30க்கும் மேற்பட்ட நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தி இந்த சாரணர் ஜம்போறியில் பங்கேற்றிருந்தனர்.

ஜம்போறி நிகழ்ச்சி நிரலில் சுகாதாரம் தொடர்பிலான விசேட திட்டங்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், சாரணர்களுக்கான உள்ளக மற்றும் வெளியக சாகச செயற்பாடுகளும், முகாமிடல், சமைத்தல், முகாம் எரித்தல் மற்றும் மேலும் பல மேடை செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

டெட்டோலின் சர்வதேச தொனிப்பொருளான 'சுகாதாரத்துக்கான செயற்திட்டம்' என்பதற்கு அமைவாக கிருமி அகற்றல், தூய்மை மற்றும் முதலுதவி ஆகியவற்றில் அனுபவத்தை பகிரும் வகையில் சாரணர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தியிருந்தது. இந்த ஜம்போறி நிகழ்வில் வைத்தியர்கள் மற்றும் பொது சுகாதாரப் பரிசோதகர்களும் பங்கேற்றிருந்தனர். இவர்களின் மூலம் சாரணர்களுக்கு கரங்களின் தூய்மை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டிருந்தது. 'டெட்டோல் தூய்மை வீரர்கள்' எனும் பட்டமும் இவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

புதிய டெட்டோல் தூய்மை வீரர் தூதுவர்கள் என்பது பங்குபற்றியிருந்த சாரணர்களை ஊக்குவிக்கும் வகையில் அமைந்திருந்தது. இந்த சாரணர்கள் தமது பாடசாலைகளுக்கு திரும்பிச் செல்லும்போது ஏனைய சக மாணவர்களுக்கும் கரங்களை தூய்மையாக வைத்திருக்க வேண்டியதன் முக்கியத்துவம் பற்றிய விளக்கங்களை வழங்குவார்கள். குறிப்பிடத்தக்க மாணவர்களுக்கு பயிற்றுவிக்கக்கூடிய அளவுகளுக்கமைய (வெண்கலம், வெள்ளி மற்றும் தங்க) விருதுகளும் வழங்கப்பட்வுள்ளன. (த)

# அழகுக்கலை ஆலோசகர்களுக்கு நேச்சர்ஸ் சீக்ரட்ஸ் புலமைப்பரிசில்

அழகுக்கலை ஆலோசகர்களுக்கு தொடர்ச்சியாக இரண்டாவது தடவையாகவும் வெளிநாட்டு புலமைப்பரிசில்களை வழங்கும் நேச்சர்ஸ் சீக்ரட்ஸ் இலங்கையின் முதற்தர மூலிகை ஒப்பனைப் பொருள்களான நேச்சர்ஸ் சீக்ரட்ஸ் உற்பத்திகளை தயாரிக்கும் நேச்சர்ஸ் பியூட்டி கிரியேஷன்ஸ் நிறுவனம் வர்த்தக நடவடிக்கைகளுக்கு அப்பால் பல்வேறு சமூக மேம்பாட்டு திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி நாட்டின் அபிவிருத்தி பணிகளுக்கு தமது உதவிகளை வழங்கியுள்ளது.

அத்தகைய பணியின் மேலும் ஒரு மைல்கல்லாக இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் அழகுக்கலை ஆலோசகர்களின் திறன்களை அபிவிருத்தி செய்யும் நோக்கில் அவர்களுக்கு இரண்டாவது தடவையாகவும் வெளிநாட்டு புலமைப்பரிசில் களை வழங்க நேச்சர்ஸ் சீக்ரட்ஸ் நிறுவனம் முன்வந்துள்ளது.



இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையினால் நேச்சர்ஸ் சீக்ரட்ஸ் நிறுவனத்திடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய இந்த வெளிநாட்டு புலமைப்பரிசில் திட்டம் வழங்கப்பட்டு வருகின்றது.

2013 வருடம் முதல் 2018 வரையான காலப்பகுதியில் நடைமுறைப்படுத் தப்படவுள்ள இந்த வெளிநாட்டு புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் அழகுக்கலை நிபுணர்கள் 56 பேருக்கு தாய்லாந்தின் உயர்தர அழகுக்கலை பயிற்சிபாடசாலையில் தங்குமிட வசதி உட்பட அனைத்து செலவுகளுடன் 7 நாள்கள் கற்பதற்கான அனைத்து செலவுகளையும் நேச்சர்ஸ் சீக்ரட்ஸ் நிறுவனம் ஏற்றுள்ளது.

இதன் முதற்கட்டம் கடந்தாண்டு ஒகஸ்ட் மாதத்தில் ஆரம்பமானதுடன் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் 10 ஆலோசகர்கள் மற்றும் ஓர் அதிகாரி ஆகியோர் வெளிநாட்டு பயிற்சிகளுக்காக தாய்லாந்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இரண்டாவது திட்டத்துக்காக இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் 10 அழகுக்கலை ஆலோசகர்களுக்கு வெளிநாட்டு புலமைப்பரிசில் திட்டத்தின்கீழ் தாய்லாந்தில் இடம்பெறவுள்ள பயிற்சிகளுக்கான உத்தியோகபூர்வ அனுசரணை வழங்கும் நிகழ்வு அண்மையில், நாராஹேன்பிட்டியில் அமைந்துள்ள இளைஞர் விவகாரம் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சில் இடம்பெற்றது. இளைஞர் விவகாரம் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெருமவின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு நேச்சர்ஸ் பியூட்டி கிரியேஷன்ஸ் நிறுவனத்தின் தலைவர், முகாமைத்துவ பணிப்பாளர் சமந்த குமாரசிங்க, அமைச்சின் செயலாளர் பி.விஜேரத்ன மற்றும் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் தலைவர் கேணல் தர்ஷன ரத்நாயக்க மற்றும் இரண்டு நிறுவனங்களினதும் உயர் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர். (த)

# CA Sri Lanka பிரயோக கணக்கீட்டு பட்டமானது B.Sc Applied Accounting மாணவர்களின் வரவேற்பையும் பெற்றுள்ளது

பட்டயக் கணக்காளர் இலங்கையின் பிரயோக கணக்கீட்டு பட்டப்படிப்புக்கு ஓமான் (Oman) நாட்டின் கணிசமான மாணவர்கள் பதிவு செய்துள்ளமையானது அதன் அங்கீகாரத்தை மேன் மேலும் உயர்த்தியுள்ளது.

இந்தப் பட்டப்படிப்பானது இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டதாகும். மேலும் ஓமான் நாட்டின் முன்னணி மசகு எண்ணெய் நிறுவனம் தமது நிறு வனத்தில் பணிபுரிய பல பிரயோக கணக்கீட்டு பட்டத்தினை பூர்த்திசெய்ய வாய்ப்பளித்துள்ளது.




குறித்த ஒரு ஓமானிய பல்தேசிய நிறுவனத்தின் ஊழியர் பயிற்சி அபிவிருத்தி நிர்வாகப் பொறுப்பதிகாரி அண்மையில் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்துக்கு வருகை தந்த தோடு தமது மாணவர்களை இந்த பட்டத்தில் இணைப்பதற்கான காரணமாக இந்தப்பட்டமானது பல்வேறு முக்கிய விடயங்களை உள்ளடக்கிய தாகவும், நடைமுறைக்கு மிகப் பொருத்தமான பாடத்திட்டத்தை கொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டார். மேலும் மாணவர்கள் கற்பதற்கான அதிசிறந்த உட்கட்டமைப்பு வசதி களை CA இலங்கை நிறுவனம் கொண்டிருப்பதாகவும் கூறினார்.

இந்தப் பட்டப்படிப்புக்கான மூன்றாவது கல்வியாண்டுக்காக புதிய மாணவர் பதிவு தற்போது இடம்பெறுகின்றது. மேலும் தற்போது CA இலங்கை குறித்த இந்தப்பட்டப்படிப்பு தொடர்பில் தெற்காசிய நாடுகளையும் தெளிவுபடுத்துவதை முன்னிலைப்படுத்தியுள்ளது.

இது இலங்கையின் ஏனைய தேசிய பல்கலைக்கழகங்களின் பட்டங்களுக்கு சமமான அங்கீகாரத்தை அந் நாடுகள் பெற்றுள்ளன.

இந்தப்பட்டமானது நிதித்துறையில் தற்போது காணப்படும் சவால்களை சிறப்பாக எதிர்கொள்வதற்கும் தரமான நிதித்துறைசார் மனித வளங்களை உருவாக்குவதையும் மையமாகக் கொண்ட ஓர் உயர்தொழில் சார் பட்டமாகும்.

இந்த பட்டமானது பலதுறைசார்ந்த பூரண அறிவை வழங்கும், குறிப்பாக வணிகத் தொடர்பாடல், மனித வள முகாமைத்துவம், தகவல் தொழில் நுட்பம், நிறுவனசட்டம், பொருளியல், செயற்திட்ட முகாமைத்துவம் போன்ற பாடங்களை உள்ளடங்கியதாகும்.

மேலும், முற்றுமுழுதாக பல்கலைக் கழகங்களில் முழு நேரமாக விரிவுரைகளில் பேராசிரியர்களின் கற்பித்தலோடு உயர்தொழில் நிபுணர்களின் கற்பித்தலும் இந்தப் பட்டத்துக்கு மேலும் வலுசேர்க்கின்றது.

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் (CA நிறுவனம்) கணக்கீட்டுத்துறையில் கல்வித்தகைமையான BSc பட்டத்தையும் தொழில் சார் தகைமையை வழங்கும் ஒரேயொரு தனித்துவமான நிறுவனமாகும். இந்தக்கற்கை நெறியின் பிரதான நோக்கம் தொழில்துறை தொடர்பான பூரண அறிவையுடைய தொழில் வாய்ப்பை பெறத்தக்கதான பட்டதாரிகளை உருவாக்கி அவர்களை கணக்கீட்டுத்துறையில் உயர்ந்த இடத்துக்கு இட்டுச்செல்லல் ஆகும்.

இந்தப்பட்டமானது ஆங்கில மொழியில் வழங்கப்படுவதோடு தொழில்சார் பட்டய கணக்கீட்டு தொழில்சார் கற்கை நெறிகளுக்கான விலக்களிப்புகளையும் வழங்குகின்றது.

இந்தப்பட்டமானது இரு கட்டங்களில் மாணவர்களுக்கான வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த பட்டத்தை மூன்று ஆண்டுகளில் ஒரு பொது (General) பட்டத்தை பூர்த்தி செய்யலாம்.

இது ஆறு தவணைகளை கொண்டதாகும். மற்றைய கட்டம் இந்த பட்டத்தின் விசேட பட்டத்தை (Special) கொண்டிருப்பதோடு இது நான்கு ஆண்டுகளை கொண்டிருப்பதோடு இது எட்டு தவணைகளை கொண் டதாகும்.

**இந்த பட்டமானது பல துறைசார்ந்த பூரண அறிவை வழங்கும், குறிப்பாக வணிகத் தொடர் பாடல், மனித வள முகாமைத்துவம், தகவல் தொழில் நுட்பம், நிறுவன சட்டம், பொருளியல், செயற்திட்ட முகாமைத் துவம் போன்ற பாடங்களை உள்ளடங்கியதாகும்.**

இந்த பட்டத்துக்கான தகைமைகளாக இலங்கை க.பொ.த (உயர்தர) பரீட்சையில் 3 சித்திகளை அல்லது லண்டன் உயர்தரத்தின் 3 சித்திகளை கொண்டிருத்தலாகும். உயர்தரப்பெறுபேற்றுக்காகக் காத்திருக்கும் மாணவர்களும் இந்த பட்டத்தின் தற்போதைய பதிவில் இணையலாம்.

## முழங்காவில் பிரதேசத்தில் பப்பாசிச் செய்கை வெற்றி

கிளிநொச்சி, செப் 16

கிளிநொச்சி மாவட்டத்தில் முழங்காவில் பிரதேசத்தில் பப்பாசிச் செய்கைக்கு தெரிவு செய்யப்பட்ட 100 பயனாளிகளில் 80 வீதமானவருக்குப் பப்பாசிக் கன்றுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர்களுடைய செய்கைகள் நல்ல முறையில் நடைபெற்று வருவதாகவும் கிளிநொச்சி மாவட்ட விவசாயப் பிரதி பணிப்பாளர் எ.செல்வராசா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பழப்பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் வகையில் முழங்காவில் பிரதேசம் தெரிவு செய்யப்பட்டு அங்கு பப்பாசி உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன் அடிப்படையில் 100 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொரு பயனாளிகளுக்கும் தலா 170 கன்றுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

80 வீதமான பயனாளிகளுக்கு இவை வழங்கப்பட்டு அவர்கள் பயிர்ச்செய்கை களில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த கால வறட்சி பாதிப்பை ஏற்படுத்திய போதும் ஓரளவுக்கு விவசாயிகளின் முயற்சியால் அவை பாதுகாக்கப்பட்டுள்ளன எனவும் அவர்மேலும் கூறினார். (கு-55)

## வன்னேரிக் குளத்துக்கு இ.போ.ச பஸ் இல்லை

கிளிநொச்சி, செப் 16.

கிளிநொச்சி வன்னேரிக்குளத்துக்கான அரச பஸ் சேவை நடைபெறாமையினால் திருமுறிகண்டி, அமதிபுரம், அக்கராயன் கிழக்கு, யூனியன்குளம் ஆகிய கிராமங்களின் மக்கள் போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

1990ஆம் ஆண்டுவரை கிளிநொச்சி நகரத்திலிருந்து திருமுறிகண்டி வழியாக அக்கராயன், ஸ்கந்தபுரம் வரை பயணிக்கும் அரச பஸ் வன்னேரிக் குளத்தின் சோலைக் கிராமத்தினைச் சென்றடைந்து மீளவும் கிளிநொச்சி நகரத்தினை வந்தடையும். வன்னேரிக்குளத்தில் இருந்து காலையில் காரைநகர் நோக்கியும் அரச பஸ் பயணித்துத் திரும்புவது வழக்கம். தற்போது மேற்படி வழித் தடத்தில் அரச, தனியார் பஸ் சேவைகள் நடைபெறுவதில்லை.

இதன் காரணமாக அமதிபுரம் கிராம மக்கள் நீண்ட தூரம் பயணித்து திருமுறிகண்டிக்கோ, அக்கராயனுக்கோ நடந்து செல்ல வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

அரச பஸ் சேவை நடைபெறுமானால் அமதிபுரத்தின் 20 குடும்பங்களும், அமதி அ.த.க.. அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம், அக்கராயன் மகா வித்தியாலயம், ஆரோக்கியபுரம் அ.த.க, ஆனைவிழுந்தான் அ.த.க. ஐயனார்புரம் அ.த.க. வன்னேரிக்குளம் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் ஆசிரியர்களும் மாணவர்களும் பயனடைவார்கள்.

அக்கராயனுக்கும் திருமுறிகண்டிக்கும் இடையிலான 10 கிலோமீற்றர் தூரத்துக்கு மீள்குடியேற்ற ஆரம்பத்திலிருந்து போக்குவரத்துச் சேவைகள் இடம்பெறுவதில்லை.

இந்நிலையில் கிளிநொச்சி நகரத்திலிருந்து திருமுறிகண்டி வழியாக வன்னேரிக்குளம் வரை அரச பஸ் சேவையை நடத்துமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (கு-18)

# படையினர் வசமுள்ள காணிகள் நெற்செய்கைக்கு விடுவிக்கப்படும்

## கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு உறுதிமொழி

**காணிகளைச் சுற்றி அடைத்திருந்த வேலிகள் அகற்றப்பட்டு வருவதுடன் எதிர்வரும் 25ஆம் திகதி இவற்றை உரியவர்களிடம் கையளிப்பதாக உறுதியளித்திருப்பதாகவும், இப்பகுதியில் கால்நடைகளைப் பிடிப்பதற்கும் அனுமதி வழங்குவதாகவும் கூறப்பட்டுள்ளது.**

முல்லைத்தீவு, செப். 16

முல்லைத்தீவு கேப்பாபுலவுப் பகுதியில் இராணுவத்தினர் மற்றும் விமானப்படையினரின் ஆக்கிரமிப்பில் உள்ள வயற் காணிகள் இவ்வாண்டு காலபோகச் செய்கைக்காக எதிர்வரும் 25 ஆம் திகதி விவசாயிகளிடம் கையளிப்பதற்கு உறுதியளிக்கப்பட்டுள்ளதாக இப்பகுதி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் இ.பரமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கேப்பாப்புலவு வாவெட்டிகுளம், ஐயன்கன்குளம் ஆகியவற்றின் கீழ் 67 க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்குச் சொந்தமான சுமார் 320 ஏக்கர் வரையான நெற்செய்கைக் காணி தொடர்ந்தும் இராணுவத்தினரின் பிடியில் உள்ளது. இதனை தமது பயிர்ச் செய்கைக்கு விடுவித்து தருமாறு இப்பகுதி விவசாயிகள் தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை இந்தப் பகுதியில் முட்கம்பி வேலிகள் அகற்றப்பட்டுக் கமக்கார அமைப்பு, கிராம அபிவிருத்திச் சங்கம், விவசாயிகள் ஆகியோர் இராணுவ உயர் அதிகாரிகளிடம் சென்று வயல் நிலங்களைப் பாரவையிட்டு அடையாளப்படுத்தியுள்ளனர்.

இதனை அடுத்து ஐயன்கன் குளத்தின் கீழ் 32 விவசாயிகளுக்குச் சொந்தமான 82 ஏக்கர், வாவெட்டிக்குளத்தின் கீழ் 34 விவசாயிகளுக்குச் சொந்தமான 240 ஏக்கர் வரையான நிலப்பரப்பை விவசாயிகளுக்கு வழங்குவதற்கு விமானப் படையினரும் 59ஆவது படைப் பிரிவும் உடன்பட்டுள்ளதாகவும், காணிகளைச் சுற்றி அடைத்திருந்த வேலிகள் அகற்றப்பட்டு வருவதுடன் எதிர்வரும் 25ஆம் திகதி இவற்றை உரியவர்களிடம் கையளிப்பதாக உறுதியளித்திருப்பதாகவும், இப்பகுதியில் கால்நடைகளைப் பிடிப்பதற்கும் அனுமதி வழங்குவதாகவும் பரமேஸ்வரன் தெரிவித்தார். (கு-55)

## அனர்த்த முகாமை குறித்து கிளிநொச்சியில் செயலமர்வு

கிளிநொச்சி, செப். 16

பாடசாலைகளின் அதிபர்கள், அனர்த்த முகாமைத்துவத்துடன் பணிபுரியும் தொண்டு நிறுவன உத்தியோகத்தர்களுக்கான அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான செயலமர்வு கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகத்தால் நடத்தப்பட்டுள்ளது.

மேற்படி செயலமர்வு கடந்த 10 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 1.30 மணிவரை கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தில் அனர்த்த முகாமைத்துவத்துக்குப் பொறுப்பான ஆசிரிய ஆலோசகர் திருக்குமார் தலைமையில் நடைபெற்றது.

இந்தச் செயலமர்வில் கிளிநொச்சி கல்வி வலயத்தின் கீழ் உள்ள பாடசாலைகளின் அதிபர்கள், அனர்த்த முகமைத்துவத்துடன் பணிபுரியும் தொண்டு நிறுவனங் களின் பணியாளர்கள் ஆகியோர் பங்குபற்றியிருந்ததுடன் கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவத்தின் உதவிப்பணிப்பாளர், உத்தியோகத்தர்கள் மற்றும் கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் க.முருகவேல் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்தச் செயலமர்வில் முக்கியமாக கிளிநொச்சி மாவட்டத்தின் கீழ் உள்ள பாடசாலைகளில் குளவிக்கொட்டுக்கு மாணவர்கள் இலக்காகுவது தொடர்பிலும், பாடசாலைகளில் காணப்படும் குளவிக் கூடுகளை இனங்கண்டு அகற்ற நடவடிக்கை மேற்கொள்வது குறித்தும் கவனம்செலுத்தப்பட்டது. (கு-426)



அகில இலங்கை இந்து மாமன்றத்தின் வன்னிப் பிராந்திய அலுவலகத்துக்கு நேற்றுக் காலை திருமுறிகண்டிப் பகுதியில் அடிக்கல் நாட்டப்பட்டது. தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன் அடிக்கல்லை நாட்டி வைத்தார். (கு)

## மொழி அமைச்சின் நூல்களை திருநகரில் பெறுவதற்கு ஏற்பாடு

கிளிநொச்சி, செப்.16

தேசிய மொழிகள் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சினால் வெளியிடப்பட்ட நூல்களை கிளிநொச்சி திருநகரில் அமைந்துள்ள அமைச்சின் மாகாண மத்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாமெனக் கிளி நொச்சி மாவட்ட அலுவலர் ந.உமாநாத் அறிவித்துள்ளார்.

அமைச்சின் வெளியீடுகளான பேச்சுத் தமிழ், எழுத்துத் தமிழ், பேச்சு சிங்களம், சிங்களத்தில் தமிழ், இலகு தமிழ், இலகு சிங்களம், இலகு தமிழ்ப் பயிற்சி, புத்தகம், தமிழ் மொழி கற்போம், நாம் சிங்களம் தமிழ் ஆங்கிலம் கற்போம் ஆகிய நூல்களைப் பெற்றுக் கொள்ள முடியுமெனவும் மேலதிக தகவல்களை 0212283660, 0750539415 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு கேட்டறியலாமெனவும் அறிவித்துள்ளார். (கு-9)

## ஜீவநகரில் மினி சூறாவளியால் பாதிக்கப்பட்டோருக்கு உதவி

ஒட்டுசுட்டான்,செப்.16

துணுக்காய், ஜீவநகர் பகுதியில் கடந்த 12 ஆம் திகதி வீசிய மினி சூறாவளியால் பாதிக்கப்பட்ட குடும்பங் களுக்கு ஒட்டுசுட்டான் புஸ்பராணி தொண்டு நிறுவனத்தால் நேற்று முன் தினம் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை கடும் மழையுடன் கூடிய மினி சூறாவளி வீசியதில் அந்தப் பிரதேசத்திலுள்ள வீடுகள் சேதங்களுக்குள்ளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரச நிறுவனங்களோ, தனியார் அமைப்புக்களோ உதவி செய்ய முன் வந்திராத நிலையில் மேற்படி தொண்டு நிறுவனம் அவர்களுக்கு உலர் உணவுப்பொருள்கள் வழங்கியுள்ளது. (கு-500)

## பிரமநாதன்குளம் பகுதியில் வெதுப்பகத்துக்கு அடிக்கல்

வவுனியா, செப். 16

வட மாகாண சபையால் மீன்பிடி, கிராம அபிவிருத்தி அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து வவுனியா பிரமநாதன் குளம் பகுதியில் அந்தப் பகுதி மக்கள் பயன்பெறும் வகையில் வெதுப்பகம் ஒன்று அமைப்பதற்கான அடிக்கல் ந டும் நிகழ்வு கடந்த 12 ஆம் திகதி இடம்பெற்றது.

மீன்பிடி, கிராம அபிவிருத்தி அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து முன்னெடுக்கும் வேலைத்திட்டத்தின் ஒரு கட்டமாக பிரமநாதன்குளம் கிராம அபிவிருத்திச் சங்கம் ஊடாக 15 லட்சம் ரூபா செலவில் வெதுப்பகம் அமைக்கப்படவுள்ளது.

காலை 9.00மணிக்கு இடம் பெற்ற இந்த நிகழ்வில் வட மாகாண மீன்பிடி மற்றம் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் எஸ்.டெனீஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், வினோநோகராதலிங்கம், வட மாகாண மீன்பிடி மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சின் வவுனியா மாவட்ட இணைப்பாளர் செ.மயூரன், வட மாகாண சபை உறுப்பினர்களான இ.இந்திரராஜா, தியாகராஜா ஆகியோர கலந்துகொண்டனர். (கு-421)

## கொள்ளைகளுடன் தொடர்புள்ள ஐந்து பேருக்கு விளக்கமறியல்

கிளிநொச்சி, செப் 16

கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளில் பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய ஐந்து சந்தேக நபர்களையும் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறும், அன்றைய தினம் அடையாள அணிவகுப்பை மேற்கொள்ளுமாறும் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் எஸ்.சிவ பாலசுப்பிரமணியம் உத்தரவிட்டார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய ஐந்து சந்தேக நபர்களைக் கைது செய்த பொலிஸார், ஓட்டோ, மோட்டார் சைக்கிள் ஆகியவற்றையும் மீட்டு ஆரம்ப கட்ட விசாரணைகளின் பின்னர் கடந்த வெள்ளிக்கிழமை மன்றில் முற்படுத்தினர்.

குறித்த சந்தேக நபர்களை நேற்று முன் தினம் வரை பொலிஸ் காவலில் வைத்து விசாரணை மேற்கொள்ள நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் பதில் நீதிவான் எஸ்.சிவபால சுப்பிரமணியம் முன்னிலையில் அவரது வாசஸ்தலத்தில் இவர்கள் மீண்டும் முற்படுத்தப்பட்டனர்.

குறித்த ஐந்து சந்தேக நபர்களையும் எதிர்வரும் 26 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும், அன்றைய தினம் அடையாள அணி வகுப்பை மேற்கொள்ளுமாறும் பதில் நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (கு-55)

## ஆழியவளை- யாழ்ப்பாணம் பஸ் சேவைகள் விஸ்தரிப்பு

ஆழியவளை- யாழ்ப்பாணம் பிரதான பாதையில் மேலும் ஒரு தனியார் பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஆழியவளையில் இருந்து மருதங்கேணி, புதுக்காட்டுச் சந்தி, ஏ-9 பாதை ஊடாக தினமும் மு.ப. 10 மணிக்கு யாழ்ப்பாணத்தை நோக்கிப் புறப்படும் இந்தச் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் பிற்பகல் 3 மணிக்கு மீண்டும் யாழ்ப்பாணத்திலிருந்து ஆழியவளை நோக்கிப் புறப்பட்டுச் செல்லும்.

ஆழியவளையை மையமாக வைத்து இந்தச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும் இந்தச் சேவை கட்டைக்காடு, கேவில் வரை நீடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய பஸ் சேவைக்கான பாதை அனுமதிப் பத்திரம் அரச அதிபரால் வழங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே காலை 6 மணிக்கு ஆழியவளையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு தனியார் பஸ் சேவை ஒன்று நடை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-173)

## பல்வேறு திருட்டுகளுடன் தொடர்புடையவர் கைது

வலி வடக்கு, செப்.16

பல்வேறு திருட்டுக்களுடன் தொடர்புடையவர் எனக் கருதப்படும் சந்தேக நபர் ஒருவர் இளவாலைப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவரிடம் இருந்து பெறுமதிக்க பல் வேறு வகையான திருட்டுப் பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன.

பண்டத்தரிப்பு, பல்லசுட்டியைச் சோந்த 19 வயது இளைஞர் ஒருவரே மறைந்திருந்த வேளை இளவாலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாரீத் ஹவுஸ் தலைமையில் சென்ற பொலிஸ் குழுவினரால் கைது செய்யப்பட்டார். அவரிடம் இருந்து மோட்டார் சைக்களின் உபகரணங்கள், இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் மடிக் கணினி, சிறிய மின்பிறப்பாக்கி, வானொலிப் பெட்டிகள் உட்பட மேலும் சில பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் பிரதிப் பொலிஸ்மா அதிபர் றொகான் டயஸ், காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்ச கர் நிலாந்த ஜெயவர்த்தன மற்றும் உதவிப் பொலிஸ் அத் தியட்சகர் ரணவீர ஆகியோரின் வழிகாட்டலின் கீழ் தலை மறைவாக இருந்த குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் கூறினர். (த-86)

## 14 வயதுடைய சிறுமியுடன் குடும்பம் நடத்தியவர் கைது

யாழ்ப்பாணம், செப்.16

வடமராட்சி கொற்றாவத்தைப் பகுதியை சேர்ந்த 14. வயது சிறுமியுடன் குடும்பம் நடத்தியதாக குற்றஞ்சாட்டப்படும் தொண்டமானாறு பகுதியைச் சேர்ந்த 20 வயது இளைஞர் ஒருவரை வல் வெட்டித்துறை பொலிஸார் நேற்று மதியம் கைது செய்தனர். குறித்த சிறுமி மருத்துவ பரிசோதனைகளின் நிமித்தம் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருப்பதாக பொலிஸார்கூறினர்.

இது தொடர்பாக தெரிய வருவதாவது:-

வடமராட்சி கொற்றாவத்தை பகுதியைச் சேர்ந்த 14 வயதுடைய சிறுமியொருவர் கடந்த வாரம் காணாமற்போயிருந்தார். இது தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றும் பதிவு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பில் தொண்டமானாறு பகுதியை சேர்ந்த இளைஞர் ஒருவர் மீது பொலிஸார் சந்தேகித்தனர். சிறுமி வீடு வந்ததை அடுத்து அவரிடம் பொலிஸார் வாக்குமூலம் ஒன்றை பதிவு செய்திருந்தனர். இது தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் நேற்று மதியம் 20 வயதுடைய இளைஞரொருவரை வல்வெட்டித்துறை பொலிஸார் தொண்டமானாறு பகுதியில் வைத்து கைது செய்தனர்.

ஏற்கனவே இது தொடர்பான முறைப்பாடு ஒன்று அந்தப் பகுதி சிறுவர் நன்னடத்தை அதிகாரியாலும் பொலிஸ் நிலையத்துக்கு தெரியப்படுத்தப்பட்டதாகப் பொலிஸார் மேலும் கூறினர். கைது செய்யப்பட்ட இளைஞரை யாழ். சிறுவர் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர். (த-109)

# சினிமா பாணியில் நேற்று அதிகாலை இரு இளைஞர்களுக்கு வாள் வெட்டு

### மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் ஏழாலையில் பெரும் அட்டகாசம்

வலி.வடக்கு, செப்.16

சினிமாப் படங்களில் வரும் சண்டைக் காட்சிகள், வாள் வீச்சுக்கள் போன்று நேற்று அதிகாலை ஏழாலைப் பகுதியில் இடம்பெற்ற மோசமான வாள்வெட்டு, கோடரி வெட்டு சம்பவங்களால் அந்தப் பகுதி பெரும் கலவரமடைந்தது.

நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை இடம்பெற்ற இந்தச் சம்பவங்களில் இரண்டு இளைஞர்கள் படுகாயமடைந்து தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை ஐந்தரை மணியளவில் ஏழாலை சிவகுரு கடையடியிலும் ஏழாலை உத்தமன் சிலையடியிலும் இந்த இரண்டு சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன.

அதிகாலையில் பல்சர் ரக மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே இந்தத் துணிகரமான வன்செயலை செய்து விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

காலையில் வேலைக்குச் செல்வதற்காக மல்லாகம்- குப்பிளான் வீதியில் சிவகுரு கடையடியில் வந்துகொண்டிருந்த ஏழாலையைச் சேர்ந்த கே.கஜேந்திரன் (வயது-22) என்பவரை மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் முதுகில் கோடரியால் வெட்டி விட்டுத் தப்பிச் சென்றனர். இதில் படுகாயமுற்ற அவர் உடனடியாக வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.


இந்தத் தாக்குதலை நடத்தி விட்டு அதே பாதையில் மோட்டார் சைக்கிளில் வந்த தாக்குதலாளர்கள் இருவரும் உத்தமன் சிலையடியில் வைத்து மல்லாகம் சந்தியில் உள்ள தேநீர்க் கடையில் பணியாற்றும் குப்பிளானைச் சோந்த எம்.ரமணசீலன் (வயது-27) என்பவரையும் வாளால் வெட்டியும் கோடரியால் கொத்தியும் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இவரும் உடனடியாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்தத் தாக்குதலுக்கான காரணங்கள் இதுவரை தெரியவரவில்லை.

சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர். (த-86)

## மண்டைதீவு மீனவர் சங்கத்தின் பணிமனைக்கு அடிக்கல் நடல்



யாழ்ப்பாணம், செப்.16

மண்டைதீவு மீனவர்களின் நலன் கருதி அங்கு கடற்றொழிலாளர் சங்கப் பணிமனையை அமைப்பதற்கான அடிக்கல் கடந்த 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நட்டு வைக்கப்பட்டது.

வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன், வேலணை பிரதேச சபைத் தவிசாளர் எஸ். சிவராசா ஆகியோர் அடிக்கல்லை நட்டு வைத்தனர்.

ஆஸ்திரேலிய நிறுவனம் இதற்கென ரூபா 30 லட்சம் நிதியுதவியை வழங்கியுள்ளது. இதில் கட்டட நிர்மாணத்துக்கென ரூபா 24 லட்சம் ரூபாவும், மிகுதி மீன்பிடிக்கான பயிற்சி நெறிகளுக்கும் செலவிடப்படவுள்ளதாக பிரதேச சபைத் தவிசாளர் சிவராசா தெரிவித்தார்.

மண்டைதீவு வைத்தியசாலையில் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு உள்ளதாக வைத்திய அதிகாரி தெரிவித்ததாகவும், ஆஸ்பத்திரிக்கு விரைவில் குடிதண்ணீர் வழங்க நீர்விநியோகச் சபையுடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (த-7)

## உக்காத பொருள்களை சேகரிக்க நடவடிக்கை

தென்மராட்சி, செப்.16

வரணிப் பிரதேசத்தில் குடியிருப்புகளில் காணப்படும் தகரம், கண்ணாடி, போத்தல் உடைவுகள், பிளாஸ்ரிக் பொருள்கள் உட்பட உக்காத பொருள்களை வாரத்தில் ஒரு நாள் வாகனம் மூலம் சேகரிக்கச் சாவகச்சேரி பிரதேச சபை முன்வந்துள்ளது.

வரணியில் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு வாரம் தொடர்பாக நடைபெற்ற கருத்தரங்கில் இந்த முடிவு எடுக்கப்பட்டு அதற்கான ஐந்து இடங்களும் தெரிவு செய்யப்பட்டன.

வரணி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட கட்டையடிச் சந்தி, சுட்டிபுரம் ஆலய முன்றல், வரணி மத்திய கல்லூரி முன்றல், வரணி சந்தை, துணுக்காய் சந்தி ஆகிய இடங்களில் இதற்கென வைக்கப்பட்டுள்ள தொட்டிகளில் உக்காத பொருள்களைப் பிரதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் போடுமாறும் பிரதி புதன்கிழமைகளில் பிரதேச சபையின் வாகனம் மூலம் இவை அகற்றப்படுமெனவும் முடிவு செய்யப்பட்டது.

வரணிப் பிரதேசத்தில் உள்ள எட்டு கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களும் டெங்கு நுளம்பு உருவாகக் கூடியதாகக் கருதப்படும் -பாவனையில் இல்லாத உக்காத பொருள்களை இந்தத் தொட்டிகளில் இடுமாறும் கோரப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் கிராம அலுவலர்கள், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள், பொருளாதார அபிவிருத்தி அலுவலர்கள், சாவகச்சேரி பிரதேச சபையின் பொறுப்பதிகாரி, படைமுகாம் பொறுப் பதிகாரிகள், கொடிகாமம் பொலிஸார் உட்பட பலர் கலந்து கொண்டனர். (த-9)

## இவ்வருடம் இதுவரை 195 நிறுவனங்கள் ஊழியர் சேமலாப நிதியத்தில் இணைவு

யாழ்ப்பாணம்.செப்.16

யாழ். மாவட்டத்தில் இந்த வருடம் இதுவரை 195 நிறுவனங்கள் ஊழியர் சேமலாப நிதியத்தில் இணைக்கப்பட்டுள்ளதாக வடமாகண பிரதித் தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

தனியார் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் தொழில் புரியும் ஊழியர்களுக்கு ஊழியர் சேமலாப நிதி செலுத்தப்பட வேண்டியது கட்டாயமாகவுள்ள நிலையில், இது தொடர்பில் நிறுவனத்தினருக்கு அறிவுறுத்தப்பட்டதன் விளைவாக இந்த வருடத்தில் இதுவரையில் 195 நிறுவனங்கள் புதிதாக ஊழியர் சேமலாப நிதியத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

195 நிறுவனங்களிலும் 584 பணியாளர்கள் ஊழியர் சேமலாப நிதியத்தில் இணைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 401 ஆண்களும்,183 பெண்களும் இதனால் பயனடைய முடிந்துள்ளது.

இதனைவிட இதுவரை ஊழியர் சேமலாப நிதியைப் பணியாளர்களுக்கு செலுத்தாத நிறுவனங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஊழியர் சேமலாப நிதியமும் பெற்றுக்கொடுக்கப்பட்டு வருகிறது.

இதேவேளை, 2013 ஆம் ஆண்டு 74 நிறுவனங்கள் ஊழியர் சேமலாப நிதியத்தில் இணைக்கப்பட்டு 330 பணியாளர்கள் ஊழியர் சேமலாப நிதியத்துக்கான தகுதியைப் பெற்றுள்ளனர்.

அத்துடன் இந்த வருடம் ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பான 29 பிணக்குகள் தீர்க்கப்பட்டு அவர்களுக்கான நிதி பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது-என்றார். (த-14,ரி)

## பனை ஓலைப் பொருள்கள் கனடா ரொறன்ரோ நகருக்கு

நீர்வேலி காமாட்சி அம்பாள் ஆலயத்துக்கு அருகில் செயற்படும் தேசிய அருங்கலைகள் பேரவையின் பயிற்சி நிலையத்தில் தயாரிக்கப்பட்ட பனை ஓலைப் பொருள்கள் கனடா ரொறன்ரோ நகருக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

பனை ஓலையை மூலப் பொருளாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட இடியப்பத் தட்டு, ஓலை நீத்துப் பெட்டி, சுளகு, முடிச்சு நீத்துப் பெட்டி, சந்தைக் கூடை, பட்டை நீத்துப் பெட்டி, அர்ச்சனைத் தட்டுக்கள் உள்ளிட்ட பொருள்கள் கனடாவில் உள்ள ரொறன்ரோ நருக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு அங்கு விற்பனை செய்யப்படுகிறது.

பனை ஓலை உற்பத்திப் பொருள்களைக் கனடாவில் சந்தைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை ரொறன்ரோ அரன்கோ நிறுவன உரிமையாளர் இராசநாயகம் கௌரீசன் செய்துள்ளார். இந்தப் பொருள்களைக் கனடா நாட்டினரும் புலம்பெயர் உறவுகளும் விருப்பத்தோடு கொள்வனவு செய்து பயன்படுத்தி வருகின்றனர். இதன் மூலம் உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு நல்ல வருமானம் கிடைக்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது.

பனை ஓலை உற்பத்திப் பொருள்களைத் தயாரிக்கும் பயிற்சியில் கலந்துகொண்டு தேர்ச்சி பெற்ற யுவதிகள் இந்தத் தொழில் முயற்சியில் ஆர்வத்தோடு ஈடுபட்டுள்ளனர். (த-11)



உதயன்
மக்கள் மனம் நிறைந்த 'தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## "நல்ல சமயமிது- இதனை நழுவ விடாதீர்!

மலையகத்தின் பெருந்தோட்டங்களில் பாரம்பரியமாக தோட்டக் குடியிருப்புகளில் வாழ்ந்து வரும் தொழிலாளர்களுக்கு பெரும் ஆபத்தொன்று தலைதூக்கியிருப்பது கவலையளிக்கும் செய்தியாக வெளிவந்திருக்கிறது.

தோட்டங்களிலே பெரும்பாலான குடியிருப்புகள் காலனித்துவ ஆட்சிக் காலத்தில் வெள்ளையர்களான தோட்ட உரிமையாளர்களால் அமைத்துக் கொடுக்கப்பட்டிருந்தன.

வெள்ளையர் கம்பனிகள் வெளியேறியதன் பின்னரும் கூட அந்த நிலைமை மாறவில்லை. எங்கோ ஓரிரு தோட்டங்களில் மட்டும் புதிய வீடமைப்புகள் தோன்றலாயின.

தோட்டத்தில் கூலி வேலைகளையே பெரும்பாலும் நம்பிவாழுகின்ற இந்த மக்கள் தமது எதிர்காலத்துக்கென சொத்துக்களைச் சேர்த்து வைத்துக் கொள்வதற்கு வாய்ப்பே இருப்பதில்லை. என்றாலும் நிரந்தரமாக தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு அவர்கள் தொழில் புரிய முடியாமல் ஓய்வு பெறும் போது ஒரு சிறுதொகை பணம் ஓய்வூதியமாக, அவர்கள் மொழியில் 'பென்சுகாசு' கிடைக்க வழியேற்படுத்தப்பட்டுள்ளது.

அதுவும் கூட தொழிலாளர் அமைப்புகள் தொடர்ச்சியாக நடத்திய போராட்டங்களின் வாயிலாக கிடைத்த வரப்பிரசாதமே.

இந்த நிலையில் இப்போது சில தோட்டங்களில் தொழிலாளர்கள் ஓய்வூதியம் பெற்று வேலை செய்ய முடியாத நிலை வரும்போது அவர்களை அவர்களின் குடியிருப்புக்களை விட்டே வெளியேற்றுவதற்கு தோட்ட முதலாளிகள் நீதிமன்றங்கள் மூலம் நடவடிக்கை எடுக்க முனைந்திருப்பதாக செய்திகள் வந்துள்ளன. பதுளையில் டீன்ஸ் லேண்ட் தோட்டத்தைச் சேர்ந்த இரண்டு குடும்பங்களில் எவரும் தற்போது வேலை செய்யவில்லை என்பதற்காக தோட்ட நிர்வாகம் அவர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுத்திருக்கிறது.

இந்த இரு குடும்பத்தினரும் தமக்குக் கிடைத்த 'பென்சு காசை' கொண்டு தமது குடியிருப்புக்களைத் திருத்தி அமைத்து வாழ்ந்து கொண்டிருக்கும் நிலையில் இந்த அநியாயம் நடைபெறவிருக்கிறதாம்.

உடலில் தெம்பிருக்கும்வரை அவர்களின் உழைப்பைப் பெற்று வந்துள்ள தோட்ட நிர்வாகிகள் வேலை செய்ய முடியாத நிலை வந்ததும் அவர்களை இருப்பிடங்களை விட்டு துரத்த முயற்சி செய்வது பாவம். ஒரு தோட்டத்தில் இம்மாதிரி நிலை ஏற்பட்டால் அதனை முன்மாதிரியாகக் கொண்டு பல தோட்ட நிர்வாகங்கள் நடவடிக்கை எடுக்க முற்படலாம். அதனால் பாரம்பரியமாக வாழ்ந்த இடங்களில் இருந்து பல தொழிலாளர் குடும்பங்கள் நடு வீதிக்கு வரவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும்.

அதனால் தான் இம்மாதிரி ஒரு பாரதூரமான பரிதாபநிலை ஏற்படாமல் தடுக்க மலையக தொழிற் சங்கங்களும், அமைப்புகளும், தலைவர்களும் ஒன்றுதிரண்டு செயற்பட வேண்டிய கட்டாய நிலைமை ஏற்பட்டிருப்பதை சுட்டிக் காட்டியுள்ளார், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வீ.இராதாகிருஷ்ணன்.

இது சாதாரண தொழிலாளர் விடயம் அன்று. மனித உரிமையோடு சம்பந்தப்பட்ட பிரச்சினை. எனவேதான் இந்த மக்களின் சார்பில் பேசக்கூடிய அமைப்புகள், தலைவர்கள் மட்டுமல்ல அவர்களின் மாதாந்த சந்தாப் பணத்தில் செயற்படுகின்ற தொழிற் சங்கங்களும் இதில் அதிக அக்கறை கொள்ள வேண்டும் என்று வலியுறுத்த வேண்டியிருக்கிறது.

தொழிலாளர்களின் இந்தப் பிரச்சினையை ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு சென்று அவர் மூலம் தவறான இந்தச் செயற்பாட்டுக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என்கிறார் இராதாகிருஷ்ணன்.

தோட்டத் தொழிலாளர்களுக்கென்று பெரும் எடுப்பிலான குடியிருப்புக்கள் அமைப்பது பற்றி ஜனாதிபதி சில காலத்துக்கு முன் கருத்துத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் அவருக்கும் இதில் அக்கறை இருக்கலாம்.

அரசோடு இணைந்து செயற்படும் மலையக கட்சிகள், தொழிற்சங்கங்களும், அரைமுழு மந்திரி பதவிகளை பெற்றுக் கொண்டுள்ள மலையக தலைவர்களும் தேர்தல் காற்று வீசுகின்ற இந்தக் காலகட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு தோட்டத் தொழிலாள மக்களின் குடியிருப்பு தொடர்பான பிரச்சினைக்கு ஒருமுடிவு காண வேண்டும்.

நல்ல சமயம் இது- இதனை நழுவ விடாதீர் என்று வலியுறுத்துகின்றோம்.

# சுதந்திரமாக சிந்திப்போம்

**இந்தக் கட்டுரை ராஜினி திராணகமவின் 25ஆவது ஆண்டு நினைவாக வெளிவருகின்றது.**

பேராசிரியர்
தயா சோமசுந்தரம்

*பல ஆண்டுகளுக்கும் மேலாக, துப்பாக்கியின் நீண்டதொரு நிழலின்கீழ், எந்தவிதமான அர்த்தமோ நோக்கமோ இல்லாமல், சகல முனைகளிலிருந்தும் எழும் வன்முறையின் ஆதிக்கத்திலிருந்து எமது குழந்தைகளைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மிகுந்த ஆதங்கத்துடன் நாம் வாழ்ந்து கொண் டிருக்கிறோம்.*

*இன்னொரு பக்கத்தில் ஒதுங்கி நின்று இவை எல்லாவற்றையும் சகித்துக்கொண்டு வாழ்கின்ற மக்களின் முகங்களையும் எம்மால் பார்க்க முடிகின்றது. இன்றைய சூழ்நிலையில் தெளிவாகச் சிந்தித்து ஆராய்வதென்பது நோய்வாய்ப்பட்ட நேரத்தில் நாங்கள் மேற்கொள்ளும் செயற்பாட்டை ஒத்ததாக இருக்கும்.*

*எப்போதெல்லாம் நாம் எழுத நினைக்கிறோமோ அப்போதெல்லாம் இந்த யதார்த்தத்திற்குள் நாமும் புதைந்து போய் விடுகின்றோம். புத்தி சுவாதீனத்தை இழந்து, எந்தவிதமான எதிர்ப்புணர்வுமின்றி, இந்தப் பயங்கரவாத, வன்முறைப் புதைகுழிக்குள் சமூகம் மூழ்கி அமிழ்ந்துவிட்டது என்றும் நாம் அஞ்சுகின்றோம். மனித ஆளுமைகள், ஆற்றல்களை எல்லாம் பறிகொடுத்து விட்ட நிலைமையில் எமது சமூகம் இருக்கிறது. ஒதுங்கிப்போய் அமிழ்ந்து கொண்டிருக்கும் எமது சமூகத்திற்கு மீண்டும் புத்துயிரூட்ட சில வழிவகைகளைத் தேடுவதும், புறநிலை நோக்கும், விமர்சனபூர்வமான நேர்மையான நிலைப்பாடுகளை எடுத்து விளக்குவதும் இன்று மிக அவசியமாக உள்ளது. இதற்கு விலையாக எம்மில் சிலரின் உயிரும் பறிபோகலாம். இதனை விட்டால் எமது சமூகத்திற்கு வேறு மார்க்கமில்லை என்ற ரீதியிலேயே நாம் இதைக் கைக்கொண்டுள்ளோம்.*

ராஜினி திராணகம 1988, முறிந்த பனை (தமிழாக்கம், பயணி வெளியீடு 2009, சில மாற்றங்களோடு)

தமிழ்ச் சமுதாயத்தைப் பற்றி அன்று ராஜினி எழுதிய கருத்துக்களும் அவதானிப்புக்களும் இன்றைய எமது நிலைமைக்கு மிகவும் பொருத்தமானதாக அமைகின்றது. இந்த இக்கட்டான நிலைமையிலிருந்து மீண்டு, தமிழ்ச் சமுதாயம் திரும்பவும் தலைதூக்குவதாயின் ஒரு சிலராவது சுதந்திரமாகச் சிந்திக்கத் தொடங்கவேண்டும். எல்லோரும் சிந்திக்கக்கூடிய ஒரு வாய்ப்பை, ஒரு வெளியை உருவாக்க வேண்டும்.

தமிழ்ச் சமூகத்தின் தற்போதைய சிந்திக்கும் தன்மையை நோக்கினால், அது ஒரேவிதமாக, தனக்கு மிகவும் பரிச்சயமான, தனக்குப் பாதுகாப்பானது எனத் தான் கருதும் வழிகளில் தடம் மாறி, மிகவும் குறுகிய வட்டத்தினுள்ளே அகப்பட்டிருப்பதை அவதானிக்கலாம். மாற்றுக் கருத்துக்களோ, புரட்சிகரமான சிந்தனைகளோ, ஆரோக்கியமான கற்பனைகளோ, சுபீட்சமான எதிர்கால எண்ணக்கருக்களோ இல்லாது எமது சமூகம் காலத்துள் சிக்குண்டு, முழுமையாக உடைந்துபோய் தோற்கடிக்கப்பட்ட நிலையில் கிடக்கின்றது.

ஆயினும், சுதந்திரமாகச் சிந்தித்தல், புதிய யோசனைகளின் தோற்றம், மாற்றுக் கருத்துக்களை முன்வைத்தல், ஆரோக்கியமான காழ்ப்புணர்வில்லாத வகையிலான பிரதிவாதங்கள், கருத்து வேறுபாடுகளைச் சகித்துக் கொள்ளல், ஒருங்கிணைந்த பரிணாம உருவரக்கங்கள் போன்றனவே ஒரு சமூகத்தின் இயல்பான உயிர்த்துடிப்பை, ஆரோக்கிய இயக்கப்பாட்டை, அதன் எதிர்கால வளர்ச்சியை உறுதிப்படுத்துகின்றன.

எமது வரலாற்றை நாம் திரும்பிப் பார்ப்போமானால் தமிழ்ச் சமூகத்தின் சிந்தனைப்போக்கானது இவ்வாறு ஒரு குறுகிய வட்டத்தினுள்ளே எப்பொழுதும் முடங்கிக்கிடக்கவில்லை என்பது தெளிவாகிறது. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற முழக்கத்தின் ஊடாகவும், சைவ சமயத்தில் மட்டுமல்லாமல் புத்த, சமண, சாக்த, வைஷ்ணவ மற்றும் அண்மைக் காலத்தில் கிறிஸ்தவ, இஸ்லாமிய சமயங்களிலும் முழு நம்பிக்கையுடன் ஈடுபாடு காட்டி, அனுபூதிமான்களாக மதிக்கப்பட்ட பெரியார்களின் மூலமாகவும், மார்க்ஸிய இடதுசாரிச் சிந்தனை, விஞ்ஞானத் துறை போன்றவற்றில் வல்லுநர்களாகத் திகழ்ந்தவர்களூடாகவும் தமிழ்ச் சமூகம் தனது பரந்துபட்ட சிந்தனைப் போக்கை வெளிக்காட்டி இருந்தது. ஆயினும், அதே சமூகம் தனக்கு நேர்ந்த பல கசப்பான நிகழ்வுகளாலும், தன்னைத் தானே அடக்கி அழித்ததாலும் தற்பொழுது ஒரு கிணற்றுத் தவளையின் நிலைக்குத் தன்னைக் கொணர்ந்துள்ளது.

அடக்கப்படுபவரின் மனம்தான் அடக்குமுறையாளர்களின் கையில் உள்ள பலமான ஆயுதம் என்கிறார் ஸ்ரீபன் பிக்கோ (Stephen Biko). ராஜினி திராணகமவும் தென்னாபிரிக்க கறுப்பின விடுதலைக்காகப் போராடி உயிர்நீத்த ஸ்ரீபன் பிக்கோ போல் தனது மக்களை, இவ்வாறான குறுகிய சிந்தனைப் போக்கில் இருந்து விடுவிப்பதற்காகப் போராடி தனது உயிரையும் அதற்காகத் தியாகம் செய்த பெண்மணியாகத் திகழ்கின்றார். ராஜினியின் பரந்த சிந்தனைகளும், எழுத்துக்களும், ஆக்கங்களும், செயற்பாடுகளும் அப்பொழுது அதிகாரத்தில் இருந்தவர்களுக்கும், அதற்காகப் போட்டியிட்டவர்களுக்கும் சகித்துக் கொள்ள முடியாத வொன்றாக இருந்தது.

ஆரம்பத்தில் ராஜினி இடதுசாரி மார்க்ஸியக் கோட்பாடுகளை ஆழமாகப் படித்து ஆராய்ந்து, உள்நாட்டு மற்றும் சர்வதேச இடதுசாரி இயக்கங்களுடனும், அமைப்புக்களுடனும், குழுக்களுடனும் நெருங்கிய தொடர்புகளை வளர்த்து, அவர்களுடன் கூடிச் செயற்பட்டதன் மூலம் ஆயுதப்போராட்டத்தின் தேவையை ஏற்றுக்கொண்டார். ஆயினும், காலப் போக்கில் ஏற்பட்ட உளமுதிர்ச்சியினாலும், இயக்கங்களுடனான நெருங்கிய நேரடிச் செயற்பாடுகளினால் ஏற்பட்ட அனுபவங்களாலும், முக்கியமாக இலங்கைத் தமிழ் இயக்கங்களின் இடையே எழுந்த உட்பூசல்கள், சகோதரப் படுகொலைகள், கருத்துவேறுபாடுகள், மோதல்கள் முதலியனவற்றாலும் ஏமாற்றத்திற்கு உள்ளாகி, ஆயுதப் போராட்டத்தின் ஆபத்துக்களையும், நீண்டகால விளைவுகளையும் நன்குணர்ந்து கொண்டார். அதன் காரணமாக ஆயுதப் போராட்ட அணுகுமுறையை நிராகரித்து, அதனிலிருந்து விலகி நடந்து கொள்ள முயற்சித்தார்.

ஆயினும், அவர் தொடர்ச்சியாக அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்காகப் பாடுபட்டுப் பணியாற்றினார். இதற்காக அவர் தான் வாழ்ந்த பாதுகாப்பான வெளிநாட்டுச் சூழலில் இருந்து இங்கு வந்து, தனது சொந்தக் குடும்ப நலன்களையும் கவனிக்காமல், இரவு பகலாக ஒடுக்கப்பட்ட, கஷ்டப்பட்ட மக்களுக்காகப் பணியாற்றினார். அந்தக்காலப் பகுதியில் இருந்த போர், ஊரடங்கு போன்ற பயங்கரமான சூழ்நிலைமைகளின் போதும் சைக்கிளில் சென்று, விதவைகள், தாய்மார், ஒடுக்கப்பட்ட மக்கள், மாணவர்கள் என்று உதவி தேவைப்படுவோரைத் தேடிப்போய்ச் சந்தித்து, கவலைகளைப் பகிர்ந்து, பிரச்சினைகளை, சவால்களை எதிர்கொள்ளும் வழிகள் பற்றி அவர்களோடு கலந்துரையாடி அவர்களுக்குத் தேவையான மன உறுதியை அளித்தார். அவர்களின் தேவைகளுக்காகவும், நீதிக்காகவும் அதிகாரிகளுடன் கையில் ஆயுதங்கள் இன்றி வாதப் போராடினார். அவர்களின் நிலைமைகளையும், துயரங்களையும் வெளியீடுகள், ஆக்கங்கள், நாடகங்கள் மூலம் வெளிக்கொணர்ந்து பதிவு செய்தார். இதே போன்று வன்முறைகள், பாலியல் துஷ்பிரயோகங்கள், சாதிய ஒடுக்குமுறைகள், ஆணாதிக்கச் சிந்தனைகள் போன்றவற்றுக்கு எதிராகவும் ராஜினி பாடுபட்டார்.

பாதிக்கப்பட்ட பெண்களை ஒன்று சேர்த்து, அவர்களைக் குழுக்களாக இணைத்து, அவர்களுக்கான செயற்றிட்டங்களை, அமைப்புக்களை உருவாக்கி, சமூகமட்டத்தில் விழிப்புணர்வையும், திறந்த முற்போக்கான மனப்பான்மையினையும் ஏற்படுத்தப் போராடினார். இவ்வாறாகப் பொதுமக்களை முதன்மைப்படுத்தும் சமூக உருவாக்கத்திற்காக, ஒடுக்கப்பட்ட சிந்தனைகளுக்குள் இருந்து மக்களை விடுவிக்கும் செயற்பாடுகளைத் தனித்த ஒரு பெண்ணாக நின்று துணிச்சலுடன் அவர் மேற்கொண்டதை, அப்பொழுதிருந்த அதிகார வர்க்கங்களினால் ஜீரணித்துக்கொள்ள முடியவில்லை.

ராஜினி அப்பொழுது எழுதிய கருத்துக்களும், எடுத்த நிலைப்பாடுகளும், முன்வைத்த விமர்சனங்களும், நடத்திய ஆய்வுகளும் எவ்வளவு தூரம் உண்மையான தீர்க்கதரிசனம் கொண்டவை என்பது இப்பொழுது புலனாகின்றது. நாம் இப்போது இருக்கும் நிலைமையைச் சற்று அவதானித்து, ஆராய்ந்து பார்த்தால், இன்றைய எமது நிலையானது அன்றிருந்த அந்தக் காலகட்டத்துடன் எவ்வளவுக்குப் பொருந்தி நிற்கின்றது என்பதைக் கண்டுகொள்ளலாம்.

ஆயுத மோதல்களும், இறப்புக்களும், இழப்புக்களும் ஓய்ந்து போயிருக்கின்ற இந்தக்காலகட்டத்திலும் நாம் இனவாதத்துக்குள்ளும், துவேசத்துக்குள்ளும், பகைமையினுள்ளும், குரோத மனநிலையினுள்ளும் அகப்பட்டுக்கொண்டு, குறுகிய சிந்தனையுடன் கூடிய பார்வையைக் கொண்டவர்களாகவே இருக்கின்றோம். ஆயினும், இத்தகைய இயல்பினைக் குரோத மனநிலையினை எம்முள்ளே வைத்துக்கொண்டு, வெளியில் அதிகாரத்தில் உள்ளவர்கள் இடும் கட்டளைகளை ஏற்று நடக்கும் பணிவும் அடக்கமும் நிறைந்தவர்களாக, இரட்டைவேடத் தன்மை உடையவர்களாக நாம் வாழ்ந்து வருகின்றோம். W.E.B Dubois என்ற கறுப்பின அமெரிக்க எழுத்தாளர் கூறுவது போல, நாம் இரட்டைப் பிரக்ஞை உடையவர்களாக இருக்கின்றோம்.

நாணற்புல்லானது காற்றடிக்காதபோது நிமிர்ந்து நிற்பதும், காற்றடிக்கும்போது அதன் திசைக்கு ஏற்ப சரிந்து கொடுப்பதுமாகத் தனது வாழ்வைத் தக்கவைத்துக் கொள்வது போலவும், விலாங்கு மீனானது மீனுக்குத் தலையையும் பாம்புக்கு வாலையும் காட்டித் தப்பித்துக் கொள்வது போலவும் நாம் இரண்டு விதமான சிந்தனையிலும் வாழப் பழகியுள்ளோம். இது ஒருவிதமான இயைபாக்கமாகக் கருதப்பட்டாலும், நாம் அதற்குள் அளவுக்கு அதிகமாக மூழ்கிச் செல்வது பின்னடைவாகவே உள்ளது.

தெரிந்தோ, தெரியாமலோ அரசியல்வாதிகளும், ஊடகங்களும் தமது தனிப்பட்ட நலன்களுக்கு எம்மைப் பயன்படுத்துவதற்காக இனவாத உணர்வுகளைத் தூண்டி, அவற்றை வளர்த்து, பேணிக் கொண்டிருக்கின்றன. இத்தகைய தோற்றப்பாடுகளும், மனநிலைகளும், சிந்தனைகளும் நீடிப்பதற்கு அரச பயங்கரவாத வன்முறைகளும், பாகுபாடுகளும் துணைபோகின்றன என்பது மறுப்பதற்கு இல்லை. ஆயினும், நாம் இந்தக்காலத்துச் சிக்கல்களிலிருந்து, முட்டுக்கட்டைகளில் இருந்து தப்புவதாயின், ஒரு சுபீட்சமான எதிர்காலத்தைக் கட்டி எழுப்புவதாயின், எமது மனப் பிரக்ஞைகளை மேம்படுத்தி விடுதலை பெறுவதாயின், நாம் இவ்வாறான குறுகிய இனவாதக் கோட்பாடுகளில் இருந்து விடுபட்டுப் பரந்த சிந்தனைத் தடத்தினை நோக்கி எம் கால்களைத் திருப்ப வேண்டும்.

தமிழ்ச் சமூகம் முன்னேறுவதற்கும், அபிவிருத்தியடைவதற்கும் இவ்வாறான பிற்போக்கான சிந்தனைகளுக்கும் சக்திகளுக்கும் இடம்கொடுக்காமல் பரந்த மனித நேய குணங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். ராஜினி போன்ற இந்தத் தளத்தில் சிந்திப்பவர்களை, செயற்படுவர்களை எல்லோரும் மதித்து முன்னுதாரணமாக எடுத்தோமானால் காலப்போக்கில் எமக்கும் அது நன்மை பயக்கும்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 15 ஆவது தேசிய மாநாட்டில் தலைவர் மாவை சேனாதிராசா ஆற்றிய தலைமையுரையின் தொடர்ச்சி பிரசுரமாகின்றது.

# உள்ளூராட்சி மன்றங்களுக்கு அதிகாரம் பகிரப்பட வேண்டும்



போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு நீண்ட காலத்தின் பின் 2011 இல் இடம்பெற்ற தேர்தல்களில் பெரும்பான்மையான சபைகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குள் வந்தும் பல சபைகள் போதிய வருமானம் இல்லாததன் காரணமாக அவற்றினால் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள முடியாமல் உள்ளன.

இந்தச் சபைகள் வினைத்திறன் மிக்கதாகவும் ஆளுமையுள்ளனவாகவும் செயற்பட வேண்டும். அதற்கு அரசின் சிறப்பான உதவியும் ஒத்துழைப்பும் கிடைக்க வேண்டும். மாகாண சபைகள் முழுமையான பகிரப்பட்ட அதிகாரங்களுடன் உள்ளூராட்சி சபைகளையும் வழிநடத்தக்கூடிய அதிகாரங்களையும் கொண்டிருக்க வேண்டும். உள்ளூராட்சி மன்றங்களுக்கும் அதிகாரங்கள் மேலும் பகிரப்பட வேண்டும். அப்பொழுதுதான்; அடிமட்டத்திருந்து ஜனநாயகமும் ஆளுமையும் தலைமைத்துவமும் தழைத்தோங்கமுடியும். பிரிட்டன், கனடா முதலான நாடுகளில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு பொலிஸ் அதிகாரம் மருத்துவமனைகள் பராமரிப்பு உள்ளூர் கல்வி, சுகாதாரத்துறைகளில் அதிகாரங்கள் பல தசாப்தங்களாகவே வழங்கப்பட்டுள்ளன என்பதைச் சுட்டிக்காட்டவேண்டும். இதற்கென ஒரு தரம் மிக்க குழு ஒன்று நியமிக்கப்பட்டு இந்தச் சபைகளின் நிலைவரங்கள் திரட்டப்படுதல் வேண்டும். வடக்கு மாகாணசபைக்கு அபி விருத்தித் திட்டங்களுக்கு என 5813 மில்லியன் ரூபா ஒதுக்கி விட்டதாக அரசு அறிவித்தது.

ஆனால் நாமறிந்த வகையில் 1876 மில்லியன்கள் மட்டுமே தான் மாகாணசபைக்குச் சேர்கிறது. ஆனால் 3955 மில்லியன்கள் வரையில் மத்திய பொருளாதார அமைச்சரான பஸில் ராஜபக்ஷவே கையாள்கிறார் என்று தகவல் இருக்கிறது. தமிழ் மக்களின் கொள்கை மற்றும் தம்மைத்தாமே ஆளும் தன்னாட்சி உரிமை மீது மத்திய அமைச்சு பேரம் பேசுகிறது. வடக்கு மாகாணசபையை தெரிவு செய்த மக்களின் தீர்ப்பை தென்னிலங்கை அரசு ஏற்க மறுக்கிறது. அத்துடன் ஆளுநரும், பிரதம செயலாளரும் வட மாகாண சபையின் மறைமுக நிர்வாகமொன்றை நடத்துகின்றனர். அரசும் பின்னால் ஆதரவு வழங்குகிறது. மக்களின் நம்பிக்கையைக் குலைக்க எடுக்கும் இந்த நடவடிக்கைகள் ஜனநாயக விரோதமானதும் மக்கள் அளித்த ஜனநாயகத் தீர்ப்புகளுக்கு எதிரானதுமாகும்.

இதனால் மாகாணசபையை முடக்கி மக்களையும் மாகாண நிர்வாகத்தையும் சலிப்படையச் செய்யும் உள்நோக்கத்துடன் தென்னிலங்கை அரசு செயற்படுகிறது என நாம் குற்றஞ் சுமத்துகிறோம். போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் நலன்களுக்காக, அபிவிருத்திக்காக உதவுவதற்குப் பல நாடுகள் வெளிநாடுகளிலுள்ள எம் இன உறவுகள் வாக்குறுதி அளித்தன. அதற்குப் பல தடைகள் போடப்படுகின்றன. பாதிக்கப்பட்ட மக்கள் பயனடையக் கூடிய மனிதாபிமானப் பணிகளை அவர்களால் தெரிவு செய்யப்பட்ட வடக்கு மாகாண சபை கையாள்வதற்கு வசதியாக மனிதாபிமானப் பணிக்கான அதிகாரசபை ஒன்றுக்கு அரசு தடை விதிக்கிறது. சர்வதேச உதவிகளுக்கும் பல நாடுகளில் வாழும் எம் உறவுகளுக்கும் பாதுகாப்பு அமைச்சு தடைகளை விதிப்பதன் மூலம் அவர்கள் தம் உறவுகளுடன் தொடர்பு கொள்ளவோ உதவிகளைப் பெறவோ முடியாமற் செய்யப்பட்டுள்ளமை பெரும் கேடாயுள்ளன. வடக்கு மாகாண சபைத் தேர்தலில் எம் மக்கள் ஆளுநர், அமைச்சர்கள், இராணுவத்தினர் தலையீடுகளுக்கு அஞ்சாமல் புதிய தென்புடன் மிகப் பெருமளவில் தங்கள் ஜனநாயகக் கடமையை திடசங்கற்பத்துடன் வெளிப்படுத்தியிருந்தனர்.

அந்த மக்கள் வைத்த நம்பிக்கையைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் கடப்பாடும் எமக்கு உண்டு. நிகழ்காலத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சிக் கெதிராகவும் கட்சியின் யாப்புக்கு எதிராகவும் வடக்குமாகாணசபைத் தேர்தல் தொடர்பில் எம்மால் முன்வைக்கப்பட்ட தேர்தல் அறிக்கைக்கு எதிராகவும் உயர் நீதிமன்றத்திலே எட்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளமையையும், சிங்கள பௌத்த தேசியவாத தீவிர சக்திகளும் தமிழரசுக்கட்சியையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் தடை செய்ய வேண்டும், எங்களை கைது செய்ய வேண்டுமென்றெல்லாம் கூக்குரலிடுவதையும் அறிவீர்கள். சுயநிர்ணய உரிமை எம்மினத்துக்கு உண்டு என்று நாம் கோருவதையும் அரசியல் தீர்வுக்கு தமிழருக்குத் தன்னாட்சியும் மத்தியில் இணைப் பாட்சியும் எனும் தத்துவத்தை முன்வைப்பதை யும் ஏதோ பிரிவினைக்கு வித்திட்டுள்ளார்கள் என்று விஷமப் பரப்புரைகளை செய்தும் வருவதை யாவரும் அறிவீர்கள். இதற்கு அஞ்சி நாம் எம் கொள்கைகள், இலட்சியங்களை விட்டுக் கொடுக்கமாட்டோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஊடகத்துறைச் சுதந்திரத்திற்காகப் போராடிய, சுசந்த தேசப்பிரிய மற்றும் பலர் வெளிநாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர். பலர் கொல்லப்பட்டுள்ளனர். ஊடகத்துறை நிறுவனங்களுக்கு அச்சுறுத்தல்கள் தொடர்கின்றன. ஊடகவியலாளர்களுக்கு எதிராகப் பொய் வழக்குகள் அச்சுறுத்தல் என்பன தொடர்கின்றன. இந்நிலைமை ஜனநாயகத்துக்கு ஏற்பட்டுள்ள பெருங்கேடாகும்.

இந்த நாட்டின் இன்றைய அரசியலமைப்பில் ஜனநாயகத்தின் மூன்று தூண்களில் ஒன்றான நீதித்துறைச் சுதந்திரம் கேள்விக்குள்ளாகியிருக்கிறது என்பதையும் ஒரு சிறு அதிகாரத்தைக்கூட தமிழ்மக்களுக்கு விட்டு வைக்க முடியாது என்பதும் திவிநெகுமவுக்கு எதிரான வழக்கில் நிரூபிக்கப்பட்டுள்ளது:

உயர் பதவி வகித்த பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க சிங்களப் பெண் ஆனாலும் அவரால் திவிநெகும பிரேரணை மீது வழங்கப்பட்ட ஒரு தீர்ப்பு எமக்கு சாதகமானது. ஆனால் அரசுக்கு கோபத்தை தந்து விட்டது. அதனால் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவினால் நினைத்தவாறு அவர் நீக்கப் படமுடியும் என்பதேயே அரசு எடுத்துக் காட்டியுள்ளது. அரசியல் தீர்வுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு வரவேண்டுமென அழைக்கிறது அரசு.பிரதம நீதியரசரையே நீக்குவதற்குப் நாடாளுமன்றத் தெரிவுக்குழு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இல்லாமலே அரச தரப்பினர் மட்டும் கூடித் தீர்மானித்து பிரதம நீதியரசரை நீக்கிவிட்ட உதாரணத்தை எடுத்துக்கொண்டால் இனப் பிரச்சினைத் தீர்வு விடயத்தில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு எப்படித் தீர்மானத்தை எடுக்கும் என்பது தெளிவானதே.

இத்தகைய நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் எப்படி நம்பிக்கையை வைக்க முடியும்? இலங்கைக்கான அரசியலமைப்பில் ஒற்றையாட்சி அரசியலமைப்பு ஒழிக்கப்பட்டு, மாநிலங்களின் அல்லது பிராந்தியங்களின் ஒன்றியம் எனும் கூட்டாட்சித் தத்துவம் கொண்டு வரப்படவேண்டும். முழுமையான உச்ச அதிகாரப் பகிர்வொன்றில் தமிழ், முஸ்லிம் பிரதேசங்களின் தன்னாட்சி உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை நீக்கப்பட வேண்டும். ஆளை மாற்றுவதைவிட பேரினவாதக்கொள்கைகளும் அகற்றப்பட்டு தேசிய இனங்களின் ஜனநாயக உரிமைகள் ஏற்றுக் கொள்ளப்படவும் வேண்டும்.

18 ஆவது திருத்தம் நீக்கப்பட்டு ஆகக் குறைந்தது 17 ஆவது திருத்தச் சட்டமாவது மீட்கப்படவேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில்; 1956இல் திருமலை மாநாட்டுத் தீர்மானத்தில் மூன்று விடயங்களை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

(1) சமஷ்டியின் ஓர் அங்கமாக ஒரு சுயாட்சித் தமிழரசு என்ற கட்சியின் நோக்கத்தை சுயாட்சித் தமிழரசும் முஸ்லிம் அரசும் என்று தீர்மானிக்க வேண்டும்.

(2) நாட்டின் ஒருமைப்பாட்டை உறுதி செய்வதற்கு சுயநிர்ணய உரிமையும் தன்னாதிக்கமும் உள்ளதும் இணைப்பாட்சி முறையில் ஜனநாயக யாப்பு முறைக்குட்பட்ட ஒன்று அல்லது மேற்பட்ட மொழிவாரி அரசுகளை உருவாக்கவேண்டும்;

(3) 1957ஆம் ஆண்டு ஓகஸ்ட் 20ஆம் நாளுக்கு முன் இந்நாட்டில் இணைப்பாட்சி ஒன்றியம் ஒன்றை உருவாக்கப் பிரதமரும் நாடாளுமன்றமும் தவறுமிடத்து இவ்விலட்சியத்தை அடைய கட்சி சாத்வீக முறையில் நேரடி நடவடிக்கையில் இறங்குவதாகத் தீர்மானித்தது. போராட்டக்குழு அமைத்தது. அடுத்து கட்சியின் 7ஆவது மாநாடு யாழ்ப்பாணத்தில் 1961 ஜனவரி 21இல் சீ.மூ.இராசமாணிக்கம் தலைமையில் ஆரம்பமானது.

அந்த மாநாட்டிலேதான் 1961 சத்தியாக்கிரகப் போராட்டம் அறிவிக்கப்பட்டது. இந்த 15ஆவது மாநாட்டில் இதையொத்த ஒரு தீர்மானத்தை எடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். 1961 பெப்ரவரி 20ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் சத்தியாக்கிரகப் போராட்டம் ஆரம்பித்தது. அப் போராட்டத்தில் மாணவராயிருந்த நானும் கலந்துகொண்டேன். 1961 ஏப்ரல் 14ஆம் திகதி தந்தை செல்வா மாவிட்டபுரத்தில் தமிழரசு தபால் சேவையைத் தொடக்கி முத்திரை வெளியீட்டை ஆரம்பித்து வைத்தார். மாவிட்டபுரம் எனது ஊர் என்பதையும் கூறிவைக்க விரும்புகிறேன். மீண்டும் கட்சிக்கும் சுதந்திரனுக்கும் தடைவிதிக்கப்பட்டது.

இப்பொழுது மீண்டும் தடைசெய், கைது செய் என்று பேரினவாத சக்திகள் மிரட்டுகின்றன. இதற்கு நாம் அஞ்சப் போவதில்லை. இந்த அரசினால்,ஆட்சியினால், இராணுவத்தினால் பௌத்த தீவிரவாத சக்திகளினால்-

பல் இலட்சம் ஏக்கர் நிலங்கள் வளமுள்ள வேளாண்மை நிலங்கள், குடியிருப்பு நிலங்கள், கடல் வளங்கள், கரையோரப்பிரதேசங்கள், தினமும் ஆக்கிரமிக்கப்படுகின்றன

நிலத்தடியிலும் நிலத்திலும் கனிம வளங்கள் இல்மனைட்,மணல்,பனைவளங்கள் கொள்ளையடிக்கப்படுகின்றன.

வாசகர் நிருபம்

## மதிப்புக் கிடைக்காத முதியோர் அடையாள அட்டை

சமூக சேவைகள் அமைச்சினால் முதியோர் அடையாள அட்டைகள் அவர்களது தேவைகளை முன்னுரிமை அடிப்படையில் நிவர்த்தி செய்வதற்காகவே வழங்கப்படுகின்றன.

ஆனால் யாழ்.நகரில் இயங்கும் மிகவும் பிரபல்யம் வாய்ந்த தனியார் வங்கியில் இந்த அட்டைக்கு மதிப்பில்லை.

தேசிய அடையாள அட்டையைக் கொண்டு வரும்படி என்னிடம் கேட்கப்பட்டது. முதியோர் அடையாள அட்டையில் முன்னுரிமை அடிப்படையில் "வங்கிச் சேவை" யும் குறிப்பிடப்பட்டுள்ளது. வங்கியில் சேவையாற்றும் உத்தி யோகத்தருக்கு இது தெரியவில்லையோ யான் அறியேன். மீண்டும் நான் கடும் வெயிலில் காசு செலவழித்து பஸ் ஏறி, வீடுபோய் தேசிய அடையாள அட்டை எடுத்து கொண்டு வரவேண்டிய தாகி விட்டது. இது கச்சேரியில் இயங்கும் சமூக சேவைகள் பிரிவினருக்கு சமர்ப்பணம்.

யாழ்.நகரில் தனியார் வங்கிகள் அதிகரித்து, வாடிக்கையாளர்களை கவர்வதற்கு எவ்வளவோ பிரயத்தனங்கள் செய்யும் வேளையில், இந்த வங்கி உத்தியோகத்தரின் செய்கை மிகவும் வியப்பாக உள்ளது.

*பொ.மாதவன், சுன்னாகம்.*

## பூநகரி மையப் பகுதியான வாடியடியில் பஸ்களை நிறுத்தக் கூடாதாம்

பூநகரியின் மையமான வாடியடி நகரப் பகுதியில், மக்கள் போக்குவரத்துக்கு உயிர் நாடியாக விளங்குகின்ற இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ்களை நிறுத்தி வைப்பதை தவிர்த்துக் கொள்ளுமாறு பிரதேச சபையின் செயலாளர் ஐந்து போக்குவரத்துச் சபையின் பிராந்திய முகாமையாளர்களுக்கு கடிதம் மூலம் அறிவுறுத்தியுள்ளார்.

மையநகரப் பகுதியில் பஸ்களில் ஏறாது இறங்காது 300 கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பால் ஒழுங்குபடுத்தியுள்ளமையை மக்கள் கண்டித்துள்ளனர்.

அலுவலகங்களும், விற்பனை நிலையங்களும் வாடியடி நகரப் பகுதியிலேயே உள்ளன. பஸ் நிறுத்தப்படாத இடத்தில் இருந்து எவ்வாறு பொருள்களுடன் பயணமாவது என்னிடம் (பிரதேச சபைத் தவிசாளரான) மக்கள் கேட்கின்றனர். வாடியடி பாரம்பரியமான இடம், 1960 களிலிருந்து ஒரேயொரு பஸ் வாடியடியில் தரித்து நின்று தினமும் சங்குப்பிட்டி வரை மூன்று சேவைகளை ஆற்றிய நிலையில் பஸ் நிறுத்தக் கூடாது எனத் தடுப்பவரின் அறிவுரையும் சேவையும் தமக்குத் தேவையில்லை என்று கூறும் மக்களின் கொந்தளிப்பை நான் (தவிசாளர்) ஒருவாறு சமாதானப் படுத்தியுள்ளேன்.

புதிய சந்தைக் கடைத்தொகுதியில் பஸ் நிலையத்தில் வசதி வாய்ப்புக்கள் குறைந்தளவிலேயே உள்ளன. வாடியடியில் வழமை போல் பஸ்கள் நிறுத்தப்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாக மக்களிடம் உறுதிமொழி வழங்கியுள்ளேன்.

*பி.ஸ்ரீஸ்கந்தராசா,*
*தவிசாளர்,*
*பூநகரி பிரதேச சபை*



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: நீங்கள் முன்னர் ஒருவருக்கு செய்த உதவிக்கான நற்பயன் தேடிவரும். புதிய நம்பிக்கையுடன் பணிகளைத் தொடங்குவீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க தேவையான அனுகூல காரணி பலன் தரும். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவார்கள்.



**இடபம்**: உங்களின் சிறு செயல் கூட நிறைவேறுவதில் தாமத சூழ்நிலை உருவாகலாம். நல்லோரின் ஆலோசனை கிடைத்து, நம்பிக்கை அடைவீர்கள். தொழில், வியாபார நடைமுறை சுமாரான அளவில் இருக்கும். தியானம், தெய்வ வழிபாடு, மன அமைதியைத் தரும்.



**மிதுனம்**: உங்கள் பேச்சில் அன்பும், பண்பும் நிறைந்திருக்கும். சந்தர்ப்ப சூழ்நிலையால் விலகிச் சென்றவர்கள் மதித்து அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணி எளிய முயற்சியால் நிறைவேறும்.



**கடகம்**: உங்கள் மனதில் பிறருக்கு உதவுகின்ற எண்ணம் அதிகரிக்கும். தொழில், வியாபாரம் செழிக்க, கூடுதல் அனுகூலம் உருவாகும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள். உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும்.



**சிங்கம்**: நீங்கள் நம்பகத்தன்மை இல்லாதவரிடம் இரகசியம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மாறுபட்ட சூழ்நிலை உருவாகி தொந்தரவு தரலாம். குடும்ப உறுப்பினர்களின் ஆறுதல் வார்த்தை மனதுக்கு நம்பிக்கை தரும்.



**கன்னி**: உங்களிடம் சிலர் அதிக எதிர்பார்ப்புடன் நடந்து கொள்வர். தொழில், வியாபாரத்தில் மாறுபட்ட சூழ்நிலை உருவாகி, தொந்தரவு தரலாம். நண்பருடனான வாகனப் பயணத்தில் மித வேகம் பின்பற்றுவது நல்லது.



**துலாம்**: உங்கள் மனதில் பலநாள் இருந்த கவலை நீங்கும் வகையில் அனுகூல செய்தி கிடைக்கும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற அதிகபணி மேற்கொள்வீர்கள். உறவினர்களின் வருகையால், குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.



**விருச்சிகம்**: உங்களின் நற்செயல், உறவினர் நண்பர்களிடம் கூடுதல் அன்பு பாசத்தைப் பெற்றுத் தரும். தொழில், வியாபாரத்தில் உரிய பணவசதி கிடைத்து, தேவையான அபிவிருத்திப் பணியை நிறைவேற்றுவீர்கள்.



**தனுசு**: நிறைவேற்ற வேண்டிய பணிகளை கவனத்தில் கொண்டு செயற்படுவது நல்லது. தொழில், வியாபார நடைமுறை சுமாரான அளவில் இருக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளை அனுசரித்துப் போங்கள்.



**மகரம்**: சூழ்நிலையின் நெருக்குதல் உணர்ந்து செயற்படுவது அவசியம். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கை நிறைவேற்ற, கால அவகாசம் தேவைப்படும். போக்குவரத்தில் கவனம் தேவை.



**கும்பம்**: உங்கள் மனதில் ஆன்மிக நம்பிக்கை அதிகரிக்கும். உங்களுக்கு எதிராக பகைவரால் உருவான கெடுசெயல் பலமிழந்து போகும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.



**மீனம்**: உங்கள் குடும்ப உறுப்பினர்களிடம் தேவையற்ற விவாதம் வேண்டாம். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற, சாதக சூழ்நிலைகளை அறிவது அவசியம். கண்களின் பாதுகாப்பில் உரிய கவனம் அவசியம்.

## நாளை

**புரட்டாதி-01 புதன்கிழமை | 17.09.2014**

திதி: நவமி பி.இ.01.26 வரை
நட்சத்திரம்: திருவாதிரை பி.இ.04.39 வரை

சுபநேரம்:04.33-06.03 வரை
இராகுகாலம்: 12.03-01.33 வரை

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## பிற மதத்தைத் தழுவி பின்னர் தம் மதத்துக்கு வருவோருக்குப் பரிகாரம் தேவை இல்லை

"மனம் ஒப்பியே பிற சமயத்தைத் தழுவிப் பின்பு தாயகமான தம் சமயக் கோயிலை அடைபவர்களுக்குப் பரிகாரச் சடங்குகள் வேண்டும் என்பதில் ஐயமில்லை. காஷ்மீர், நேபாளம் போன்ற பகுதிகளில் படையெடுப்பின் காரணமாகப் பிற மதங்களைத் தழுவியவர்களுக்கும் அல்லது தமது மதத்தைத் தழுவ விரும்புபவர்களுக்கும் எந்தப் பரிகாரச் சடங்கும் கூடாது."

"சுவாமிஜி, இவர்கள் தாய் மதம் திரும்பிய பின் எந்தச் சாதியைச் சார்ந்தவர்களாக இருப்பார்கள்? ஏதாவது ஒரு சாதி இருந்தாக வேண்டும்! இல்லாவிடில் இந்து மதத்துடன் ஒன்றிப் போக முடியாதல்லவா! அவர்களுக்குரிய இடம் எது?"

"தாய் மதம் திரும்புபவர்கள் தங்கள் சாதிகளைப் பெறுவார்கள், புதியவர்கள் சாதிகளை அமைத்துக் கொள்வார்கள். வைணவத்தில் இந்த முறை பின்பற்றப்பட்டிருப்பது உங்களுக்கு நீனைவிருக்கும். அன்னியரும் பல சாதிகளிலிருந்து வந்தவர்களும் அதன் கொடிக் கீழ்த் தங்கி ஒரு தனி இனத்தவராக, போற்றத்தக்கவர்களாக அமைந்து விட்டனர். ராமானுஜர் முதல் வங்காளத்தில் பிறந்த சைதன்யர் வரையுள்ள பெரிய வைணவ ஆசாரியர்கள் இந்த முறையையே கைக் கொண்டிருக்கிறார்கள்." "இவர்களின்திருமணம்பற்றி..?" "இப்போது போலவே தங்களுக்குள்ளே அவர்கள் திருமணம் செய்து கொள்வார்கள்".

# தூக்கத்தில் நடக்கும் நோய்க்கு என்ன காரணம்?

தூக்கத்தில் நடக்கும் நோய்க்கு என்ன காரணம் என்று விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.
தூக்கத்தில் நடக்கும் நோயை 'சோம்னாம்புலிஸம்' என்று அழைக்கின்றனர். குரோமோசோம் குறைபாடே இந்த நோய்க்குக் காரணம் என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.
வொஷிங்டன் பல்கலைக்கழக மருத்துவக் கல்லூரி ஆய்வாளர்கள், கிறிஸ்டினா கர்னட் என்பவர் தலைமையிலான குழு இது தொடர்பான ஆய்வில் ஈடுபட்டது. அவர்கள் பரம்பரையாகத் தூக்கத்தில் நடக்கும் வியாதிப் பாதிப்பு இருந்தவர்களை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டனர்.
அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த 12 வயதுச் சிறுமி ஹன்னாவுக்குக் கூட குறிப்பிட்ட நோய்ப் பாதிப்பு இருந்தது. அவள் தூக்கத்திலேயே நடந்து வீட்டை விட்டு வெளியேறி விடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தாள்.
அந்தக் குடும்பத்தினரின் உமிழ் நீர் மாதிரிகளை ஆராய்ந்ததில் குரோமோசோம் 20 இன் சங்கேதக் குறியீட்டுப் பிழைதான் தூக்கத்தில் நடக்கும் நோய்குக் காரணம் என்று கண்டுபிடிக்கப்பட்டது. அது தலைமுறை தலைமுறையாகக் கடத்தப்பட்டு வந்திருக்கிறது. பெற்றோருக்கு இந்த மரபணு இருந்தால் அவர்களின் குழந்தைகளுக்கும் அது செல்லும் வாய்ப்பு 50 சதவீதம் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.
மேலும் இந்த ஆய்வின் மூலம் தூக்கத்தில் நடக்கும் வியாதிக்குத் தீர்வு காண முடியும் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.



# சுடோக்கு
## எண் விளையாட்டு


சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | | 3 | | 9 | | 7 | |
| | 2 | 1 | | 7 | 5 | 3 | | 4 |
| | | 8 | 1 | | | 5 | 6 | |
| | 6 | 2 | | | | | | |
| | | 7 | 4 | | 3 | 9 | | |
| | | | | | | 7 | 2 | |
| | 8 | 3 | | | 1 | 2 | | |
| 1 | | 6 | 2 | 5 | | 8 | 9 | |
| | 9 | | 8 | | 4 | | | 7 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 1 | 3 | 7 | 5 | 6 | 8 | 4 | 9 |
| 7 | 9 | 4 | 2 | 3 | 8 | 5 | 6 | 1 |
| 8 | 6 | 5 | 1 | 9 | 4 | 7 | 3 | 2 |
| 9 | 7 | 1 | 8 | 4 | 2 | 3 | 5 | 6 |
| 5 | 2 | 8 | 3 | 6 | 1 | 4 | 9 | 7 |
| 4 | 3 | 6 | 5 | 7 | 9 | 2 | 1 | 8 |
| 3 | 5 | 9 | 6 | 2 | 9 | 1 | 8 | 4 |
| 1 | 4 | 2 | 9 | 8 | 3 | 6 | 7 | 5 |
| 6 | 8 | 7 | 4 | 1 | 5 | 9 | 2 | 3 |

# தேசிய மட்டப் பளு தூக்கல் போட்டியில் வடக்குப் பாடசாலைகள் பதக்க வேட்டை



யாழ்ப்பாணம், செப். 16

தேசிய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான பளு தூக்கல் போட்டியில் வடமாகாணப் பாடசாலைகள் பதக்க வேட்டை நடத்தியுள்ளன.

யாழ்.இந்துக் கல்லூரி 1 தங்கம், 3 வெள்ளி, 2 வெண்கலப பதக்கங்கள் அடங்கலாக 6 பதக்கங்களைப் பெற்று முன்னிலையில் உள்ளது.

கொழும்பு அசோகா கல்லூரியில் இடம்பெற்று வரும் தேசிய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான பளு தூக்கல் போட்டியில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டியில் யாழ்.இந்துக் கல்லூரி மாணவன் விதுஷன் 56 கிலோ எடைப் பிரிவில் 121 கிலோ எடையைத் தூக்கி முதலாம் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

பயிலன் 77 கிலோ எடைப் பிரிவில் 111 கிலோ எடையை தூக்கி 2ஆம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுள்ளார். மைத்திரி சர்மா 95 கிலோ எடைப் பிரிவில் 137 கிலோ எடையை தூக்கி 2ஆம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

அஜித் ராம் 50 கிலோ எடைப் பிரிவில் 111 கிலோ எடையை தூக்கி 3ஆம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுள்ளார். எஸ்.சிறிசன் 94 கிலோ எடைப்பிரிவில் 116 கிலோ எடையைத் தூக்கி 3 ஆம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுள்ளார். எஸ்.மதுன் 85 கிலோ எடைப் பிரிவில்136 கிலோ எடையைத் தூக்கி 2ஆம் இடத்தைப் பெற்று வெள்ளி பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவன் கே.மிது 77 கிலோ எடைப்பிரிவில் 110 கிலோ எடையை தூக்கி 3ஆம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுள்ளார்

வவுனியா வீரமணிவாசகர் மகா வித்தியாலய மாணவன் ஆர்.ஹரிகரன் 94 கிலோ எடைப்பிரிவில் 125 கிலோ எடையை தூக்கி 3ஆம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

யாழ் மத்திய கல்லூரி மாணவன் விஸ்ணுகாந் 69 கிலோ எடைப்பிரிவில் 165 கிலோ எடையை தூக்கி 2ஆம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுள்ளார்.(கு-23)

## இன்றைய ஆட்டங்கள்

வலி வடக்கு, செப். 16

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கினால் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையே நடை பெறும் சி பிரிவுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அராலி மாவத்தை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ள போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விபரம் வருமாறு:-

பிரிவு ஏ

அராலி ஐக்கிய விளையாட்டுக் கழகம் எதிர் இளவாலை சென்லூர்ட்ஸ் விளையாட்டுக் கழகம்.

பிரிவு பி

அராலி கலைவாணி விளையாட்டுக் கழகம் எதிர் மாதகல் சென்தோமஸ் யுத் விளையாட்டுக்கழகம். (கு-86)

## மாகாண தடகளப் போட்டி சனி, ஞாயிறு தினங்களில்



யாழ்ப்பாணம் செப் 16

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களம் நடத்தும் மாகாண மட்ட தடகளப் போட்டி எதிர்வரும் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் முல்லைத்தீவு ஓட்டுசுட்டான் மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

ஆரம்ப நாள் நிகழ்வுக்குப் பிரதம விருந்தினாரக விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேயும், இறுதி நாள் நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரனும் கலந்துகொள்வர். (கு-23)

## அளவெட்டி ஞானவைரவர் 9 இலக்குகளினால் வெற்றி

யாழ்ப்பாணம் செப் 16

அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழகம் நடத்தும் வலி.வடக்கின் சமர் என வர்ணிக்கப்படும் 20/20 மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரின் லீக் முறையிலான ஆட்டம் ஒன்றில் அளவெட்டி ஞானவைரவர் விளையாட்டுக்கழக அணி 9 இலக்குகளால் வெற்றி பெற்றது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழக் மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அளவெட்டி ஞானவைரவர் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழக அணி 11.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 27 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் கபிலன், சுதன் ஆகியோர் 3 ஓட்டங்களைத் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் அளவெட்டி ஞானவைரவர் விளையாட்டுக்கழக அணி சார்பில் பிரணவன் 6 இலக்குகளையும், பிரகாஸ் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

28 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அளவெட்டி ஞானவைரவர் விளையாட்டுக் கழக அணி 2 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் ஓர் இலக்கை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

வரிங்ரன் 17 ஓட்டங்களையும், கணதீபன் 6 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழக அணி சார்பில் சுதன் ஓர் இலக்கை வீழ்த்தினார். (கு-23)

## கிளி.செயலகத்தின் ஊழியருக்கான கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம்

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் வெற்றிக்கிண்ணத்துக்கான மாவட்ட செயலக, பிரதேச செயலக உத்தியோகஸ்தர்களுக்கான கரப்பந்தாட்ட, வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டிகள் இன்று செவ்வாய்க்கிழமை பளை மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இதேவேளை, எதிர்வரும் சனிக்கிழமை கிளிநொச்சி மக்கள் வங்கிக்குப் பின்னால் ஒத்துழைப்பு உள்ளக விளை யாட்டரங்கில் பூப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி இடம்பெறவுள்ளது எனப் போட்டி ஏற்பட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (கு-23)

## ராகுலனின் அதிரடியில் வெற்றி பெற்றது கே.ஸி.ஸி.ஸி



யாழ்ப்பாணம்.செப்.16

ராகுலனின் அதிரடி ஆட்டத்தின் மூலம் வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்ட்ஸ் விளையாட்டுக்கழக அணியை 116 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி கொண்டது கே.ஸி.ஸி.ஸி. ஏ அணி.

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ்.மாவட்ட ரீதியிலான விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றும் 30 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த சனிக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. ஏ அணியை எதிர்த்து வட்டுக் கோட்டை ஓல்ட் கோல்ட்ஸ் விளை யாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கே.ஸி.ஸி.ஸி. ஏ அணி 30 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 255 ஓட்டங் களைப் பெற்றது.

இதில் ராகுலன் 93 ஓட்டங்களையும், உமாநாத் 52 ஓட்டங்களையும், கேதீஸ்வரன் 30 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர். பந்து வீச்சில் வட்டுக் கோட்டை ஓல்ட்கோல்ட்ஸ் விளையாட்டுக்கழக அணி சார்பில் ஜெசுதன் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 28ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும், திலீபன் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 65 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், நிரோன் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 48 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், நிமலேந்திரா 5 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 44 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும் வீழ்த்தினர்.

256 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்ட்ஸ் விளையாட்டுக்கழக அணியினர் 30 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 139 ஓட்டங்களை மட்டுமே பெற்றனர்.

இதில் நிமலேந்திரா அதிகபட்சமாக 40 ஓட்டங்களை தனது அணி சார்பாகப் பெற்றார்.

பந்து வீச்சில் கே.ஸி.ஸி.ஸி. ஏ அணி சார்பில் சாம்பவன் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 10 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், பவி 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 20 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் வீழ்த்தினர். (ரி- 23)



கிழக்கு மாகாண சுகாதார அமைச்சினால் நடத்தப்பட்டுவரும் வருடாந்த விளையாட்டுப் போட்டி திருகோணமலை ஏகாம்பரம் விளையாட்டு மைதானத்தில் கடந்த சனிக்கிழமை காலை ஆரம்பமானது. ஆரம்ப நிகழ்வின் அதிதியாக கிழக்கு மாகாணப் பிரதம செயலாளர் டி.எம்.சரத் அபேகுணவர்த்தன கலந்து கொண்டார். நிகழ்வில் விருந்தினர்கள் வரவேற்கப்படுவதை படத்தில் காணலாம். (ரி- 40)

## இறுதியாட்டத்திற்கு முன்னேறிய பிரதேச செயலக அணிகள்

கரணவாய்.செப்.12

யாழ். மாவட்ட செயலக அணிகளுக்கிடையில் நடத்தப்படும் அரச அதிபர் வெற்றிக்கிண்ணத்துக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யாழ். பிரதேச செயலக அணியும் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியும் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளன.

யாழ். மாவட்ட செயலகத்துக்குட்பட்ட 15 அணிகள் பங்குபற்றிய அரச அதிபர் வெற்றிக் கிண்ணத்துக்கான வலைப் பந்தாட்டச் சுற்றுப் போட் டியின் அரையிறுதியாட்டங்கள் நேற்று மாலை இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்றன.

இதில் முதலாவதாக இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் யாழ். பிரதேச செயலக அணியும் சங்கானைப் பிரதேச செயலக அணியும் மோதின. முதல் பாதி ஆட்டத்தில் இரு அணியினரும் சமபலத்துடன் மோதியபோதும் இடைவேளையின் பின்னர் மிகவும் நிதானமாக விளையாடிய யாழ். பிரதேச செயலக அணி 16 : 7 என்ற புள்ளிகள் அடிப்படையில் சங்கானை பிரதேச செயலக அணியை வீழ்த்தி இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது

அடுத்து இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியும் வேலணைப் பிரதேச செயலக அணியும் மோதின. ஆரம்பம் முதல் இறுதிவரை ஆதிக்கம் செலுத்திய தெல்லிப்பழை பிரதேச செயலக அணி 24 :7 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்கு முன்னேறியது. (ரி-10[illegible])



# தடைக்கு தொடரும் வரவேற்பு

சயிட் அஜ்மலுக்கு விதிக்கப்பட்ட தடைக்கு வரவேற்புத் தெரிவித்திருக்கிறார் ஆஸ்திரேலிய பயிற்சியாளர் டேரன் லீமான்.

விதிமுறைக்கு புறம்பாக பந்து வீசுவதாக பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் சயீட் அஜ்மலுக்கு சர்வதேச கிரிக்கெட் சபை தடை விதித்திருப்பதற்கு பலரும் வரவேற்புத் தெரிவித்துவரும் நிலையிலேயே லீமானும் தனது வரவேற்பைத் தெரிவித்துள்ளார்.

அவர் கூறுகையில்; நீங்கள் விதிமுறைக்குட்பட்டு பந்து வீசினால் பிரச்சினை இல்லை.

இல்லாவிட்டால் உங்களது பந்து வீச்சு கவனிக்கப்படும். அதன் அடிப்படையில் முடிவு எடுப்பார்கள். அஜ்மலின் விடயத்திலும் அது தான் நடந்திருக்கிறது. இது விளையாட்டுக்கு நல்ல விடயம் என்றார்.

ஆஸ்திரேலிய அணி அடுத்த மாதம் பாகிஸ்தானுடன் டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடரில் விளையாட இருப்பது குறிப்பிடத்தக்கது. (ரி)

# வென்றது மும்பை இந்தியன்ஸ்



சம்பியன் லீக் சுற்றுத் தொடரின் தகுதிப்போட்டியில் மும்பை அணி 9 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. நேற்று முன் தினம் நடைபெற்ற நான்காவது தகுதி ஆட்டத்தில் சவுதேர்ன் எக்ஸ்பிரஸ் அணியும், மும்பை இந்தியன்ஸ் அணியும் மோதின.

நாணய சுழற்சியில் வென்ற மும்பை அணி களத்தடுப்பைத் தெரிவு செய்தது. இதன் படி முதலில் துடுப்பெடுத்தாடிய சவுதேர்ன் எக்ஸ்பிரஸ் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்கள் மும்பை அணியின் பந்துவீச்சை சமாளிப்பதில் தடுமாறினர். பின்னணி வீரர்கள் பொறுமையாக விளையாடி அணியின் ஓட்ட எண்ணிக்கை அதிகரித்தனர். நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 இலக்குகள் இழப்புக்கு 161 ஓட்டங்களை எடுத்தது. அந்த அணியின் சார்பாக மஹரூப் ஆட்டமிழக்காமல் 41 ஓட்டங்களை அதிகபட்சமாக எடுத்தார்.

வெற்றி பெற 162 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய மும்பை அணி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான சிம்மன்ஸும், மைக்கல் ஹசியும் சவுதேர்ன் எக்ஸ்பிரஸ் அணியின் பந்துவீச்சை சிக்ஸருக்கும் பவுண்டரிக்கும் அடித்து விரட்டினர். இருவரும் இணைந்து முதலாவது இலக்குக்காக 139 ஓட்டங்களை எடுத்தனர். 40 பந்துகளை சந்தித்த ஹசி 60 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். மூன்றாவது இலக்குக்காக களமிறங்கிய பொல்லார்ட்டும் வந்தது முதல் அதிரடியாக விளையாடினார். 17ஆவது ஓவரிலேயே மும்பை அணி 165 ஓட்டங்களை எடுத்து வெற்றி பெற்றது. இறுதியில் மும்பை அணியின் சிம்மன்ஸ் 76 ஓட்டங்களுடனும், பொல்லார்ட் 20 ஓட்டங்களுடனும் களத்திலிருந்தனர். ஆட்டநாயகனாக மும்பை அணியின் சிம்மன்ஸ் தெரிவு செய்யப்பட்டார். (ரி)



# உலகக்கிண்ணத்துக்கு சேவாக் வேண்டாம்




இந்திய அதிரடி ஆரம்பத்துடுப்பாட்ட வீரரான வீரேந்திர சேவாக்கை உலகக்கிண்ண அணியில் இணைக்க கூடாது என்று இணையத்தள வாக்களிப்பில் ரசிகர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

இந்தியாவின் இணையத்தளம் ஒன்று நடத்திய வாக்கெடுப்பு ஒன்றில், 2015 ஆம் ஆண்டு நடைபெறும் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருக்கான இந்திய அணியில் சேவாக் சேர்க்கப்பட வேண்டும் என்ற கருத்து, சரியானது, பரிசீலனைக்கு உகந்தது, தவறு என்ற மூன்று தெரிவுகளுடன் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு வருகிறது.

7,500 பேருக்கும் மேற்பட்டோர் வாக்களித்துள்ள நிலையில், சேவாக்கை அணியில் சேர்ப்பதற்கு 69 சதவீதமானோர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதுடன், 21 சதவீதத்தினர் அவரை அணியில் இணைக்க வேண்டும் என வாக்களித்துள்ளனர். இந்திய அணியின் அதிரடி வீரரான சேவாக், நீண்ட காலமாக அணியில் இடம் கிடைக்காமல் தவித்து வருவது குறிப்பிடத்தக்கது. (ரி)

# அசத்திய பயஸ் போபண்ணா ஜோடி

டேவிஸ் கோப்பை இரட்டையர் பிரிவில்.எழுச்சி கண்ட பயஸ்போபண்ணா ஜோடி போராடி வெற்றி பெற்றது. இதன் மூலம் உலக சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பை இந்தியா தக்க வைத்துக் கொண்டது.

பெங்களூரில் நடைபெறும் டேவிஸ் கோப்பை ரென்னிஸ் 'பிளேஓப் சுற்றில் இந்தியா, செர்பியா அணிகள் விளையாடுகின்றன. ஒற்றையர் பிரிவில் இரண்டு போட்டியிலும் தோல்வியடைந்த இந்திய அணி 0-2 என பின்தங்கியது.

இந்நிலையில் இரட்டையர் பிரிவு போட்டியில் கட்டாய வெற்றியை நோக்கி இந்தியாவின் பயஸ், போபண்ணா களமிறங்கினர். இவர்கள், செர்பியாவின் நினத் ஜிமோன்ஜிக், இலிஜா போஜோல்ஜக் ஜோடியை எதிர்கொண்டனர். முதலிரண்டு செற்களை பயஸ்போபண்ணா ஜோடி 1 - 6, 6 -7 என இழந்தது. பின்னர் எழுச்சி கண்ட இவர்கள் 6 - 3, 6 - 3, 8 - 6 என அடுத்த மூன்று செற்களையும் வரிசையாகக் கைப்பற்றி இந்திய ரசிகர்களை உற்சாகத்தில் ஆழ்த்தினர். இறுதியில் பயஸ், போபண்ணா ஜோடி கடுமையாகப் போராடி வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம், உலக சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பை இந்தியா தக்கவைத்துக் கொண்டது. (ரி)

# மரண அறிவித்தல்

## திருமதி வள்ளிநாயகி தர்மராஜா



இணுவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வள்ளிநாயகி தர்மராஜா நேற்று (15.09.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் நல்லூர் தர்மராசா(தர்மண்ணை) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ் சென்றவர்களான நடராஜா- தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வர்களான கந்தசாமி- யோகம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் நீபன்(லங்கா அசோக் லேலண்ட்) நர்த்தனன் (மாணவன்) ஆகியோரின் அன்புத் தாயும் தையல்நாயகி, செல்வரட்ணம் (கனடா), தெய்வேந்திரம் (கனடா), பாலசுப்பிரமணியம், காலஞ்சென்ற பரமசிவம் ஆகியோரின் அன்பு சகோதரியும் நகுலேஸ்வரி, காலஞ்சென்ற சுகுணராஜ் மற்றும் சற்குணேஸ்வரி (சுவிஸ்), பாக்கியராஜா,குகராஜா (லண்டன்), செல்லத்துரை, யோகராணி(கனடா), ஜெயா(கனடா), தனலக்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியும் பரமலிங்கம், செல்வகாந்தன் (சுவிஸ்), யோகேஸ் வரி(சுவிஸ்), யசோ(லண்டன்) ஆகியோரின் அன்புச் சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(16.09.2014) செவ்வாய்க் கிழமைபி.ப 4.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"நற்துணை இல்லம்"
கிளுவைக்கட்டை ஒழுங்கை
இணுவில் தெற்கு
இணுவில்.

**தகவல்:**
**தர்மராஜா குடும்பத்தினர்**
**(தர்மண்ணை நல்லூர்)**
**முன்னாள் பாதுகாப்பு உத்தியோகத்தர்**
**யாழ்.பல்கலைக்கழகம்)**

(52311)(09)

# கேள்வி அறிவித்தல்

வவுனியா வடக்குப்பிரதேசசபை, நெடுங்கேணி.

கொல்களம் அமைத்தல் (COU/VU/VNPS/W/01(2014))
புதுவிளாங்குளம் கிணறு அமைத்தல் (COU/VU/VNPS/02 (2014)

01. வவுனியா வடக்கு பிரதேசசபை நிதியின் ஒருபகுதி அட்டவணையிலுள்ள திட்டத்திற்கான கொடுப்பனவுக்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. தலைவர், பெறுகைக்குழு, வவுனியா வடக்குப்பிரதேச சபை, நெடுங்கேணி. தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.

03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

04. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி அமைப்புக்கான இக்ராட் (ICTAD) பதிவு மேற்கொள்ளப் பட்டிருத்தல் வேண்டும்.

05. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், வவுனியா வடக்குப்பிரதேச சபை, நெடுங்கேணி (தொலைபேசி:0242053014, மின்னஞ்சல் - vnpsnk@gmail.com ) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாள்களில் காலை 09.00 மணி முதல் மாலை 16.00 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தவிசாளர், வவுனியா வடக்குப்பிரதேச சபை, நெடுங்கேணி எனும் இடத்திலிருந்து 22.09.2014 ஆம் திகதியிலிருந்து 07.10.2014 வரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.1000/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

08. கேள்வி இரு பிரதிகளில் சமர்ப்பிக்கப்பட வேண்டும், அல்லது பதிவுத் தபால் மூலம் தவிசாளர், வவுனியா வடக்குப்பிரதேச சபை, நெடுங்கேணி எனும் முகவரிக்கு 07.10.2014 ஆம் திகதி 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

09. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி எண் | வேலை விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| COU/VU/VNPS/W/01(2014) | கொல்களம் அமைத்தல் | 0.45Mn | 1 Month | C10 or Above | 4500 | 09.01.2015 |
| COU/VU/VNPS/02(2014) | புதுவிளாங்குளம் கிணறு அமைத்தல் | 0.32Mn | 1 Month | C10 or Above | 3200 | 09.01.2015 |

10. கேள்வி முன் கலந்துரையாடல் 30.09.2014 ஆம் திகதி வவுனியா வடக்குப் பிரதேச சபையில் 14.30 மணியளவில் நடைபெறும். இக்கலந்துரையாடலில் கேள்விதாரர்கள் தங்களது செலவில் கலந்து கொள்ளலாம்.

**தலைவர், உள்ளூராட்சி திட்ட பெறுகைக்குழு,**
**வவுனியா வடக்குப் பிரதேசசபை,**
**நெடுங்கேணி.**
**16.09.2014**

(சி/16242)(4.3.6)

# ரெய்னா மீது டோனி வைக்கும் நம்பிக்கை அதிரடிக்கு காரணம் கூறும் பயிற்சியாளர்




இந்திய அணித்தலைவர் டோனி, ரெய்னாவின் மீது வைத்திருக்கும் நம்பிக்கையால் அவர் ஆபத்தான வீரராக திகழ்கிறார் என சென்னை அணியின் பயிற் சியாளர் ஆன்டி பிகெல் தெரிவித்துள்ளார்.

சம்பியன்ஸ் லீக் ரி- 20 போட்டிகளின் தகுதிச் சுற்று ஆட்டங்கள் நேற்று ஆரம்பமாகின. இந்நிலையில் வெள்ளிக்கிழமை சென்னை சுப்பர் கிங்ஸ் அணி வீரர்கள் சென்னை எம்.ஏ. சிதம்பரம் விளையாட்டரங்கில் பயிற்சியில் ஈடுபட்டனர். அப்போது அந்த அணியின் பந்து வீச்சுப் பயிற்சியாளர் ஆன்டி பிகெல் கூறுகையில்::-


இரண்டு முறை சென்னை அணி ஐ.பி.எல் சம்பியன் பட்டம் வெல்ல ரெய்னா காரணமாக இருந்தார். அணித்தலைவர் டோனி, ரெய்னாவின் மீது அதிக நம்பிக்கை வைத்துள்ளார். அதனால் ரெய்னா அதிரடியில் கலக்குகிறார். பந்து அவர் கைக்குப் போனதுமே பந்து வீச்சிலும் அசத்துகிறார். மேலும் அணியில் அஸ் வினின் சுழற்பந்தும் முக் கியதுவம் வாய்ந்ததாக இருக்கிறது. இவர் பந்து வீச் சில் மட்டுமல்ல துடுப்பெடுத் தாட வாய்ப்பு கிடைத்தாலும் எதிரணிக்கு போதுமான தாக்கத்தை ஏற்படுத்தி விடு வார் என்று தெரிவித்தார். (ரி)

# சுற்றுப்பயணத்தில் மாற்றம்

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணி இந்தியாவுக்கு மேற்கொள்ளவுள்ள சுற்றுப் பயணத்தில் சிறிய மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது: முன்னதாக, 20 ஓவர் ஆட்டம் டில்லியில் நடைபெறுவதாக இருந்தது. அதற்குப் பதிலாக, இரண்டாவது ஒருநாள் ஆட்டம் டில்லியில் ஒக்டோபர் 11 இல் நடைபெறும். 20 ஓவர் ஆட்டம் கட்டாக்கில் ஒக்டோபர் 22 இல் நடைபெறும்.

அதேவேளை கொல்கத்தாவில் ஒக்டோபர் 17இல் நடை பெறுவதாக இருந்த 4ஆவது ஒருநாள் ஆட்டத்திற்குப் பதிலாக 5ஆவது ஒருநாள் ஆட்டம் ஒக்டோபர் 20 இல் கொல்கத்தாவில் நடைபெறும். இந்தச் சுற்றுப் பயணத்தில் மேற்கிந்தியதீவுகள் அணி இரண்டு பயிற்சி ஆட்டங்கள், 5 ஒருநாள் ஆட்டங்கள், ஒரு ரி- 20 ஆட்டம், ஒரு முதல்தர ஆட்டம், 3 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடவுள்ளது. (ரி)




# அஜ்மலுக்கு டிராவிட் அறிவுரை

சயீட் அஜ்மல் கவனத்துடன் பந்து வீச வேண்டுமென இந்திய முன்னாள் வீரர் ராகுல் டிராவிட் அறிவுரை வழங்கியுள்ளார்.

மும்பையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய டிராவிட் அஜ்மலுக்கு விதிக்கப்பட்ட தடை குறித்து கருத்துத் தெரிவிக்கையில், பந்தை சுண்டி வீசுவது என்பது பெரிய குற்றமல்ல என்பது எனது தனிப்பட்ட கருத்து. எனினும் ஐசிசிக்கு என்று விதிமுறை உள்ளது. அவை கூறும் தவறுகள் சரி செய்யப்பட வேண்டும். பந்து வீசும் போது 15 பாகை வரை முழங்கையை மடக்கலாம் என்பது விதி. மெக்ராத் கூட தனது முழங்கையை மடக்கித்தான் பந்து வீசுவார். ஆனால் அது 15 பாகைக்கு உட்பட்டதாகவே இருந்தது. எனினும் தற்போது நவீன தொழில்நுட்பங்கள் தவறை சரியாக கண்டறிந்து அவற்றை திருத்திக் கொள்ளவும் வாய்ப்பு இருப்பது மகிழ்ச்சிக்குரியது. அஜ்மலின் பந்து வீச்சில் 2009ஆம் ஆண்டில் ஏற்கனவே ஒருமுறை சந்தேகம் ஏற்பட்டு பின்னர் அது சரி செய்யப்பட்டது. இப்போது மீண்டும் அவரது பந்து வீச்சு தடை செய்யப்பட்டுள்ளது. எனவே அவர் சற்று கவனத்துடன் பந்து வீச வேண்டும் என்றார். அத்துடன் ஒருநாள் கிரிக்கெட் போட்டி தற்போது பலவீனமான நிலையிலும், தன்னை நிலை நிறுத்திக் கொள்ள போராடும் நிலையிலும் உள்ளது. எனவே அதனை முறைப்படி நடத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். (ரி)

# கண்ணீர் அஞ்சலி



கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது லண்டனில் வசித்து வந்தவருமான

**திருமதி தருமலிங்கம் யோகராணி**

அவர்கள் நேற்று(15.09.2014)திங்கட்கிழமை லண்டனில் காலமான செய்தி கேட்டு துயர்அடைவதுடன்,அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்,

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

சகோதரிகள்: திருமதி பஞ்சநாதன் புஷ்பராணி, திருமதி பாலசுப்பிரமணியம் சுந்தரதேவி, திரு.திருமதி அழகரட்ணம் சிமெலர்.

## பாலமுனையில் அஷ்ரப் நினைவாக அபிவிருத்திப் பணிகள்

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பாலமுனை பிரதேசத்தில் 14 கோடி ரூபா செலவில் நிர் மாணிக்கப்பட்ட அபிவிருத்தி பணிகள் மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு மற்றும் அபிவிருத்தி செய்யப்படவுள்ள பணிகள் ஆரம்பிக்கும் நிகழ்வும் தொடர்பான உயர்மட்ட கலந்துரையாடல் கூட்டம் பாலமுனை அல்- ஹிதாயா வித்தியாலயத்தில் இடம் பெற்றது.

பாலமுனை தேசிய காங்கிரஸின் அமைப்பாளர் கே.எல். உபைத்துல்லா தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் நீர் வழங்கல் அமைச்சரும், கிழக்கு மாகாண சபை அமைச்சரவையின் பேச்சாளருமான எம்.எஸ்.உதுமாலெப்பை கலந்து சிறப்பித்தார்.

மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப்பின் நினைவாக இன்று 16ஆம் திகதி முழு நாளாக இந்த அபிவிருத்திப் பணிகள் மக்களிடம் கையளிக்கப்பட்டு மேலும் பல அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன. (ஓ-10)

## பொத்துவில் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் வைத்தியசாலையில்

பொத்துவில் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எல். அப்துல் றகீம் பலமான முறையில் தாக்கப்பட்ட நிலையில் பொத்துவில் ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை பொத்துவில் பிறைன்துரைக் கண்டம் வன்னியனார் வாய்கால் பகுதிக்கான புதிய விவசாய அபிவிருத்தி குழுத்தெரிவின் போது ஏற்பட்ட குழப்ப நிலையினால் பிரதேச அரசியல் பிரமுகர் ஒருவரின் அடியாள்களால் கடுமையான முறையில் தாக்கப்பட்டுள்ளார். இந்த குழப்ப நிலையினை கட்டுப் படுத்த முயன்ற கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஐ. றாபி மற்றும் காஜாமுகைதீன் ஆகியோரும் பலமாக தாக்கப்பட்டுள்ளார்கள்.

பொத்துவில் பிரதேச அரசியல் வாதியின் சகோதரர் தொடர்ந்து நிர்வாகப் பதவியை தக்க வைத்துவந்தநிலையில்ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிர்வாகத் தெரிவில் அவர் தெரிவு செய்யப்படவில்லை. இதனையடுத்தே இந்தக் குழப்பம் ஏற்பட்டள்ளது. இது தொடர்பில் பொலிஸாரினால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (10)

## அறபுக் கல்லூரி மாணவர்களுக்கு நிதியுதவி

பதுளைப்பிட்டி அறபுக் கல்லூரியில் கல்விபயிலும் மாணவர்களின் அடிப்படை வசதிகளுக்கு கிழக்கு மாகாண விவசாய கால்நடை உற்பத்தி, கைத்தொழில் அபிவிருத்தி, மீன்பிடி மற்றும்சுற்றுலாத்துறைஅமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான நஸீர் அஹமட் நிதியுதவி வழங்கியுள்ளார்.


# அக்கரைப்பற்றில் டெங்கு ஒழிப்பு மும்முரம்

கல்முனை, செப், 16

தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு அக்கரைப் பற்று பிரதேச சுகாதார வைத்தியதிகாரி காரியாலயமும் ஸ்ரீலங்கா தௌஹீத் ஜமாத் அக்கரைப்பற்றுக் கிளையும் இணைந்து ஞாயிற்றுக்கிழமை அக்கரைப்பற்றில் டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டத்தில்மும்முரமாகஈடுபட்டன.

அக்கரைப்பற்று பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எம். முனவ்வர் தலைமையிலான சுகாதாரப் பிரிவினர் வீட்டுத் தரிசிப்புக்களை மேற்கொண்டு பரிசீலனை மேற்கொண்டதுடன் பொது மக்களுக்கு நுளம்பு ஒழிப்புத் தொடர்பான ஆலோசனைகளை வழங்கியதுடன் வீட்டிலுள்ள கிணறுகளில் நுளம்பு பெருகுவதைக் கட்டுப்படுத்த கெப்ரீஸ் வகை மீன் குஞ்சுகளும் விடப்பட்டன.

இவ்வேலைத்திட்டத்தில்பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களான ஏ.எச். பௌமி, எம்.எம். ஜெஸீர், மற்றும் ஸ்ரீலங்கா தௌஹீத் ஜமாத் அக்கரைப் பற்றுக்கிளையின் முக்கி யஸ்தர்களான எம்.எம். நிஹாம், ஏ.எச்.எம். சிபாஸ், மௌலவி ஏ.எல்.எம். பாஸித், எம். பாறூக் உட்பட பிரதேச சுகாதாரப் பணிமனை உத்தியோகத்தர்களும், தௌஹீத் ஜமாத் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். இவர்களுடன் அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தர்களும் இராணுவ படையின் உத்தியோகத்தர்களும் இணைந்து இவ் வேலைத்திட்டத்தை முன்னெடுத்தனர். (ஒ-10)



# 51 வயது பெண்ணை துஷ்பிரயோகம்; முயன்ற இளைஞனுக்கு விளக்க மறியல்

கல்முனை, செப். 16


51வயது பெண்ணொருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்த 24 வயது இளைஞன் ஒருவரை கல் முனைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கல்முனை இரண்டாம் குறிச்சியில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது.

வெள்ளிக்கிழமை இரவு 9 மணியளவில் வீட்டில் குறித்த பெண் தனிமையில் இருந்துள்ளார். அப்போது அயலில் வசிக்கும் இளைஞன் மது போதையுடன் குறித்த பெண்ணின் வீட்டிற்குள் நுழைந்து அவரை வன்புணர்வுக்குட்படுத்த முயன்றுள்ளான்.

வழமையாக நட்புடன் வீட்டுக்கு வந்துபழகும் அந்த இளைஞன் அன்றைய தினம் அப் பெண் மீது தவறாக நடக்க முற்பட்டதைத் தொடர்ந்து அவர் கூச்சலிட்டுள்ளார். கூக்குரலை கேட்ட அயலவர்கள் ஓடி வந்து அப்பெண்ணை இளைஞரிடம் இருந்து காப்பாற்றியுள்ளனர். இந்தச் சம்பவத்தில் ஈடுபட்ட இளைஞன் அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளான்.

இதனையடுத்து கல்முனைப் பொலிஸ் பெருங்குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் சோமகுமார தலைமையில் சென்ற பொலிஸாரால் சனிக்கிழமை குறித்த இளைஞன் கைது செய்யப்பட்டு கல்முனை நீதிவான் நீதி



மன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டான். வழக்கை விசாரித்த பதில் நீதிபதி எஸ்.பேரின்பராஜா, சந்தேகநபரை எதிர் வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

பாதிக்கப்பட்ட பெண் கல்முனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-10)

# விழிப்பூட்டல் செயலமர்வு

கல்முனை, செப். 16

சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் இளைஞர் யுவதிகளுக்கானதும் பெண் பிள்ளைகளின் வாழ்க்கைதிறனை அபிவிருத்தி செய்தல் மற்றும் சுகாதாரம் தொடர்பான விழிப்பூட்டுதல் வேலைத்திட்டம் ஞாயிற்றுக்கிழமை கல்முனை அல் பஹ்ரியா மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

கல்முனை பிரதேச செயலக பிரிவின் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஏ.எல். முஷ்பிரா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வளவாளர்களாக கல்முனை அஸ்ரப் வைத்திய சாலை உளநல வைத்தியர் யு.எல்.சராப்தீன், கல்முனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கப்பார், கல்முனை பிரதேச செயலகத்தின் மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.எம். ரிஸ்வி மற்றும் உளவளத்துணையாளர் பீ.எம். ரஷாத் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் இளவயது திருமணத்தின் உளவியல் மற்றும் உடலியல் பாதிப்புகள், இளைஞர் யுவதிகளின் பிரச்சினைகளும் அவர்களின் எதிர்காலமும், பெண்கள் சிறுவர் துஷ்பிரயோகமும் அதை தடுத்தலும் ஒரு சட்டரீதியான பார்வை, பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துதல், தற்கால பெண்களின் பிரச்சினைகள் ஓர் உளவியல் நோக்கு போன்ற தலைப்புகளில் உரைகள் நிகழ்த்தப்பட்டதுடன் நூற்றுக்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்களும் பெற்றோரும் கலந்து கொண்டனர். (ஒ-10)



கத்தோலிக்க திருச்சபை உலகளாவிய ரீதியில் திருச்சிலுவையின் திருவிழாவை கொண்டாடிவருகின்றது. இதனைமுன்னிட்டு மட்டக்களப்பு மறை மாவட்டத்திற்கு உட்பட்ட சொறிக்கல்முனையில் அமைந்துள்ள திருச்சிலுவை திருத்தலத்தில் ஞாயிறன்று காலை 7மணிக்கு மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயரின் தலைமையில் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு உறுதிபூசுதல் திருவருட் சாதனமும் வழங்கப்பட்டது. (ஒ-10)

# காதலித்த பெண்ணை கடத்திய இளைஞன் உட்பட நால்வர் கைது

## திரைப்படப் பாணியில் திருமலையில் சம்பவம்

ஏழு வருடங்களாக காதலித்த பெண்ணை திருகோணமலையில் இருந்து பருத்தித்துறைக்கு கடத்திச் சென்ற இளைஞர் உட்பட நான்கு பேரை பதவியா பொலிஸார்கைதுசெய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது.

யாழ்ப்பாணம் பருத்தித்துறையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் திருகோணமலை உவர் மலை பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவரை கடந்த ஏழு வருடங்களாக காதலித்து வந்துள்ளார். காதலித்த பெண்ணின் சம்மதத்துடன் வான் ஒன்றில் யாழ்ப்பாணம் பருத்தித்துறைக்கு கடத்திச்சென்ற போது பெண்ணின் தந்தை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு முறையிட்டுள்ளார்.

இதனையடுத்து பொலிஸ் நிலையங்களுக்கு தகவல் வழங்கப்பட்டு பதவியா பொலிஸார் பெண்ணை மீட்டதுடன் கடத்திச் சென்ற நான்கு பேரையும் கைது செய்து செய்தனர்.

கடத்தலுடன் தொடர்புடைய நான்கு சந்தேகநபர்களையும் பொலிஸார் திருகோணமலை நீதிமன்றில் ஞாயிற்றுக்கிழமை முன்னிலைப்படுத்திய போது இம்மாதம் 17ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் கயான் கமகே உத்தரவிட்டார். மேலதிக விசாரணைகளை பதவியா பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (10)

## தேவை

யாழ் நகரில் ஸ்ருடியோ ஒன்றுக்கு Video Editor (Adope Premiere) Photo Designer (Photo shop) அனுபவ முள்ளவர்கள் இருபாலாரும் நேரில் வரவும்.

309, நாவலர் வீதி, (52301)(7.6.3)
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
0777162339

## வடக்கு மாகாண முதலமைச்சர் வைத்தியசாலையில் அனுமதி

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுக்கு காலில் ஏற்பட்ட உபாதையின் காரணமாகக் கடந்த சில நாள்களாகப் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கடந்த வாரம் முழங்காவில் பகுதிக்குச் சென்ற வேளை காலில் ஏற்பட்ட காயம் காரணமாகக் கடந்த சில நாள்களாக அவர் உபாதைக்குள்ளாகியிருந்தார். தனியார் சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்று வந்தபோதும் அது பலனளிக்காதமையினால் நேற்று அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறச் சென்ற வேளை விடுதியில் அனுமதிக்கப்பட்டார். (த--101)

## இலங்கையர் மூவர் இத்தாலியில் கைது

கொழும்பு, செப்.16
இத்தாலியின் கட்டானியா மாகாணத்தின் சிசிலி பகுதியில் மோதலில் ஈடுபட்ட மூன்று இலங்கையர்களை அந்த நாட்டுப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.
சன் கியோவன்னிலா புட்னா பொலிஸார் இவர்களை நேற்று முன்தினம் இரவு கைது செய்துள்ளனர். மோதலில் ஈடுபட்டனர் என்று கூறப்படும் 36, 34 மற்றும் 24 வயதான இலங்கையர்களே இவ்வாறு கைது செய் யப்பட்டுள்ளனர். மூன்று இலங்கையர்களுக்கும் இடையிலான வாக்குவாதம் முற்றியதை அடுத்து இந்த மோதல் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. கைது செய்யப்பட்டவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் பொலிஸார் மேலதிக விசாரணை நடத்தி வருகின்றனர். (ற)

## நோர்வே தூதுவர் இன்று வருகிறார்

இலங்கைக்கான நோர்வே தூதுவர் இன்று யாழ். குடாநாட்டுக்கு பயணம் செய்வதோடு முக்கிய அதிகாரிகள் பலரையும் சந்தித்து கலந்துரையாடுவார்எனத் தெரிவிக்கப்படுகின்றது.
இவ்வாறு பயணம் செய்யும் தூதுவர் சந்திக்கும் பிரமுகர்கள் பட்டியலில் முதலமைச்சரின் பெயரும் உள்ளடங்கியுள்ள போதும் முதலமைச்சர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதால் இவருடனான சந்திப்புக்கள் இடம்பெற மாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (த-101)

## மரண அறிவித்தல்

### மாரிமுத்து பாலசுந்தரம்
(முன்னாள் உரிமையாளர் பாலா கராஜ் - சாவகச்சேரி)



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட மாரிமுத்து பாலசுந்தரம் 14.09.2014 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து- மாரிமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மட்டுவில் வாகையடியைச் சேர்ந்த துரைபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், பவளராணியின் அன்புக் கணவரும், மாரிமுத்து கனகசபை, காலஞ் சென்ற மாரிமுத்து சிவஞானத்தின் அன்புச் சகோதரனும், சுதாமினி(கனடா), தர்மேந்திரா(ஆஸ்திரேலியா- பல்வைத்தியர்), சத்தியதீபா(கனடா), அனுராதா(காணி நிர்வாக திணைக்களம்- யாழ்ப்பாணம்), யசேந்தினி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், விக்கி னேஸ்வரன், காயத்திரி, நந்தகுமார், சியாமளன்(ரட்ணாஸ் வைன்டிங் சொப் -ஸ்ரான்லி றோட்), பிரபாகர் ஆகியோரின் அன்பு மாமனாரும், கந்தசாமி, யோகராணி, தர்மரட்ணம், ஜெயராணி, அமிர்தராணி, பாக்கியதுரை, அற்புதராணி, மகாதேவா ஆகியோரின் அன்பு மைத்துனரும், வினிசன், வினிஜா, இசான், மாயா, அஸ்வின், றெவின், அஸ்மிகா, பர்மினி, ஆகாஷினி, கவின்சன், ஆரியா, விதிஜா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

0776141496 (52307)(5.6) தகவல்: குடும்பத்தினர்.

ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நம
## மரண அறிவித்தல்



### கிருஸ்ணபிள்ளை வரராஜசிங்கம் (ஆச்சாரியார்)

யாழ்.மாவிட்டபுரம் மடத்தடி செந்தாவத்தையை பிறப்பிடமாகவும் இல.80,வியாசர் வீதி தோணிக்கல், வவுனியாவை வசிப்பிடமாகவும்கொண்ட கிருஸ்ணபிள்ளை வரராஜசிங்கம் (ஆச்சாரியார்) அவர்கள் (14.09.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான கிருஸ்ணபிள்ளை- இளையபிள்ளை தம்பதியினரின் மூத்த புதல்வனும், காலஞ் சென்றவர்களான கனகரட்ணம் சரஸ்வதி தம்பதியினரின் மருமகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் கௌரிமலர், ஸ்ரீசெல்வநாதன் (ஜேர்மனி), அருணகிரிநாதன், மிருணாளினி, கிருபாகரன் காலஞ்சென்ற வசுதராணி மற்றும் தயாபரன் (கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம், வவுனியா, உரிமையாளர் ஸ்ரீ ஐயப்பன் ஒப்பந்த காரர்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் காலஞ்சென்றவர்களான வையாபுரி, தங்கமணி மற்றும் இராசமணி ஆகியோரின் அன்புச்சகோதரரும் காலஞ் சென்ற திசைநாதன், குணேஸ்வரி , சறோஜினிதேவி, பாலச்சந்திரன், பத்மாவதி ஆகியோரின் மாமனாரும் மோகன்ராஜ், தர்மினி, வசுதா, கல்பனா, காஞ்சனா, பிரவீனா, சிந்துஜன், பிரதீபன், டிலக்ஸன், லக்ஸிதா, சஜித், கிருசாந், நிறோஜினி, பவிந்தன், ரதுஷா, ரதீஷன், ஆகியோரின் பாசமிகு பேரனும் தக்ஷகன், பவிஸ்னா, ஆகியோரின் பூட்டனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.09.2014) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தோணிக்கல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

T.P-024 222 5595 / 077 936 4248 (C16243)(8-6)
தகவல்: குடும்பத்தினர்

## வாழ்த்துகிறோம்



கடந்த 13.09.2014 நடைபெற்ற N. சுபாஸ்-அனுஷா தம்பதியினராகிய எமது திருமணத்துக்கு உதவியமைக்காக கோண்டாவில் இராஜேஸ்வரி மண்டப குடும்பத்தினரை மனமார வாழ்த்துகின்றோம்.
Best Wishes
சுபாஸ்-அனுஷா தம்பதியினர் (52299)(7.6.3)

## கண்ணீர் காணிக்கை

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில்
பிரதம முகாமை உதவியாளராகக்
கடமையாற்றும்
திருமதி அ. ஜெளவனரூபி
அவர்களின் அன்புக் கணவர்



### நாகராசா அகிலன்

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். பிரிவால் துயருறும் அவரது குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை சமூகம் (52302)(7.6.3)

## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரி ஆசிரியர் W.T.நந்திவர்மன்
அவர்களின் அன்புத் தந்தையார்
டானியல் எட்வின்
விஜயரட்ணம்
அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு
அன்னாரின் ஆன்மா ஆண்டவன் பாதத்தில்
இளைப்பாறப் பிரார்த்திப்பதுடன், அவரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்து நிற்கின்றோம்.

ஆசிரியர் சங்கம், யா/புனித பத்திரிசியார் கல்லூரி. (52305)(5.6.3)

## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரி ஆசிரியர் S. அனிஸ் தயந்தன்
அவர்களின் அன்புத் தந்தையார்



### மனுவல்பிள்ளை செபஸ்ரியாம்பிள்ளை

அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு அன்னாரின் ஆன்மா ஆண்டவன் பாதத்தில் இளைப்பாறப் பிரார்த்திப்பதோடு, அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(52304)(7.6.3) ஆசிரியர் சங்கம், யா/புனித பத்திரிசியார் கல்லூரி.

## மரண அறிவித்தல்

### பூமணி வீரசிங்கம்

கச்சேரிகிழக்கைச் சேர்ந்த பூமணி வீரசிங்கம் நேற்று (15.09.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம்- இராசம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வீரசிங்கத்தின் அன்பு மனைவியும் மங்களேஸ்வரி, பாலச் சந்திரன், விமலேஸ்வரி, சந்திரகுமார்(இந்திரன்), ஜெகதீஸ்வரி (லலி), உதயகுமார், ஆகியோரின் அன்புத் தாயாரும் மோகனதாஸன்(காந்தி), சசிபாலினி(மேனகா), காலஞ்சென்ற விஜயகுலராஜா மற்றும் அனுசா, ஏகலநாதன் (நந்து), மிராளினி (மீரா), ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

ஸ்ரான்லிக் கல்லூரி வீதி,
கச்சேரி கிழக்கு,
யாழ்ப்பாணம். (52309)(08)
தகவல்: குடும்பத்தினர்

## பகிரங்க ஏலவிற்பனை அறிவித்தல்

சாவகச்சேரி பிரதேச சபையில் அலுமினிய பிற்றிங் (கண்ணாடியுடன்), வெற்றுப் போத்தல்கள், பிளாஸ்ரிக் பொருள்கள் என்பன 23.09.2014 செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணிக்கு கச்சாய் ஆயுள்வேத வைத்தியசாலை வளாகத்தில் பகிரங்க ஏலத்தில் விடப்படவுள்ளன.

ஏலம் தொடர்பான நிபந்தனைகளை 16.09.2014 தொடக்கம் 22.09.2014 வரை சாவகச்சேரி பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தவிசாளர்,
சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்.

## தொடர்ச்சிகள்

### தேவையற்ற

கொலையிலிருந்து பாது காக்க சர்வதேச பொறிமுறையை ஏற்படுத்துமாறு கோரி வடக்கு மாகாண சபையில் ஆளுங் கட்சி உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கத்தால் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. குறித்த பிரேரணை ஆரம்பத்தில் சபையின் நிகழ்ச்சி நிரலில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. இதனை எதிர்த்து மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம், சபையின் நடுவே அமர்ந்து போராட்டம் நடத்தினார்.

அடுத்த அமர்வில் குறித்த பிரேரணை சபை நிகழ்சி நிரலில் எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தாலும், உறுப்பினர் சிவாஜிலிங்கம் கலந்து கொள்ளாமையால் அடுத்த அமர்வுக்குப் பிரேரணை ஒத்திவைக்கப்பட்டிருந்தது. கடந்த மாதம் இடம்பெற்ற அமர்வில் மீளவும் பிரேரணை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, குறித்த பிரேரணையை திருத்தங்களுடன் அடுத்த அமர்வில் சமர்ப்பிப்பது என்று முடிவெடுக் கப்பட்டிருந்தது.

இதன் பின்னர் கடந்த 10 ஆம் திகதி இடம்பெற்ற அமர்வில் திருத்தப்பட்ட பிரேரணை எடுத்துக் கொள்ளப்பட்ட போது, குறித்த பிரேரணை தொடர்பில் கட்சித் தலைமையின் அறிவுறுத்தலுக்கு அமைய அடுத்த அமர்வில் எடுத்துக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் அடுத்த அமர்வுக்காக மாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் குறித்த பிரேரணையை மீளவும் சமர்ப்பித்துள்ளார்.

இது தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவரிடம் கேட்ட போது,

"இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மாநாட்டிலும் குறித்த பிரேரணையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் பேசியுள்ளோம். குறித்த பிரேரணையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு பொறுப்பெடுத்துசெயற்படுத்தும். மேலும் பொருத்தமான ஆவணங்களையும், சாட்சிகளையும் திரட்டும் நடவடிக்கைகளை கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவினர் மேற்கொண்டுள்ளனர்.

மாகாணசபைக்கு எத்தனையோ அலுவல்கள் உள்ளன. முரண்பாடுகள் ஏற்படுத்தும் வேலையை செய்யாமல் இருக்க வேண்டும். குழப்பம் ஏற்படுத்துவதற்காக பிரேரணைகளைக் கொண்டு வருவதை விடுத்து அர்த்தமுள்ள வகையில் செயற்பட வேண்டும்.

சர்வதேச - இராஜதந்திர விடயங்களை வடக்கு மாகாண சபையில் கொண்டு வந்து குழப்பங்களை ஏற்படுத்தக் கூடாது. ஐ.நா. மனித உரிமைகள் சபையில் போர்க் குற்ற விசாரணை ஏற்கனவே கொண்டு வரப்பட்டு அது நிறைவேற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதனைக் குழப்பக் கூடாது" - என்றார்.

(ந-5)

### 2015ஆம்

மனித வளங்களை அடிப்படை யாகக் கொண்ட ஓர் வரவு செலவுத் திட்டமாக இந்த வரவு செலவுத் திட்டம் அமையும் எனத் தெரிவிக்கப்படுகிறது. சுயதொழில், தொழில் வாய்ப்பு உள்ளிட்ட காரணிகள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட உள்ளது என்று பெயர் குறிப்பிட விரும்பாத நிதி அமைச்சு அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

சுகாதாரம் மற்றும் கல்வித் துறைக்கான ஒதுக்கீடுகள் அதிகரிக்கப்பட உள்ளது என்றும், 'வரவு-செலவுத் திட்ட தயாரிப்பு குறித்து பேச்சு நடத்தப்பட்டு வருகின்றது என்று திறைசேரி அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்து இந்த வரவு-செலவுத் திட்டம் அமையக் கூடுமென அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இந்தமுறை வரவு-செலவுத் திட்டத்தில் சம்பள உயர்வுகளை எதிர்பார்க்க முடியும் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர். அத்துடன் நவம்பர் மாதம் 7ஆம் திகதி வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுவதன் மூலம், ஜனாதிபதி தேர்தல் முன்கூட்டியே நடத்தப்படலாம் என்றும் ஊடகம் வெளியிடப்பட்டுள்ளது.

(ந)

### சுன்னாகம்

னாகம் மின் உற்பத்தி நிலையத்திலிருந்து வடக்குப் பக்கமாக கழிவு எண்ணெய்ப் படிவு நகர்கிறது. காங்கேசன்துறை வரையிலுள்ள பிரதேசங்கள் பாதிப்பை எதிர்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலத்தில் துளையிடப்பட்டு கழிவு எண்ணெய் கீழே செலுத்தப்பட்டதாலேயே இவ்வளவு விரைவாக அது நிலத்தடி நீருடன் கலந்து அதனை மாசுபடுத்தியிருக்கிறது என்றும் சுட்டிக் காட்டப்படுகிறது. இந்தச் செயற்பாடு காரணமாக 2011 ஆம் ஆண்டு, மின் உற்பத்தி நிலையத்துக்கு அருகிலுள்ள வீடுகளின் கிணறுகளில் நீருடன் கழிவு ஒயில் கலந்துள்ளமை அவதானிக்கப்பட்டது.

இதன் பின்னர் அதன் சுற்றாடலில் கழிவு எண்ணெய் கலந்தமை அவதானிக்கப்பட்டது. தற்போது மின் உற்பத்தி நிலையத்திலிருந்து மூன்று கிலோ மீற்றர் தொலைவிலும், கிணற்றில் கழிவு எண்ணெய் கலந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதுவரையில் 5 கிராம சேவையாளர் பிரிவுகளில் இதன் பாதிப்பு உணரப்பட்டுள்ளது.

சுன்னாகம் நகரம் தெற்கு கிராம சேவையாளர் பிரிவு (ஜே/196), சுன்னாகம் நகரம் கிழக்கு (ஜே/197), சுன்னா கம் நகரம் மேற்கு (ஜே/199), ஏழாலை மேற்கு (ஜே/201), ஏழாலை தெற்கு (ஜே/203) ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் பெரும்பாலான கிணறுகளில் கழிவு எண்ணெய் கலந்துள்ளது.

காங்கேசன்துறை கடற்கரை வரையிலுள்ள கே.கே.எஸ் வீதியினூடாக கிராமங்கள் விரைவில் பாதிக்கப்படக் கூடும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது.

(உ-5)

### 15 நாளில்

கடந்த காலங்களை விடவும் தற்போது வடக்கில் குறிப்பாக யாழ். மாவட்டத்திலேயே டெங்குத் தாக்கம் அதிகரித்துள்ளது. இந்த மாதம் இதுவரையான காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் மாத்திரம் 28 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். மன்னாரில் 6 பேரும், கிளிநொச்சி மற்றும் வவுனியாவில் ஒவ்வொருவரும் டெங்கால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஜனவரியிலிருந்து இதுவரை யாழ்ப்பாணத்தில் மாத்திரம் 818 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியிருப்பர் என்ற அடிப்படையில் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவ்வாறு வவுனியாவில் 102 பேரும், முல்லைத்தீவில் 80 பேரும், மன்னாரில் 55 பேரும், கிளிநொச்சியில் 43 பேரும் சேர்க்கப்பட்டனர். கொழும்பில் இந்த மாதம் மாத்திரம் 110 பேரும், இந்த வருடம் 10 ஆயிரத்து 19 பேரும் டெங்கு தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(ந-4)

### 3 பீடங்களை

ஆனந்தகுமாரசுவாமி விடுதியில் தங்கியுள்ள மாணவர்களுக்கே இவ்வாறு டெங்கு தொற்று ஏற்பட்டுள்ளது. அதனையடுத்து அங்கு புகையூட்டல் உள்ளிட்ட பல செயற்பாடுகள் நேற்று மேற்கொள்ளப்பட்டன. எனினும் அவற்றைப் பூரணமாகச் செய்து முடிப்பதற்குக் காலஅவகாசம் தேவைப்படுவதால் அங்குள்ள சுமார் 300 மாணவர்களும் அந்த விடுதியிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். அதனால் விரிவுரைகள் நிறுத்தப்பட்டுள்ளன என்று பல்கலைக் கழகத் தரப்புத் தெரிவித்தது.

(ந-4)

### அரசுடன்

வான விளக்கம் ஒன்றினை தெரியப்படுத்தி உள்ளார். எனவே, அரசு, மக்களின் பாதுகாப்பிலும் அபிவிருத்தி விடயங்களிலும் கரிசனையுடன் உள்ளது. பொய்ப் பரப்புரைகளின் மூலம் முஸ்லிம் மக்கள் அரசு மீது அச்சம் கொள்ளத் தேவையில்லை" - என்றார்.

(ந)

### உருக்குலைந்த

நிலையில் அடையாளம் காண முடியாத வகையில் காணப்பட்டது.

மதியம் 12 மணியளவில் சம்பவ இடத்துக்குச் சென்ற மன்னார் மாவட்ட திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ரி.பி.சிந்தாத்துரை சடலத்தை பார்வையிட்டதோடு, சடலத்தை அடையாளம் காண்பதற்காக வைத்தியசாலையில் சேர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

சடலம் தற்போது மன்னார் பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

அதேவேளை மன்னார் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வங்காலை கடற்கரையோரப் பகுதியில் உருக்குலைந்த நிலையில் ஆண் ஒருவருடைய சடலம் கடந்த 3 ஆம் திகதி புதன்கிழமை மீட்கப்பட்டது. குறித்த சடலம் அடையாளம் காண்பதற்காக மன்னார் பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

(ந-56)

### இந்திய

டுள்ள குழுவினருடன் கடற்றொழிலாளர் இணையத்தைச் சேர்ந்தவர்களையும் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இதனைவிட வடபகுதி மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களின் தொழில் முயற்சிகள் தொடர்பான விவரங்கள் கிடைக்கப்பெற்றால் அவற்றுக்கு ஏற்ப உதவிகளை வழங்கத் தயாராகவுள்ளோம். அத்துடன் சிவில் சமூகத்துடன் ஒன்றி ணைந்து செயற்படத் தயாராக இருக்கிறோம் - என்றார்.

வடமாகாணக் கடற்றொழிலாளர் இணையத்தின் பிரதிநிதிகள் மற்றும் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் இணைப்பாளர் அன்ரனி யேசுதாசன் தலைமையிலான குழுவினர் மீனவர் பிரச்சினை தொடர்பாகவும், மீள்குடியேற்றம் மற்றும் பெண்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள் தொடர்பாகவும் 7 கோரிக்கைகள் அடங்கிய கடிதம் ஒன்றையும் முதலமைச்சரிடம் கையளித்தனர்.

இந்திய இழுவைப்படகுகளின் வருகையினால் வடபுலத்து மீனவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு பெற்றுத் தரவேண்டும், வடபுலத்து மீனவர்கள் ஒன்றிணைந்து பொதுச் செயற்பாடுகளைச் செயற்படுத்துவதற்கு உதவவேண்டும், மாவட்ட மட்ட ரீதியில் மீனவர்களுடன் கலந்துரையாடல் நடத்தி வடமாகாணத்துக்கான பொதுத் திட்டமிடல் ஒன்றை மேற்கொள்ள வேண்டும், சட்ட விரோதமான மீன்பிடி முறைகளை முழுமையாகத் தடை செய்வதற்கு துரித நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும், தென்னிலங்கை மீனவர்களின் வருகையால் வடபுலத்து மீனவர்கள் படும் துன்பங்களைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும், வலி.வடக்கு மக்களின் மீள்குடியேற்றப் பிரச்சினையை முக்கிய பிரச்சினையாகக் கொண்டு அவர்களை உடனடியாக மீள்குடியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும், மீனவர் சமூகத்தைச்சார்ந்த பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் முகம் கொடுக்கும் துன்ப நிலையைக் குறைப்பதற்கு அவர்களின் பொருளாதாரம்மற்றும் உரிமைகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும், வடமாகாண கடற்றொழிலாளர் இணையம் என்ற ரீதியில் மாகாண மட்ட மீனவர்களின் பிரச்சினையை ஆராயும் குழுவில் இணையத்தையும் இணைத்துக் கொள்ள நடவடிக்கைஎடுக்கவேண்டும் ஆகிய 7 கோரிக்கைகள் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

(த-14)

### வெட்கித்

வெட்கம் இல்லாமல் கூறியுள்ளார். தமது இனத்தைப் பாதுகாக்கவேண்டிய குறித்த அமைச்சர் இவ்வாறு கூறுவது எவ்வளவு கேவலமானது. இனியாவது முஸ்லிம் மக்கள் விழித்தெழுந்து மஹிந்த அரசுக்கும், இந்த அரசுக்கு முண்டு கொடுக்கும் முஸ்லிம் அமைச்சர்களுக்கும பாடம் புகட்ட வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

தம்புள்ளை ஹைரியா ஜும்ஆ பள்ளிவாசலின் மீது நேற்று நள்ளிரவு குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அத்துடன், பள்ளிவாசலை முற்றாக எரிப்பதற்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது, எனினும், அதிர்ஷ்டவசமாக பள்ளிவாசலுக்கு எதுவித சேதமும் ஏற்படவில்லை.

பள்ளிவாசல் மீதான இந்த அராஜக நடவடிக்கை குறித்து நேற்று 'உதய'னிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் மேற்படி விடயங்களைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அளுத்கம, தர்ஹா நகர், பேருவளை பகுதிகளில் முஸ்லிம் இனத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வன்முறை தொடர்பில் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை. அதே போல் தம்புள்ளை பள்ளிவாசல் மீது சிங்களப் பேரினவாதிகளால் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள அராஜக நடவடிக்கைகள் தொடர்பிலும் எவரும் இதுவரை கைதாகவில்லை. சிறுபான்மை இனத்தின் மீது பேரினவாதம் எதனையும் செய்யலாம் என்பதையே இவை எடுத்துக்காட்டுகின்றன. எனவே, முஸ்லிம் மக்கள், தமிழ் மக்களோடு ஓரணியில் திரண்டு தமது சுதந்திரத்திற்காகப் போராட முன்வரவேண்டும் - என்றார்.

### வடக்கில்

622 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டுக்கு 577 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

சுகாதாரத் துறைக்கு 2009 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை 5 ஆயிரத்து 421 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டுக்கு 477 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சித் துறைக்கு 2009 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை 5 ஆயிரத்து 97 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டுக்கு 2 ஆயிரத்து 697 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

விவசாயத்துறைக்கு 2009 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை 4 ஆயிரத்து 661 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டுக்கு ஆயிரத்து 610 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

உள்கட்டுமானத்துறைக்கு 2009 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை ஆயிரத்து 710 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டுக்கு 135 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதுவரை மொத்தமாக 27 ஆயிரத்து 243 மில்லியன் ரூபா நிதி வடக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(த-5)

### யாழ்ப்பாணத்தில்

தேசமும், காரைநகர் பிரதேசமும் தலா ஒரு தடவை பாதிக்கப்பட்டுள்ளன. நெடுந்தீவு பிரதேசம் இரண்டு தடவை பாதிக்கப்பட்டுள்ளது. காட்டுத் தீ காரணமாக மணற்காடு பிரதேசம் இரண்டு தடவைகள் பாதிக்கப்பட்டுள்ளது. காரைநகர் பிரதேசத்தில் பனங்கூடல் மற்றும் தென்னங் கூடல் என்பன தீயினால் பாதிக்கப்பட்டுள்ளன.

தீயினால் ஏற்பட்ட பாதிப்புக்களின்போது யாழ்.மாநகர சபையின் தீயணைப்பு பிரிவே காரைநகர் மற்றும் மணற்காட்டுப் பிரதேசங்களிலும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

மினி சூறாவளி காரணமாக மருதங்கேணி பிரதேசம் இரண்டு தடவைகள் பாதிக்கப்பட்டுள்ளது. மின்னல் தாக்கம் கார்ணமாக மருதங்கேணி மற்றும் தெல்லிப்பழை பிரதேசம் என்பன பாதிக்கப்பட்டுள்ளன. தெல்லிப்பழை பிரதேசத்தில் ஏற்பட்ட பாதிப்புக் காரணமாக உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி, வரணி மகா வித்தியாலயம் என்பவற்றில் ஆபத்து விளைவிக்கக் கூடிய நிலையிலிருந்த குளவிக் கூடுகளாலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இதே போன்ற இடர் பாதிப்புக்கள் ஏற்பட்டால் உடனடியாகவே யாழ்.மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவுக்கு தகவல் தெரிவிக்குமாறு இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் ச.ரவி கோரியுள்ளார்.

(த-5)

### காற்றால்

படுத்தித் மீன்பிடிக்கவில்லை. பாரம்பரியமாக இவ்வாறு தான் மீன்பிடிக்கிறார்கள். இழுவை வலைகளை நிறுத்துவதற்கு மீனவர்கள் தயாராக உள்ளனர். அதுவரை பிரச்சினையில்லாமல் மீன்பிடிக்க இலங்கை அரசு விட்டுக்கொடுக்க வேண்டும்.

இனக் கலவரத்தக்கு முன்னால் நெடுந்தீவு, இரணைதீவு, கச்சதீவு போன்ற தீவுகளில் தங்கியிருந்து மீன் பிடித்தோம். இலங்கை மீனவர்களும் இராமேஸ்வரம் பகுதியில் மீன்பிடித்தார்கள்.

இனக்கலவரத்தின் பின்னர் தான் இந்தப்பிரச்சினை உருவானது. இப்போது போர் முடிந்த பின்னர் தான் நாங்கள் தொழிலுக்கு வருகிறோம். நீங்கள் மீன்பிடிக்க வருவதால் மீன்வளம் அழிகிறது என்று சொல்கிறார்கள்.

இந்தியாவில் இழுவைப் படகுகள் தடை செய்யப்படவில்லை. இதனை உடனடியாக நிறுத்த முடியாது. 2004 ஆம் ஆண்டிலிருந்து மீனவர்கள் மட்டத்தில் பேச்சு நடைபெற்றதால் பிரச்சினை தீர்க்கப்படவில்லை. அரச மட்டத்தில் இதற்கு பேச்சு நடத்தி இழுவை வலைகளைப்பயன்படுத்திச் சிறிது காலத்துக்கு மீன்பிடிப்பதற்கும் அனுமதி வழங்க வேண்டும்-என்றார்.

(த-14)

# குற்றங்களும் கைதுகளும்



## மாணவர்களைதாக்கியவர்கள் விளக்கமறியலில்

**கிளிநொச்சி**

பாடசாலை உயர்தர மாணவர்கள் இருவரை பொல்லுகளாலும் கைகளாலும் தாக்கி காயங்கள் ஏற்படுத்தியதுடன் மாணவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளையும் சேதப்படுத்திய இரு நபர்களைக் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றம் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

கடந்த 9ஆம் திகதி அக்கராயன்பகுதியில் மாணவர்கள் தாக்கப்பட்டதையடுத்து அக்கராயன் பொலிசாரினால் கைது செய்யப்பட்ட இரு நபர்களும் நேற்று நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (த–18)

## 2 போத்தல் கசிப்பு வைத்திருந்தவருக்கு 40 ஆயிரம் தண்டம்

**கிளிநொச்சி**

இரண்டு போத்தல் கசிப்பை வைத்திருந்த நபரொருவருக்கு கிளிநொச்சி நீதவான் நீதிமன்றம் நேற்று 40 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துள்ளது.

கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் கடந்த 13ஆம் திகதி இரண்டு போத்தல கசிப்புடன் பொலிசாரால் கைது செய்யப்பட்ட குறித்த நபர் நேற்றுக் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது தனது குற்றத்தை ஒப்புக்கொண் டதையடுத்து மேற்படி தண்டம் விதிக்கப்பட்டது.

குறித்த நபர் முன்னரும் கசிப்புடன் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தால் தண்டம் விதிக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஒரு போத்தல் கசிப்புடன் பொலிசாரால் கைதுசெய்யப்பட்ட நபரொருவருக்கு கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றம் நேற்று 15 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துள்ளது. நேற்று முன் தினம் கிளிநொச்சி குமாரசாமிபுரத்தில் இவர் கைது செய்யப்பட்டார்.(த–18)

## மது போதையில் மோட்டார் சைக்கிள் செலுத்தியோருக்கு அபராதம்

**கிளிநொச்சி**

கிளிநொச்சிப் பகுதியில் மது போதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய மூவருக்கு தலா 7ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன் சாரதி அனுமதிப்பத்திரம் 9 மாத காலத்துக்கு இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிப் பகுதியில் மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய மூவரைக் கைது செய்து அவர்களுக்கு எதிராக வழக்கு பதிவு செய்த கிளிநொச்சிப் பொலிசார் குறித்த மூன்று பேரையும் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றின் நீதிவான் எம்.ஐ.வகாப்தீனிடம் முன்னிலைப்படுத்தியிருந்தனர்.

குறித்த மூவருக்கும் தலா 7ஆயிரத்து 500 ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன் சாரதி அனுமதிப்பத்திரம் 9 மாத காலத்துக்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. (த–55)

## பாலை மரம் கடத்தியவருக்கு 20,000 அபராதம்

**கிளிநொச்சி**

கிளிநொச்சி முட்கொம்பன் பகுதியில் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பாலை மரத் தீராந்திகளை கடத்தியவருக்கு 20ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட் டுள்ளதுடன் மரங்களும் அரசுடமையாக்கப்பட்டுள்ளன.

கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி முட்கொம்பன் பகுதியில் சுமார் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான பாலை மரத் தீராந்திகளை உழவு இயந்திரத்தில் கொண்டு சென்ற சமயம் பூநகரி வட்டார வனவள திணைக்கள அதிகாரி அ.தவனி காசலம், மாவட்ட வனவள திணைக்கள அதிகாரி அ.பிரபாகரன் ஆகியோர் குறித்த சந்தேக நபரைப் பாலை மரக் குற்றிகளுடன் பிடித்து கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர். இதனையடுத்து குறித்த நபருக்கு 20ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள் ளதுடன் மரங்களும் அரசுடமை யாக்கப்பட்டுள்ளன. (த–55)

## வாள் வெட்டில் இளைஞர் காயம்

**வலி.வடக்கு**

ஏழாலைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற வாள்வெட்டில் வீரபத்திரர் கோவிலடி, உடுவிலைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் காயமடைந்து தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஏழாலை மதவடியில் நேற்றுமுன் தினம் இரவு 7 மணியளவில் இடம் பெற்ற வாள் வெட்டில் படுகாய மடைந்த நாகராசா கஜன் (வயது–25) என்பவர் சிகிச்சைக் காக வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டுள்ளார். (த–86)

## போத்தல் குத்தில் ஒருவர் காயம்

**வலி.வடக்கு**

மல்லாகம் பங்களாவடிப் பகு தியில் நேற்று மதியம் இடம் பெற்ற போத் தல் குத்துச் சம்ப வத்தில் தலை, கை, கால் களில் காயங்களுடன் ஒருவர் தெல்லிப்பழை ஆதாரவைத் திய சாலையில் சேர்க்கப்பட் டுள்ளார்.

மல்லாகம்–காங்கேசன்துறை வீதியில் நேற்று பிற்பகல் 2 மணிய ளவில் இடம் பெற்ற இந்தத் தாக்கு தல் சம்பவத்தில் உடுவில் சோமாஸ் தோட்டத் தைச் சேர்ந்த பாஸ்கரன் இளங்குமரன்(வயது–19) என் பவரே படுகாயமடைந் துள்ளார்.

இது குறித்துப் பொலிஸார் விசாரனை மேற்கொண்டுள்ளனர். (த–86)

## சைக்கிள் சில்லு சறுக்கி அம்புலன்சுடன் மோதியதில் தாயும் மகளும் காயம்

**தென்மராட்சி**

சைக்கிள் சில்லு சறுக்கிய தில் வீதியில் சரிந்து அவ் வழியே வந்த அம்புலன் சுடன் மோதியதில் தாயும் மக ளும் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் கடந்த 13 ஆம் திகதி ஏ – 9 வீதியில் இடம்பெற்றது.

சாவகச்சேரி மருத்துவமனை யில் சிகிச்சை பெற்று விட்டு வீடு திரும்பிய போது இந்த சம்பவம் இடம் பெற்றது.

வாகனம் வந்ததால் வீதியோரத்துக்கு சைக் கிளைச் செலுத்திய போது கிரவலில் சில்லு சறுக்கி சரிந்து வீதியில் சென்று கொண்டி ருந்த வரணி மருத்துவ மனை அம்புலன்ஸுடன் மோதி வீழ்ந்ததில் தாய்க்கு கைமுறிந்தது. மகளுக்கு உராய்வு காயம் ஏற்பட்டது.

காயமடைந்தவர்கள் சாவ கச்சேரி மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

மந்துவில் மேற்கைச் சேர்ந்த யுவதாஸ் நிர்மலா (வயது– 40) யுவதாஸ் கஜானா (வயது – 8) ஆகியோரே காயமடைந்தர்களாவார். (த– 9)

## விளக்கமறியல்

**யாழ்ப்பாணம்**

கஞ்சா விற்க முயன்ற நபர் ஒருவரை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

யாழ்.குருநகர் பகுதியில் உள்ள வீடொன்றில், குறித்த நபர் 1 கிராம் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்ததுடன், 900 மில்லி கிராம் கஞ்சாவை விற்க முயன்றுள்ளார்.

யாழ்.சட்டவிரோத தடுப்புப் பிரிவு பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் குறித்த நபர் கடந்த சனிக்கிழமை கைதுசெய்யப்பட்டு, யாழ்.நீதிவான் நீதிமன்றில்" முற்படுத்தப்பட்டார்.

மேற்படி நபரை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதிவான் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (த–106)

# இலங்கையில் நிகழ்ந்தது ஓர் இனப் படுகொலையே

## பிரி. முன்னாள் அமைச்சர் கூறுகிறார்

லண்டன், செப் 16

இலங்கையில் நடைபெற்றது ஓர் இனப்படுகொலையே என பிரிட்டன் முன்னாள் உள் விவகார அமைச்சர் டேவிட் பிளங்கெட் தெரிவித்துள்ளார்.



பிரிட்டன் தமிழர் பேரவையின் உறுப்பினர்களுடனான சந்திப்பின்போதே முன்னாள் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் நடைபெற்ற இனப் படுகொலையின் மீது ஓர் சர்வதேச விசாரணைக்கான மேலதிக அழுத்தத்தைப் பிரிட்டன் ஏற்படுத்த வேண்டுமெனவும், புலம் பெயர் தமிழ் அமைப்புக்களைத் தடை செய்வதன்மூலம் தமிழர்களின் மீது தீவிரவாதப் பட்டத்தைக் கட்டும் இலங்கை அரசின் நடவடிக்கையை எதிர்க்குமாறு கோரவும் பிரிட்டன் தமிழர் பேரவையின் உறுப்பினர்கள் பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் சந்திப்புக்களை ஏற்படுத்தி வருகின்றனர்.

இந்தச் சந்திப்பின்போது கருத்துக்களை வெளியிட்ட முன்னாள் அமைச்சர், இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் மீது ஓர் சர்வதேச சுயாதீன விசாரணை நடாத்தப்பட வேண்டுமென வலியுறுத்தினார். அத்தோடு ஐக்கிய நாடுகள் சபையினால் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கு இலங்கை ஒத்துழைக்காமைக்குத் தமது கண்டனத்தையும் வெளியிட்டார். (த)



காரைதீவு இராம கிருஷ்ண மிஷன் பெண்கள் பாடசாலையில் புதி தாக மறு சீரமைக்கப்பட்ட அன்னை சாரதா ஆலய திறப்புவிழா நேற் றுத் திங்கட்கிழமை காலை அதிபர் செ.மணிமாறன் தலைமையில் நடைபெற்றது. அன்னை சாரதாவின் திருவுருவச்சிலை கண்ணகி அம்மன் ஆலயத்திலிருந்து ஊர்வலமாக பாடசாலைக்கு கொண்டு வரப்பட்டு சாரதா ஆலயத்தில் பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டது. முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் பி.எச்.பிய சேனவும், ஆன்மீக விருந்தினராக இராம கிருஷ்ண மிஷன் மட்டு. மாநில தலைவர் சுவாமி சதுர்புஜானந்தா ஆகியோர் பங்கேற்றனர். (த)

# நீதிபதிகளை நியமிக்கும் அதிகாரத்தில் தலையீடு

## சுயாதீனம் அழிந்துவிடும் என்கிறார் சட்ட நிபுணர்கள் சங்கத் தலைவர்

கொழும்பு, செப்.16

நீதித் துறையிலான நியமனங்கள் திறமை மற்றும் சிரேஷ்ட தன்மைகளின் அடிப்படையில் நடைபெற வேண்டும். அரசியல் காரணங்களின் அடிப்படையில் அவ்வாறான நியமனங்கள் செய்யப்படலாகாது என்று வழக்கறிஞர்கள் சங்கத்தின் (Bar Association) தலைவர் உபுல் ஜயசூரிய கூறினார்.

பாக்கீர் மார்க்கார் நினைவுப் பேருரை நிகழ்த் திய உபுல் ஜயசூரிய சமீப கால மாக நீதித்துறையின் சுதந்தி ரத்தில் தொடர்ச்சியாக தலையீ டுகள் இடம்பெற்று வருவ தைக் கண்டித்தார். அண்மை யில் மேன் முறையீட்டு நீதிமன்றத்துக்கான புதிய தலைவர் நியமிக்கப்பட்ட முறையில் நீதித்துறைக்கு மேலும் ஒரு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்றார்.

அவர் மேலும் பேசுகையில்; அரசியல் நண்பர்களையும் இவ்வாறான பதவிகளுக்கு நியமிக்கப்படக்கூடிய காலகட்டமும் வெகுதூரத்தில் இல்லை அந்தவித கவலை தரும் நாளும் ஏற்கனவே விடியத் தொடங்கி விட்டது. நீதித் துறை சுதந்திரத்தின் பொற் காலம் இத்துடன் முடியப் போகிறது என்றும் கவலை வெளியிட்டார்.

நீதித்துறை நியமனங்களில் தொழில் ரீதியிலான நீதித் துறை அலுவலர்களுக்கு அவர்கள் தமது பணிக்காலம் முழுவதும் நீதியை நிர்வகிப்பதில் கடினமாக உழைத்திருப்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். மதிப்பார்ந்த இவ்வித விதிமுறைகள் மீறப்படும் போது அதன் விளைவு - அதன் தாக்கம்சட்ட ஆட்சியை அழிவை நோக்கி நகர்த்துவதாய் இருக்கும் என்றார். அவர் மேலும் கூறியதாவது;

மேன்முறையீட்டு நீதிமன்றின் தலைவராக புதிய ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பதாக செய்திகள் வந்துள்ளன. சட்டமா அதிபர் திணைக்களத்தில் தகுதி வாய்ந்த அதிகாரியாக அவர் இருந்துள்ளார். அவர் மேலதிக சொலிசிட்டர் ஜெனரலாக மார்ச்சில் நியமிக்கப்பட்டிருந்தார்.

மேன் முறையீட்டு நீதிமன்றின் மிக சிரேஷ்ட நீதிபதியும் 2005 ஆம் ஆண்டு மேலதிக சொலிசிட்டர் ஜெனரலாக பணியாற்றியிருந்தார். மேல் முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாக 2007 ஆம் ஆண்டு அவர் நியமிக்கப்பட்டார். நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் செயற்பாடுகள் தொடர்பான விசாரணையின் போது பிரிந்து தீர்ப்பளிக்கும் அமர்வின் ஒரு நீதிபதியாகவிருந்து நாடாளுமன்ற தெரிவுக்குழு செயற்பாடுகளை இரத்து செய்து தீர்ப்பளித்தார். மேன்முறையீட்டு நீதிமன்றின் தலைவராக வரக்கூடிய அவருக்கு உரித்தான இடம் மறுக்கப்பட்டுள்ளது.

நிறைவேற்று அதிகாரம் இதிலிருந்து எதை விரும்புகிறது. நிறைவேற்று அதிகாரம் விரும்புகிறபடியும் ஆசைப்படுகிறபடியும் தீர்ப்புக்களை வழங்கும் நீதித்துறையினையா? அதைத்தான் நிறைவேற்று அதிகாரம் விரும்புகிறதென்றால் நீதித்துறை என்று ஒன்று அவசியமில்லை என்றார். தொடர்ந்து பேசுகையில்; தேர்தல் ஆணைக்குழு இலஞ்ச ஆணைக்குழு பொதுச் சேவைகள் ஆணைக்குழு மற்றும் பொலிஸ் சேவைகள் அனைத்தும் இரையாக்கப்பட்டுவிட்டன.

அவைகள் இப்போது விரல் அசைவின் மூலம் நிர்வகிக்கப்படுகின்றன. தன்னிச்சை முறையில் நியமனங்கள் இடம்பெறுகின்றன. அவர்கள் நியமனம் செய்யும் அதிகாரிகளுக்கு தலை வணங்கி சேவை செய்யும்படியாக கொடுக்கப்படுகின்றனர். அவர்களுக்கும் வெகுமதிகள் ஆடம்பரமான பணிமனைகள் கிடைப்பதாய் உள்ளது. இவையெல்லாம் மதிப்பார்ந்த அம்சங்களைக் கொண்ட 17 ஆவது திருத்தம் ஒழிக்கப்பட்டு ஒருதலைப்பட்சமாக 18 ஆவது திருத்தம் சேர்த்துக் கொள்ளப்பட்டதன் மூலம் சாத்தியமாகியுள்ளது என்று கூறினார் உபுல் ஜயசூரிய. (ப)

# சீனாவைப் போன்று இலங்கையிலும் ஊழல் எதிர்ப்பு நடவடிக்கை வேண்டும்

## எதிர்க் கட்சித் தலைவர் ரணில் வலியுறுத்து



கொழும்பு,செப்.16
அரசிலுள்ளவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும் கடனாகப் பெற்றுக்கொள்கின்ற மற்றும் செலவு செய்கின்ற ஒவ்வொரு சதத்திற்கும் மக்களுக்குப்பதில்சொல்லும்வகையில் சீனாவில் உள்ளதைப் போன்று ஊழலுக்கு எதிரான நடவடிக்கையை இலங்கை முன்னெடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
சீன ஜனாதிபதி ஸி ஜிங்பிங்குடைய பயணத்தை வரவேற்று நேற்றைய தினம் விடுத்த அறிக்கையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
சீனா அரச கட்டமைப்பில் வெளிப் படைத்தன்மையையும் பொறுப்புக் கூறலையும் ஊக்குவிக்கும் நோக்குடன் தற்போதைய சீன ஜனாதிபதியின் கீழ் எடுக்கப்பட்டுள்ள ஊழலுக்கு எதிரான செயற்திறன்மிக்க நடவடிக்கைகளையும் ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார். (த-சி)

# வெடித்தது குண்டு அல்ல

கொழும்பு,செப்.16
"தம்புள்ளை பள்ளிவாசலில் குண்டுவெடிக்கவில்லை. அங்கு யாரோ பட்டாசு கொளுத்தியுள்ளனர்." - இப்படி தெரிவித்துள்ளார் சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச். எம். பௌஸி.
" தம்புள்ளை பள்ளிவாசல்மீது குண்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என போலிப் பிரசாரம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. அங்கு அவ்வாறு குண்டு வெடிப்புகள் இடம்பெறவில்லை. குறிப்பாக இரண்டு நபர்கள், பள்ளி வாசலில் காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரிடம் மலசலக் கூடம் செல்லவேண்டும் என கோரியுள்ளனர். அதற்கு அனுமதி வழங்கப்பட்ட பின்னரே அங்கு பட்டாசு வெடித்துள்ளது. இந்தச்சம்பவத்தையே குண்டுவெடிப்பு சம்பவம் என்று சிலர் கூறுகின்றனர்.
சிங்கள, முஸ்லிம் மக்களுக்கிடையிலான நல்லுறவை சீர் குலைக்கும் நோக்குடனேயே இவ்வாறான வதந்திகள் பரப்படுகின்றன. வந்தவர்கள் யார் என்பது குறித்துக் கமராவில் தெளிவாகப் பதிவாகவில்லை" என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.
(த-சி)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ராஜினி திரணகம நினைவு தினம்

யாழ்ப்பாணம், செப். 16
யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட உடற்கூற்றியல் துறையின் தலைவராக இருந்த ராஜினி திரணகம கொலை நினைவு தினம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அனுஸ்டிக்கப்படவுள்ளது.
எதிர்வரும் 20ஆம், 21ஆம்திகதிகளில் இந்த நிகழ்வு அனுஸ்டிக்கப்படவுள்ளது. 20ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.30 முதல் நண்பகல் 12.30 மணி வரை ராஜினி திரணகம ஞாபகார்த்தக் கூட்டம் யாழ்.பல்கலைக் கழகம் மருத்துவபீட அரங்கில் நடைபெறவுள்ளதுடன் பிப2மணி முதல் மாலை 4 மணிவரை சமாதானம், ஜனநாயம், ஒத்துழைப்பு என்பவற்றினை முன்னிறுத்திய ஊர்வலம் நடைபெறவுள்ளது.
இந்த ஊர்வலம் திருநெல்வேலிச் சந்தியில் ஆரம்பித்து ஆரியகுளம் வழியாக வீரசிங்கம் மண்டபம் சென்று கூட்டத்துடன் முடித்து வைக்கப்படவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.
தொடர்ந்து 21ஆம்திகதி முற்பகல் 9 மணிக்கு நீதியும், ஜனநாயகமும் மிகுந்த சமூகம் என்ற தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் உரையாடல் களமொன்றும் இடம்பெறவுள்ளது. (த)

# பள்ளியை அகற்ற மாட்டோம்

எந்தவொரு மிரட்டலுக்கும் அடிபணிந்து தாம் பள்ளிவாசலை அகற்றப் போவதில்லை என்று தெரிவித்துள்ள தம்புள்ளை ஹைறியா ஜும்ஆ பள்ளி வாசல் நிர்வாகம், பள்ளிவாசல் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலுக்கு 2012ஆம் ஆண்டு பள்ளிக்குத் தாக்கு தல் நடத்தியவரே காரணம் என்றும் தெரிவித்துள்ளது.
தம்புள்ளை பள்ளி மீது நேற்று நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் தொடர்பில் கருத்துத் தெரிவித்த பள்ளிவாசல் நிர்வாகக் குழு உறுப்பினர் சலீம் தீன் 'உதயனி'டம்தேற்றுத்தெரிவித்தவை வருமாறு:-
தம்புள்ளை ஹைறியா பள்ளி வாசலை அகற்றுவதற்குப் பேரினவாதிகள் 2012ஆம் ஆண்டு முதல் முயற்சி செய்து வருகின்றனர்.
இப்பள்ளிவாசலுக்கு எதிராக 2012 ஆம்ஆண்டு ஆர்ப்பாட்டம் செய்து பள்ளிவாசல் மீது தாக்குதல் நடத்தினர். அன்று தாக்குதல் நடத்தியவர்களே இன்றும் தாக்குதல் நடத்தியுள்ளனர்.
இவர்கள் இவ்வாறு பல தடவைகள் இப்பள்ளிக்கு எதிராகச் செயற்பட்டனர். புனித பூமி என்றொரு புரளியைக் கிளப்பி இந்தப் பள்ளியை அகற்றிவிட முயற்சிசெய்கின்றனர். நாம் உயிருள்ளவரை பள்ளியை விட்டுக் கொடுக்கமாட்டோம்.
பள்ளிவாசல் அல்லாஹ்வின் மாளிகை. அதைப் பாதுகாப்பது அனைத்து முஸ்லிம்களின்கடமை. அந்தக் கடமையை நிறைவேற்றுவதற்காக நாம் துணிந்துநின்று போராடுவோம். எதற்கும் அஞ்சமாட்டோம். - என்றார். (த-சி)

# சீனாவுக்கு நுரைச்சோலையா? அமைச்சரவையில் முடிவில்லை

## இறைமையை இழக்கத் தயாரில்லை என்கிறது அரசு



கொழும்பு,செப்.16
நுரைச்சோலை அனல்மின் உற்பத்தி நிலையத்தை சீனாவிடம் கையளிப்பது தொடர்பில் அமைச்சரவை எத்தகைய முடிவுகளையும் எடுக்கவில்லை என்றும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எவருக்காகவும் இறைமையை விட்டுக்கொடுக்க தாம் தயாரில்லை எனவும் அரசு நேற்று அறிவித்தது.
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முற்பகல் சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது.
இதன்போது, சீனாவுடன் பல வேறு உடன்படிக்கைகளில் அரசு கைச்சாத்திடவுள்ளது. அந்த வகையில் நுரைச்சோலை அனல்மின் நிலையத்தைச் சீன நிறுவனத்துக்கு வழங்கும் வகையில் ஒப்பந்தங்கள் இருப்பதாகக் கூறப்படுகின்றதே என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த மேற்கண்டவாறு கூறினார்.
''நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் மூன்றாம் கட்ட மின் உற்பத்தி செயற்பாடுகளையே சீன ஜனாதிபதி ஆரம்பித்து வைப்பார். மாறாக அதை நிர்வகிக்கும் உரிமை சீன நிறுவனத்துக்கு வழங்கப்படாது. அனல்மின் நிலையத்தை சீன நிறுவனத்துக்கு கையளிப்பது பற்றி அமைச்சரவையோ அல்லது அரசோ எவ்வித முடிவுகளையும் எடுக்கவில்லை.
அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சி காலத்தில் தான் இவ்வாறு உள்நாட்டு நிறுவனங்கள் வெளிநாட்டுக்கு தாரை வார்க்கப்பட்டன. பெற்றோலிய கூட்டுத்தாபனம் முதல் முக்கிய நிறுவனங்கள் வெளி நாடுகளுக்கு வழங்கப்பட்டன " என்றும் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த குறிப்பிட்டார்.
"மேற்படி மின் நிலையப் ப[illegible]கள் நிறைவடைந்ததன் பின்னர், நாட்டில் 365 நாள்கள் வறட்சி ஏற்பட்டால்கூட தடையின்றி மின்சாரம் வழங்கக் கூடியதாக இருக்கும்" என்று இதன்போது அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த சுட்டிக்காட்டினார். (த-சி)

கல்வி மற்றும் தொழில்சார் வழிகாட்டல்
இலவசக் கருத்தரங்கு



"உயர்தரத்தின் பின்னர் மாணவர்களே நீங்கள் செல்லவேண்டிய பாதை....?? "

கொழும்பு மற்றும் கண்டி பிரபல விரிவுரையாளர்களினால் நடாத்தப்படும் இலவசக் கருத்தரங்கு

Mr.Shamri Ahafurdeen
Deputy General Manager - ESOFT / Senior Lecturer

முன்னெடுக்கப்படும் விடயங்கள்
- சவால் மிக்க துறைகளில் காணப்படும் தொழில் வாய்ப்புகள் எவை?
- எமது தகைமைகள், தொழில் துறையில் வெற்றி பெற வழி தேடிக் கொள்வது எவ்வாறு?
- உங்கள் எதிர்காலத்திற்கும், பல்கலைக்கழகக் கல்விக்கும் உறுதியானவை எவை? அவற்றை இனங்காண்பது எவ்வாறு?
- நல்ல தொழில் வாய்ப்பைப் பெற மிகக்குறைந்த தகைமைகள் எவை?
- கற்பித்தல் நிலையமொன்றைத் தெரிவு செய்யும் போது கவனிக்க வேண்டியவை என்ன?

*பதிவுகள் மட்டுப்படுத்தப்பட்டது
பதிவுகளுக்கு: உங்கள் பெயர், முகவரியை
077 309 9 308
அனுப்பி உறுதிசெய்யுங்கள்

17.09.2014
10.00 am

குறிப்பு: மாணவர்களுடன் பெற்றோர்களும் சமுகமளிக்க முடியும்

ESOFT
Shaping Lives, Creating Futures.
ESOFT METRO CAMPUS
No 137, K.K.S Road, Jaffna, Srilanaka
Tel :021 222 4142
Sri Lanka's Largest Higher Education Network

அதிரடியான புதிய வரவுகள்
ஐரோப்பிய நாடான சைப்பிரஸில் படிக்க மாதம் ஒரு லட்சம் வரை உழைக்க. IELTS தேவையே இல்லை O/L போதும்
செங்கன் நாடுகள் சுவிஸ், பிரான்ஸ், நோர்வே, இத்தாலி படிக்க உழைக்க 2 வருட விசா
100% விசா உறுதிப்பாட்டுடன்
அனைத்தும் நிபந்தனைகளுடன். சனி, ஞாயிறு உட்பட 7 நாள்களும் திறந்திருப்போம்.
இறுதித் திகதி 19.09.2014
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
அரச பதிவு -PV82703
முன் மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9016, 021 568 9090
(52310)
(08)



CIMA பிரித்தானிய பிரதிநிதிகளினால்
புதிய பாடத்திட்டம் சம்பந்தமான விபரங்கள் மற்றும் வேலை வாய்ப்புகள் யாழ் மாணவர்களிற்கு வழங்கப்படும் சலுகைகள் பற்றிய விபரங்கள் கலந்துரையாடப்படவுள்ளன. CIMA கற்போர், கற்கவுள்ளோர், பெற்றோர் அனைவரும்பங்குபற்றலாம்.
காலம்: 16(செவ்வாய்) மதியம் 1 மணி இடம்: MCS விரிவுரை மண்டபம்
Best Result, Best Staff CIMA@MCS!
Weekly:Tue12noon Weekend : start sat 9 Am
புதிய பாடத்திட்ட CIMA அனைத்துப்பரீட்சைகளும் இனி இங்கு தோற்றமுடியும்.
MCS யாழ். பல்கலைக்கழகத்திற்கு அருகில்
Listed College & Exam Centre
772395895

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை A/L எழுதிய மாணவர்களுக்கான 3 மாத வார மற்றும் வார இறுதிநாள் SPOKEN ENGLISH பயிற்சிநெறி ஆரம்பம்.
ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்களும் கூட எமது இப்பயிற்சியில் இணைந்து பயிற்சிபெற முடியும்.
வாரநாள் பிரிவுகள் ஆரம்பம் - 22.09.2014
பிரிவு 1. காலை 8.00-10.00 பிரிவு 2.காலை 10.00-12.00
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 20.09.2014
1.காலை 08.00-10.00 2.காலை 10.00-12.00
20 வருட ஆராய்ச்சியின் மூலம் உருவாக்கப்பட்ட எமது பயிற்சியில் இணைவதன் மூலம் 3 மாதங்களில் தமிழ்போல ஆங்கிலம் பேசமுடியாதிருப்பின் முழுப்பணமும் திருப்பிவழங்குவதற்கான உத்தரவாதம்.
SAMSON
Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 621 4567

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.09.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.